கலைக்கதிர்

ஏப்ரல் '55

268
2-55
68

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 ... 1955
MADRAS

படம்: திரு. டி. ஐ. சந்தாமியான்.

உணவு உற்பத்தியின் முன்னணியில் நிற்பவை

DPF பம்புகள்



'DPF' பம்புகளின்
விசேஷ அம்சங்கள்

குறைந்த செலவில்
அதிக தண்ணீர்
★ நீடித்த உழைப்பு
★ நிசப்தமான ஓட்டம்
★ குறைந்தகவனிப்பு

மோட்டாருடன் இணைக்கப்பட்ட DPF பம்பு

பால் 'பேரிங்குகள் பொருத்தப்பட்ட 'DPF' பம்புகள் 2" முதல் 6" வரை எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்.



DPF பெல்ட் டிரைவ் பம்பு

தண்டாயுதபாணி பவுண்டரி லிட்.,

பாப்பநாயக்கன்பாளையம்,
கோயமுத்தூர்.

போன்: 219

தந்தி: மோட்டார்பம்பு.

268
2-55

குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம், கோயமுத்தூர்.
(மேட்டுப்பாளையம் ரோட்)
1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

●

மூலதனம், மானேஜ்மெண்டு, தொழிலாளர்
ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்
சுதேசி நூலையே வாங்குங்கள்

20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது

**குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே
நிர்வாகஸ்தர்களது நோக்கம்.**

●

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்
இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

**கல்வி, தொழில் அனுபவம் நிறைந்தவர்களால்
நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.**

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல
டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்

●

Managing Agents :—
N. APPUSWAMY NAIDU & CO.

Managing Director :—
G. V. MUTHUSWAMY, B. Sc.

இன்ஷ்யூரன்ஸ்

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து

முதலிய இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள், மற்றும் லாபகரமான ஏஜன்சி நிபந்தனைகள் பற்றிய விபரங்களுக்கு எழுதவும்.

பயனீர்

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ் : ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

தந்தி : "PROTECTION" போன் : "121"

"கலைக்கதிர்"

கலையின் களஞ்சியம்

சிந்தனைச் செல்வம்

★ கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்து

★★ கலைநலம் மிக்கது; எழில் மிகப்பெற்றது

★★★ பார்த்தால் படிக்கத் தூண்டும்

★★★★ படித்தபின் பாதுகாக்க எண்ணம் வரும்

ஆண்டுச் சந்தா ஐந்து ரூபாய்

கலைக்கதிர்

பீளமேடு போஸ்டு, கோயமுத்தூர்.

கலைக்கதிர்

மலர்—7 ★ ஏப்ரல் – 1955 ★ இதழ்—4

ஆசிரியர் :

ஜி. ஆர். தாமோதரன்,

B. Sc. Elec., B. Sc. Mech. (Durham), M. I. E. E. (London),
A. M. I. E. (India) M. P.

★

இந்த இதழில் :

மடவன் பாரி	திரு. அ. ச. ஞானசம்பந்தம்	2
மரமாவு	,, நா. கி. நாகராஜன்	7
எரிமலையின் திருவிளையாடல்	,, ம. ரா. பூபதி	10
கோவலன் கனவு	,, மு. அ. சண்முகம்	15
அடிச்சுவடு	,, வே. கோதண்டராமன்	20
வாழ்வும் தாழ்வும்	,, ஸுபேர்	28
வருந்துகிறோம்	... ...	37
'விஞ்ஞானி கேட்ட விண்ணிசை'	,, 'வேலன்'	38
பரவெளிப் பயணம்	,, 'வி. ஞானி'	40
வினாக்களும் விடைகளும்	... ...	44
பொருள் நூல்	,, கி. கண்ணபிரான்	45
செயற்கை மனிதன்	,, ரா. விசாலாட்சி	48
காதல் படும் பாடு	,, தா. ஏ. ஞானமூர்த்தி	51
நீர் வியாதிக்கு ஓர் அருமருந்து	,, வை. நடேசன்	59
உள்ளத்தின் உண்மை	,, T. E. சண்முகம்	60
அவர் காட்டிய வழியில்...	,, 'குரு'	62
நூல் அரங்கு	... ...	63
இது செய்தி	,, ...	68

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை, கதை முதலியவற்றின் கருத்துகட்கு அவற்றை எழுதிய நேயர்களே பொறுப்புடையவர்கள்.

மடவன் பாரி

திரு. அ. ச. ஞானசம்பந்தம், M.A.

அறிவு வழியை மேற்கொண்டு படை திரட்டித் 'தன்வலியும் துணைவலியும் மாற்றான் வலியும் இருள்தீர எண்ணிப்' போர் மேற்கொண்டு வெற்றிபெற்றுப் புகழடைந் தவர்கள் பற்றியும் கண்டோம். புகழ்தேட வேண்டும் என்ற தலையாய விருப்பும் உள்ளே தோன்றும் வெறுப்புணர்ச்சிக்கு வடிவு கொடுக்கும் முயற்சியும் சேர்ந்து போராக வெளிப்பட்டன என்றும் கண் டோம். இவ்வரசர்கள் வாழ்ந்து இன்று இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்த பிறகு கூட இவர்கள் செய்கை போற்றத்தக்கது என்று ஒருதலையாகக் கூறக்கூட வில்லை.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் 'ஆணவமும்' 'மமகார'மும் இயற்கையாக அமைந்துவிடுகின்றன. பல சந்தருப்பங் களில் வேறு வழியாற் கூறினவிடத்தும் ஏற்றுக்கொள்ளாதவர்களை மடக்க இது பயன்படுகிறது. 'இத்துணைப் பெரியவனை நீ இந்தக் காரியம் செய்யலாமா?' என்று கேட்டால் சிலர் திருந்திவிடக் காண்கி றோம். எனவே ஒவ்வொருவனும் தன்னைப் பற்றி ஒரு மதிப்பைத் தானே வகுத்துக் கொண்டுள்ளான் என்று தெரிகிறது. தான் செய்யும் காரியம் தன் மதிப்புக்கு ஏலாதது என்பதை ஒருவர் எடுத்துக்காட்டியவுடன் அச் செயல் செய்வதிலிருந்து விலகிவிடு கிறான். இதிலிருந்து ஒன்றை அறிய முடி கிறது. மனிதனிடத்து அமைந்து கிடக் கும் 'அகங்காரம்' எனப்படும் 'யான்' என் பதையோ 'மமகாரம்' எனப்படும் 'எனது' என்பதையோ தொட்டுவிட்டால் அவன் துள்ளி எழுகிறான். உறங்கிக் கிடக்கும் ஒருவனைத் தொழிற்படுத்த வேண்டு மாயின் இவற்றைத் தூண்டிவிடுவது சிறந்த வழி என்றே படுகிறது.

'யான்' 'எனது' என்பவற்றைத் தூண்டு வதன்மூலம் ஒருவனை நல்லது செய்யவும் தூண்டலாம்; அல்லது செய்யவும் செலுத் தலாம். இவை இரண்டும் தூண்டுபவன் மன நிலையைப் பொறுத்தவை. பழந்தமிழ் அரசர்களின் புகழ் விருப்பம் இவ்வகங்கா ரத்திலிருந்து அரும்பினதே யாகும். அவன் புகழைப் பாடினவர்கள் ஒருவகையில் அம் மன்னனுடைய 'யானுக்கு' இரை இட்ட னர். 'யான்' என்ற மீனுக்குப் 'புகழ்' என் னும் இரையைக் காட்டிலும் சிறந்தது ஒன் றில்லை. அதிலும் 'கவிதை' என்னும் தூண்டிலிற் கோத்த 'புகழ்' என்னும் இரையைக் கண்டு மயங்காத மனிதர்களே மிக மிகக் குறைவாகும்; பழந்தமிழ் மன் னர்களில்பெரும்பான்மையானவர் 'மனிதர்' களே. எனவே அவர்கள் இத்தூண்டிலில் சிக்குண்டதில் வியப்பில்லை. இது கரு தியே போலும் வள்ளுவப் பெருந்தகை 'புகழ்' என்ற அதிகாரத்தை இல்லற வியலின் இறுதி அதிகாரமாக வைத்துப் போனார். மேலே கூறப்பட்ட முறையில் அறத்தைக் கடைப்பிடித்து வாழவேண்டும்

என்று கூறிய ஆசிரியர், மக்கள் இனத்தை மறு முறையும் கூர்ந்து நோக்குகிறார். ஒரு சிலர் பயன் என்ற ஒன்றைக் கண்டால் ஒழிய நன்னெறி ஒழுக மாட்டார்கள். ஆனால் பயன் என்பது இம்மையில் அன்றி மறுமையில்தான் கிடைக்குமெனின் 'அது கிடக்கட்டும்' என்று கூறுகிறவர்களும் இம் மக்கள் தொகுப்பில் உளராகலின் அவர்கள் பொருட்டாகவே 'புகழை'இறுதி அதிகாரமாக வைத்தார் போலும். இந்தத் தூண்டில் பொன்முள்ளாகலின் இல்லறத் தார்க்கே உரியது என்பார்போல இல்லற வியலின் இறுதி அதிகாரமாக வைத்துள் ளார். துறவு நெறி செல்பவர் இப் புகழ் என்னும் வலையில் பட்டால் மீள்வது அரி தன்றோ? 'யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு, உயர்ந்த உலகம் புகும்' (குறள்-346) என்று கூறிய பிறகு துறவிக்குப் புகழ்மேல் ஆசை இருத்தல் முறையன்று. எனவே துறவறத்தில் இவ் வதிகாரத்தை வள்ளுவர் வைக்கவில்லை.

இல்லற வியலில் 'புகழ்' அதிகாரத்தை வைக்கும்பொழுதும் ஆசிரியர் மிகுந்த கவனத்துடன் வைத்துள்ளார் என்பதை முன்பின் பார்த்தால் நன்கு விளங்கும். ஈகை என்ற அதிகாரத்தின் பின்னர் இவ் வதிகாரம் அமைந்துள்ளது நோக்கற் குரியது. அதனை ஒருவேளை மக்கள் கவனியா மல் விட்டுவிடுவார்களோ என்று அஞ்சிப் போலும் ஆசிரியர் புகழ் அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களில் முதல் இரண்டு குறள்களிலும் ஈகை உடையானுக்கே புகழ் உண்டு என நினைவூட்டுகிறார். புகழ் தேடவேண்டும் எனினும் அதற்குப் போரைக் கருவியாகக் கொள்வதை வள்ளு வர் விரும்பி யிருக்க மாட்டார். பிறர்க்குத் தீமை புரிந்து அதனால் புகழ் வருவதாயின் அதனைப் புகழ் என்று கூற ஒருப்பட மாட்டார் 'மறந்தும் பிறன்கேடு சூழற்க' (204) என்று கூறிய பெரியார்.

வள்ளுவர் கருத்து இதுவாயின் பிழை எங்கே நேர்ந்தது? பழந்தமிழ் மன்னர்கள் ஏன் போரைக் கருவியாகக் கொண்டனர்? அறிவை அதிகம் நம்பியதால் ஏற்பட்ட பயன்தான் அது. ஓயாது பிறரைப் பற்றி யும் அவருடைய வலிமை பற்றியும் எண்ணிக்கொண் டிருந்த அம்மன்னர்கள் இப் பிழை செய்வது எளிய காரியம். அதி லும் மன்னராகப் பிறந்த தாங்கள் செய் வன அனைத்தும் சிறந்தவை என்ற எண்ண மும் உடன் தோன்றிவிட்டால் பிறகு கேட்கவும் வேண்டுமா? பெற்ற பயன் இதுதான்.

இந்தப் பாலைவன வாழ்வில் வேறு கருத் துடையவர்களே இருந்ததில்லையா? இல் லாமல் இல்லை. ஆனால் அறிவும், உணர் வும் வளர்க்கப்பட வேண்டிய இவ்வுலகில் அறிவின் துணை கொண்ட இவ்வரசர்கள் கூட்டம் மிகுதி. ஆனால் உணர்வின் துணை கொண்ட மன்னர்கள் கூட்டம் சற்றுக் குறைவு. அறிவைத் துணை கொண்டு உலகை நோக்கும் பொழுது உலகம் வழங்குகிற காட்சியே வேறு; உணர்ச்சி யைத் துணை கொண்டு காணும் பொழுது கிடைக்கும் காட்சியே வேறு. அறிவால் ஆராய்ந்த மன்னன் முதலிற் கண்டது தன்னையும், தன் பெருமையையும் ஆம். அடுத்துக் கண்டது தன்னைப்போன்ற மன் னர்களையும், குடிமக்களையும். ஆனால் அறிவுக்காட்சி அம்மட்டோடு நிற்கவில்லை. அந்த அரசர்களைத் தன்னுடன் ஒப்புமை செய்து பார்த்தது அவர்களுடைய வன் மைக் குறைவை எடுத்துக்காட்டிற்று. தன் அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று எடுத்துக்கூறிற்று. வந்த வாய்ப்பை விடாமல் பயன்படுத்த வேண் டும் என்று சுட்டிக் காட்டிற்று. பிறருடன் தன்னை எடைபோடத் தொடங்கியவுடன் எவ்வாறுயினும் அவர்களினும் தான் மேம் பட்டவன் என்று பிறர் கூறவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. தான் ஆளும் இந்த நிலம் 'பிற மன்னர்கட்கும் பொது' என்ற சொல்லைப் பொறுக்காத ஒரு நிலை வந்துற்றது.

"வையம் காவலர்
வழிமொழிந்து ஒழுகப்
போகம் வேண்டிப்
பொதுச்சொல் பொறாஅது
இடஞ்சிறிது என்னும்
ஊக்கம் துரப்ப"

[புறம்—8]

(பிற அரசர் புகழும்படி இன்பத்தை விரும்பிய வாழ்வை நடத்தாமல், இந்த உலகம் பிற மன்னருக்கும் பொது என்று பிறர் சொல்லும் சொல்லைப் பொறுக்காமல்)

அறிவால் ஆராய்ந்த பொழுது பெற்ற பயன் இதுவாகும்.

உணர்ச்சியால் ஆண்ட பெருமக்களுள் தலையாயவன் பாரி வள்ளல். அறிவை அடக்கிக்கூட உணர்ச்சிக்கு இடந்தந்த பெருமை அப்பெருமகனுக்கே உண்டு. இவ்வளவு தூரம் அறிவை இழந்து உணர்ச்சி வசப்படலாமா? அதிலும் மன்னனாகிய அவன் இவ்வாறு செய்யலாமா? என்றுகூடக் கேட்கப்படலாம். உணர்வை இழந்து அன்பை இழந்து தம்மொடு பொருது மடிகிறவரும் தம்மைப் போன்ற தமிழர் என்பதை மறந்து தமிழ் மண்ணில் தமிழ்க் குருதியைப் பரவவிட்ட நூற்றுக் கணக்கான தமிழ் மன்னர் உணர்ச்சியை விட்டு அறிவின் துணை கொண்டனர். அவர்கள் எதிரில் பாரியும் பாரிபோன்ற ஒரு சிலரும் அறிவை விட்டு உணர்ச்சியைப் பெருக்கி வாழ்ந்தது தவறா? உடை கட்டாத ஊரில் உடையுடுத்தவன் பைத்தியக்காரன் என்பது முதுமொழி. அவ்வாறு கூறுவது சரிதான் என்று கூறும் அறிவு வாதிகள் வேண்டுமானால் பாரியைத் தவறு கூறட்டும். மற்றவர்களனைவரும் பாரியைப் போற்றத்தான் செய்தனர்; செய்கின்றனர்; செய்வர்.

பாரியின் கொடைத்திறத்திற்கு உவமை கூறவந்த புலவர், உலகம் முழுவதும் தேடியும் உவமையைக் காணமுடியாமல் இறுதியில் 'மேகம்' ஒன்றைத்தான் கூறினர். 'என்ன அழகான உவமை! இதைவிடப் பாரியைத் திட்ட வேறு உவமை வேண்டுமா' என்கிறார் அறிவு வாதியார்; மேகம் செய்யும் தொழிலைப்பற்றிப் பரணர் இதோ பாடுகிறார். அதுவும் 'பேகன்' என்ற வள்ளலைப் பற்றிப் பாடும் பொழுதுதான் கூறுகிறார்.

'அறுகுளத்து உகுத்தும்
அகல்வயல் பொழிந்தும்
உறுமிடத்து உதவாது
உவர்நிலம் ஊட்டியும்
வரையா மரபின்
மாரிபோல......... [புறம்–142]

(வற்றிய குளத்திலும் விளைவயலிலும் பெய்து அதனால் நாம் நினைக்கும்படியான பயனை உண்டாக்காமல் களர் நிலத்தில் பொழிந்து எவ்விடத்தும் வரையாத இயல்புடைய மேகம்போல)

இவ்வாறு கொடுப்பதை ஆராயாமல் தருவதை என்னென்று கூறுவது? இது முறையா? பெருமையா? அறந்தானா? இல்லை என்பார் என்க. ஆனால் இவ்வாறு தருவதன் அடிப்படையை உணர்ந்து கொண்டாலன்றிப் பாரியை அறியுமாறு இல்லை.

பாரி போன்றார் ஒரு தனி இனமாவார். ஏனையோருக்கு மனம் வேலை செய்வதைப் போல் இவர்கட்குச் செய்வதில்லை. அறிவாளன் உலகைக் காணும் பொழுது முதலிற் காண்பது தன்னை (அகங்காரம்) என்றும் அடுத்துக் காண்பது தனதை (மமகாரம்) என்றும் கூறினோம். பாரி போன்றார் முதலிற் காண்பது இவற்றையன்று. கூறப்போனால் இறுதியிற்கூட இவற்றைக் காண்பதில்லை அவர்கள். இதுவே வேற்றுமை. இதை உதாரணத்தால் நன்கு அறியலாம். யானும் எனதும் இவர்கள் பார்வையில் வாராமையின் 'புகழ்' என்னும் தூண்டிலில் இவர்கள் சிக்குவதும் இல்லை. யான், எனதை உடைய மீன்கட்குத்தாம் புகழ் என்னும் பொன் தூண்டில். அவற்றிலிருந்து விடுதலை பெற்ற திமிங்கலங்கள் போல்வர் இவ்வள்ளல்கள். 'யான் எனது' அற்றவன் பாரி என்பதைச் சற்று விளங்கக் காணலாம்.

காட்டில் தேரூர்ந்து சென்ற பாரி முல்லைக் கொடி ஒன்று கொழுகொம்பு இல்லாமல் வாடிய துயரைக் கண்டான். கண்டவன் 'ஆறு அறிவு படைத்த' மனிதனுய பாரி. காணப்பட்டது 'ஓர் அறிவு' மட்டும் உடைய ஒரு கொடி. பாரியின் அறிவு வேலை செய்யத் தொடங்கி யிருப்பின் யாது நிகழ்ந்திருக்கும் என்று காணலாம். முதலில் இக்கொடிக்கு ஒரு கொழு கொம்பு தேவை என்று நினைத்திருப்பான். 'எத்தகைய கொம்பு தேவை? சிறிய ஒரு கொம்பு போதுமா, அன்றிப் பெரியதொரு மரம் தேவைப்படுமா? வீட்டிற்குச் சென்றவுடன் ஏவலாளன் ஒருவனை ஏவி நல்லதொரு கொம்பை நடச்சொல்ல வேண்டும்' என்ற முறையில் நினைந்திருப்பான். இன்னுங் கொஞ்சம் அறிவு முதிர்ந்திருந்தால் கீழ்க் காணும் முறையில் அவன் நினைவு ஓடி யிருப்பினும் வியப்படைவதற்கு ஒன்றும் இல்லை; "இது நாம் வளர்க்கும் கொடி யன்று. காட்டில் இயற்கையாக இந்த ஒரு கொடிதானு வளர்கிறது? எத்தனையோ ஆயிரக் கணக்கான கொடிகள் உள. அதிலும் முல்லை மட்டும் என்ன? எத்தனையோ கொடிகள்! இவற்றிற் கெல்லாம் கொழுகொம்பு தேவையா என்று காண்பதுதானு நம்முடைய வேலை? அரசனுக இருக்கும் நமக்கு எவ்வளவு தொல்லைகள்? முறைவேண்டியும் குறை இரந்தும் நம்மிடம் வருபவர்கட்கே தக்க வழிதேட முடியாதபொழுது இந்தக் கொடிக்காகக் கவலைப் படுவது அறிவீனமன்றோ? கிடக்கட்டும். இன்று நான் இந்தக் கொடிக்கு ஒரு கொம்பு நட்டுவிட்டால் நாளை வரும் கொடிகளை யெல்லாம் யார் காப்பாற்றப் போகிருர்கள்? அப்படியே இந்தக் கொடி அழிந்துவிட்டால்தான் என்ன? உலகமா முழுகிவிடும்? செலுத்து தேரை மேலே!" இவ்வாறு நினைக்க அறிவு வாதிக்கே முடியும். ஆனல் பாரி அறிவு வாதி இல்லையே!

பாரி செய்தது யாது? தான் ஓர் அரசன் என்பதையும் எதிரே இருப்பது கேவலம் ஒரு கொடிதான் என்பதையும் அறவே மறந்துவிட்டான். அந்தப் பண்பட்ட உள்ளத்தில், கலை மனத்தில், உலகிலுள்ள உயிரெலாம் ஒன்று என்று கருதும் கருணை உள்ளத்தில் எதிரே முல்லைக் கொடி தெரியவே யில்லை. பின்னர் என்ன தெரிந்தது? கொழுகொம்பின்றி வாடும் ஓர் உயிர் தான் தெரிந்தது. பாரியின் உயிரே ஊசலாடிவிட்டது. கொடி கொம்பில்லாமல் ஆடினதைக் கண்ட கருணை மறவனின் உள்ளம் துடித்தது: உயிர் துடித்தது. ஓர் உயிர் மற்ருேர் உயிரின் வாட்டத்தைக் கண்டுவிட்டது. தன்னுடைய இனமாகிய மற்ருேர் உயிர் வருந்துவதைக் காண்கிறது. "வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் என்னுள்ளம் வருந்திய வருத்தம் நீயே அறிவாய்" என்று பிற்காலத்தில் ஒரு கருணை உள்ளம் (இராமலிங்க வள்ளலார்) பேசிற்று. பாரி இக் காட்சியில் தன்னை மறந்து, தன்னிலையை மறந்து, அறிவிழந்து, 'கூர்த்த அறிவெல்லாம் கொள்ளை கொடுத்து'— வருந்தும் கொடியுடன் உணர்வின் உதவியால் ஒன்ருகிவிட்டான். பாரியின் இந்த நிலையைக் கற்பனைசெய்து கொண்டுதான் ஆசிரியர்

"அறிவினுல் ஆகுவது
உண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்ருக்
கடை" [குறள்: 315]

என்று பாடினுர் போலும். அந்த ஓரறிவுயிர் தன்னுடைய துயரை நம்போன்றவர் காதாறக் கேட்கும்படி வாய்விட்டுக் கூற வில்லை. முல்லைப் பூக்கள் பற்கள் போல் இருப்பினும், வாய்விட்டு ஒன்று வேண்டும் என்று கேட்பது உயிர்போகும் நேரத்திற் கூட இழிந்த செயலாகலின் கேட்கவில்லை போலும். அது தமிழ் நாட்டு முல்லைக் கொடியன்றோ? ஆனுல் எதிரில் நிற்பவனும் ஒரு தமிழ் மகன் அல்லனோ? எனவே வாய் திறந்து கேட்பதன் முன்னரே

தருவதுதான் முறை என்று கருதித் தந்து விட்டான். எதனைத் தந்தான்? தன் பெருமைக்கேற்பத் தன் தேரையே தந்து விட்டான். வேறு ஆராய நேரம் ஏது? அறிவின் துணை கொண்டு ஆராய்ந்திருப்பின் பாரியாக முடியாதன்றோ? உணர்ச்சி உலகத்தில் வாழும் அந்தக் கருணை வள்ளலுக்குத் தனக்கும் கொடிக்கும் தேருக்கும் உள்ள வேறுபாடு எங்கே தெரியப் போகிறது? தான் நடந்து செல்ல முடியும். ஆனால் கொடி பற்றிப் படரக் கொம்பு வேண்டும். கொம்பின் வேலையைத் தேரும் செய்யும். எனவே தேரை நிறுத்தி விட்டான்.

விலையுயர்ந்த அந்தத் தேர் முல்லைக் கொடிக்குத் தேவை இன்று; அரசனாகிய அவனுக்கு மிகவும் இன்றியமையாதது என்று கருதினானா? அரசனுக்குப் பயன்படும் தேரைத் தேவையற்ற முல்லைக் கொடிக்குப் பயன்படுத்தியது அறிவுடைய செயலா? இல்லை. ஆகலாற்றான் அவனை அறியாமையுடையவன் என்று புலவர்கள் பாடினார்கள். 'மடவன் பாரி' என்று கூறி மகிழ்ந்தார்கள்.

இத்தகைய செயலால் பாரி புகழ் பெற்றானா இல்லையா? பெற்றான்; அழியாப் புகழைப் பெற்றான்.

> "பூத்தலை அறாப்
> புனைகொடி முல்லை
> நாத்தழும்பு இருப்பப்
> பாடாது ஆயினும்
> கறங்குமணி நெடுந்தேர்
> கொள்கெனக் கொடுத்த
> பரந்தோங்கு சிறப்பிற்
> பாரி........"
>
> [புறம்: 200]

என்று கபிலராலும்,

'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பார் இலை'(திருப்புகலூர்த் தேவாரம்) என்று இறைவனை யன்றி மக்களைப் பாடாத சுந்தரமூர்த்தி நாயனாராலும்

> 'முல்லைக்குத் தேரும்
> மயிலுக்குப் போர்வையும்
> தொல்லை அளித்தாரைக்
> கேட்டு அறிதும்''
>
> [பழமொழி-361]

என்று பழமொழி யாசிரியராலும் போற்றப் பட்டான். போர் வெறியர்களின் புகழ் பரந்ததைக் காட்டிலும் இவனுடைய புகழ் ஓங்கி வளர்ந்தது உண்மை. 'அலக்ஸான்டர்' 'செங்கிஸ்கான்' என்பவர்களுடன் ஒப்பு நோக்கக் 'கரிகாலன்' 'நெடுஞ்செழியன்' முதலானோர் வெற்றிப் புகழ் மங்கி விடுகிறது. ஆனால் யாருடன் ஒப்பு நோக்கினும் பாரியின் புகழ் மங்குமாறு இல்லை. காரணம் அவர்கள் புகழை வேட்டையாடிச் சென்றனர். ஆனால், புகழோ, அவர்களை விட்டுவிட்டுத் தன்னைப்பற்றிக் கவலை கொள்ளாமல் உள்ளத் துறவால் உயிர்கள் அனைத்தும் ஒன்றென்று கருதி வாழ்ந்த பாரியைத் தான் வேட்டை ஆடிச் சென்றது. புகழை வேட்டையாடிய அவர்களினும் புகழால் வேட்டை ஆடப்பெற்ற பாரி அறிவைவிட உணர்வு வாழ்வே சிறந்ததென்பதை உலகுக்கு அறிவிக்கும் கலங்கரை விளக்காக நிற்கிறான்.

—ஞ—

மரமாவு

திரு. நா. கி. நாகராஜன், M.A.

கடந்த சில ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் நாடெங்கும் மரம் நடு விழாக் கொண்டாடினோம். காடுகளின் பெருமையை உணராது, முன்யோசனையின்றி அவற்றை அழிக்க முற்பட்டதன் விளைவாகப் பல தொல்லைகள் நேர்ந்திருக்கின்றன. இவ்வியற்கைச் செல்வத்தைச் சரிவரப் பாதுகாத்துப் பயன்படுத்தவேண்டும் என்ற உணர்ச்சி வளரவே அரசாங்கம் இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்து வருகிறது. காடுகளைப் பேணி வளர்ப்பதோடு காடு தரும் செல்வத்தைச் சரிவரப் பயன்படுத்தவும் நாம் அறியவேண்டும். ஜெர்மனி, நார்வே, ஸ்வீடன் ஆகிய ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், கனடாவிலும் காட்டுப் பொருள்களைச் சற்றும் வீணாக்காது பயன்படுத்தும் முறைகளை விரிவாக ஆராய்ந்து வருகிறார்கள். மரவேலைத் தொழிலில் கழிவுப் பொருள்களாகக் கிடைப்பனவற்றைப் புதிய வழிகளில் பயனாக்கும் முறைகள் பலவற்றை அங்கு வகுத்திருக்கிறார்கள்.

கழிவாக வீணாகும் சிறு சக்கைகளையும், மரத்தூளையும், இத்தகைய வேறு பொருள்களையும் பயன்படுத்திப் பெறும் புதுப் பொருள்களில் மரமாவு (Wood Flour) என்பதும் ஒன்று. இப்பொருள் கோதுமை மாவைப்போல் நுண்ணியதாகவும், இலேசான பழுப்பு நிறங் கொண்டதாகவும் இருக்கும். இது பல வேறு தொழில்களில் பயனாகிறது.

எல்லா மரங்களிலிருந்தும் தொழில்களில் பயன்பட ஏற்ற மாவைத் தயாரிக்க இயலாது. ஏனெனில் அம்மாவு இலேசானதாகவும், மென்மை யானதாகவும் இருக்க வேண்டும். அதில் நிறப் பொருள்கள் குறைவாக இருப்பதோடு, அது ஈரத்தை எளிதில் ஈர்க்கும் தன்மை வாய்ந்ததாகவும் இருத்தல் அவசியம். ஆகையால், கனமான மரவகைகளும், அதிகமான நிறமுள்ளவைகளும் மாவு தயாரிக்க ஏற்றவையல்ல. பிசினும், பிறபொருள்களைக் கறைப்படுத்தும் ரசாயனப் பொருள்களும் அதில் குறைவாக இருக்கவேண்டும். ஆகையால், நம் நாட்டு மரவகைகளில் புன்கை, பலா, பனை, ஜாதி முதலிய சில வகைகளே மாவு தயாரிக்க ஏற்றவை எனலாம்.

மரவேலைத் தொழிலின் கழிவுகள் மாவு தயாரிக்க மூலப் பொருள்களாகின்றன என்றேன். ஆகையால் மரத்தூளும், சிறு சக்கைகளும் முக்கியமான மூலப் பொருள்களாகும். வேலைக்குத் தகுதியற்ற மரத் துண்டங்கள், வேர், அடிமரம் முதலிய

வையும் மூலப் பொருள்களாகப் பயனுகக் கூடும். அவற்றைக் கொண்டு மாவு தயாரிப்பதாக இருந்தால், முதலில் அதைச் சிறு துண்டங்களாக வெட்டிக் கொள்ள வேண்டும். மாவைத் தூயநிலையில் பெற வேண்டுமானுல், அவற்றிலுள்ள பட்டையையும், வேறு அசுத்தங்களையும் அறவே அகற்றிவிடவேண்டும். இது அவ்வளவு எளிதான செயலன்று. இதன் பின்னர், அவற்றை உலர்த்தி அவற்றிலுள்ள ஈரம் 10- சதவிகிதத்துக்கும் அதிகமாக இல்லாமல் செய்யவேண்டும்.

இவ்வாறு தயாரித்த மூலப் பொருளை மாவாக அரைக்கும் எந்திரம் ' பொடிக்கும் எந்திரம் ' எனப்படும். இதில் பலவகையுண்டு. இவற்றுள் பழையது, நம் வீடுகளில் மாவரைக்கப் பயனுகும் கல் எந்திரத்தை யொத்தது. வட்ட வடிவான இரு பெரிய கற்களுக்கிடையே மூலப் பொருள் மாவாக அரைக்கப்படுகிறது. மின்சாரத்தையோ, எண்ணெய் எஞ்சினையோ கொண்டு இதை இயக்கலாம். எந்திரம் சூடேறினுல், மாவு தீப்பிடித்து விபத்து நேரலாம். இதைத் தவிர்க்க, அதன் கற்களிடையே அவ்வப்போது சிறிது நீராவியைப் பீச்சுவார்கள். அமெரிக்கா நீங்கலான மற்றெல்லா நாடுகளிலும், இவ்வகை எந்திரமே இன்னும் அதிகமாகப் பயனுகிவருகிறது.

சிதைக்கும் எந்திரம் (Attrition Machine) என்ற வகை, இதைவிடத் திறமையுடன் இயங்க வல்லது. இதில், கூர்மையான பல மேடு பள்ளங்கொண்ட இரண்டு உலோகத் தட்டுக்கள் எதிரான திசைகளில் சுழன்று மாவு அரைக்கும் அடி எந்திரம் (Beateo Machine) என்ற எந்திரத்தில். உலோகத்தாலானதொரு பெட்டிக்குள், தடித்த சுத்தியல்களைப் போன்ற உறுப்புக்கள் பல கொண்ட தடியொன்று வேகமாகச் சுழன்று, பொருளை நொறுக்கித் தூளாக்கும். எந்தவகை எந்திரத்தைப் பயனுக்கினுலும், அதைத் தக்கபடி சரிபடுத்தி, தூளின் மென்மையைக் கட்டுப்படுத்தலாம்.

பொடிக்கும் எந்திரத்திலிருந்து வரும் மாவின் மென்மை ஒரே சீராக இராது. பலவேறு அளவுள்ள துகள்கள் அதில் கலந்திருக்கும். ஆகையால் அவற்றை மென்மைக் கேற்றவாறு பகுக்கவேண்டும். எந்திரச் சல்லடைகளில் சலித்து அவற்றைப் பிரிக்கலாம். ஆனுல். இதைவிடச் சிறந்த முறையொன்று தற்காலத்தில் பயனுகிறது. மாவின் வழியே காற்றைச் செலுத்தினுல், காற்றேட்டத்தின் வேகத்திற் கேற்ப, குறிப்பிட்டதோர் அளவுள்ள துகள்களை மட்டுமே அது அடித்துச் செல்லும். ஆகையால் இந்த வேகத்தைச் சரிப்படுத்தி, வெவ்வேறு அளவுள்ள துகள்களைத் திருத்த மாகப் பிரித்துவிடலாம்.

மரமாவு நூற்றுக்கும் அதிகமான தொழில்களில் பயன்படுகிறதென்று அமெரிக்க வர்த்தக இலாகா அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கண்டிருந்தது. அவற்றுள் முக்கியமானவற்றை மட்டும் இங்குக் குறிப்பிடலாம்.

வேறு பல பொருள்களின் தயாரிப்பில் இதை ஒரு நிலுவையாகப் (Filler) பயன்படுத்துகிறுர்கள். விலை அதிகமான மற்றப் பொருள்களுடன், மலிவான மரமாவைக் கலப்பதால், தயாரிக்கும் பொருளின் விலை குறைகிறது. மேலும், இது அப்பொருளின் பண்புகளை மாற்றியமைக்கவும் சில சமயங்களில் உதவுகிறது. உலகில் உற்பத்தியாகும் மரமாவில் சுமார் அரைப்பங்கு இவ் வகையில் பயன்படுகிறது. மரமாவை இவ்வாறு பயன்படுத்தும் தொழில்களில் எண்ணெய்க் கித்தான் (Linoleum) உற்பத்தி முக்கியமானது. மற்றப் பொருள்களுடன் இதைக் கலப்பதால் அவற்றின் பருமன் அதிகமாவதோடு,

துணியில் பூசப்படும் கலவையிலுள்ள நிறப் பொருள்கள் அதில் சீராக ஏறவும் இது உதவுகிறது.

பிளாஸ்டிக் தொழிலிலும் மரமாவு ஏராளமாகப் பயன்படுகிறது. மரமாவுக் கலப்பினுல் பிளாஸ்டிக்கில் பல நல்லியல்புகள் தோன்றுகின்றன. அதன் வலிமை அதிகமாகிறது; அது எளிதில் உடைவதில்லை; வானிலை மாறுதல்களால் அது உருமாறுவதில்லை. சரிவர ஏருத சாயங்களை அதில் நிலைநிறுத்தவும் இது உதவுகிறது.

ஒட்டுப் பலகை (Plywood) முதலியவற்றின் தயாரிப்பில் பயன்படும் பிசின்களிலும் மரமாவை நிரவையாகச் சேர்க்கிருர்கள். இதனுல் பிசினின் திறமை அதிகமாகிறது. உலோகப் பொருள்களை வார்க்கும்போது, இதை உருகிய உலோகத்துடன் சேர்ப்பதால், உலோகம் எளிதில் பாய்ந்து, வார்ப்புக்குள் சீராகப் பரவ இது உதவுகிறது. பீங்கான் தயாரிப்பில் களிமண் கலவையுடன் இதைச் சேர்த்துவிட்டால் இதனுலான பொருளைச் சூளையில் சுடும்போது மரமாவு எரிந்துபோய், அது இருந்த இடங்களில் எண்ணிறந்த நுண் தொளைகள் தோன்றும். இதனுல் பீங்கான் பொருளின் எடை குறையும். வர்ணங்கள், வர்ண ஓடுகள், வர்ணக் கற்கள், அட்டைகள் முதலியவற்றிலும் இதைப் பயன்படுத்துவதால் பொருளின் தோற்றமும், நிறமும் பெரிதும் திருந்துகின்றன.

மரமாவு திரவப் பொருள்களை உறிஞ்சும் திறனுள்ளதாகையால், டைனமைட்டு (Dynamite) என்ற வெடிமருந்தின் தயாரிப்புக்குப் பெரிதும் பயனுகிறது. வெடி மருந்து தானுகவே வெடித்து அபாயம் விளைவிக்காமல் தடைசெய்ய, முன்னர் அதில் ஒரு வகைக் களிமண்ணைக் கலந்து வந்தார்கள். இதைவிட மரமாவே சிறந்தது என்று கண்டபின் இதையே இப்போது பெரும்பாலும் பயன்படுத்துகிருர்கள். திரவப் பொருள்களை இது சீராக ஈர்த்து வைப்பதோடு, வெடிமருந்து வெடிக்கும்போது இதுவும் எரிந்து, அதன் வலிமையைப் பெருக்குகிறது.

மென்மையான சில பொருள்களுக்கு மெருகூட்டவும் மரமாவு பயன்படுகிறது. மென்மயிர் (Fur) ஆடைகளைத் தூய்மையாக்கவும், வெள்ளி, தங்கம் முதலிய பொருள்களுக்கு மெருகூட்டவும் இதைப் பயன்படுத்துகிருர்கள். மரமாவு கலந்த சிறப்பு சவர்க்காரங்கள் இத்தகைய வேலைகளுக்கெனவே தயாரிக்கப்படுகின்றன. மலிவானதான இதன் தனிப்பட்ட பண்புகள் இதைப் பல தொழில்களில் இன்றியமையாத பொருளாக்கிவிட்டன.

—ஞ—

தமிழகத்தின் அறிவுப் பணி முன்னணியில் முன்னிற்பது

↓

கலைக்கதிர்

ஆண்டுச் சந்தா ரூ 5-0-0

விவரங்கட்கு:

கலைக்கதிர் — பீளமேடு — கோவை.

எரிமலையின் திருவிளையாடல்

திரு ம. ரா. பூபதி, B. A. (Hons.)

கிழக்கு இந்தியத் தீவுகளில் ஒரு கூட்டம் ஃபிலிப்பைன்ச். அதன் தென் கோடியில் உள்ள 'மிண்டனுவோ' தீவுக்கு வடக்கே ஆறுகல் தொலைவில் 'கேமிகின்' என்ற சிறு தீவு இருக்கிறது. இங்குள்ள அழகான எரிமலைக்கு "இபாஃகிபாக்", அஃதாவது, "வெப்பக் கொதிப்பு" என்று பெயர். பழங்காலத்தில் இந்த எரிமலையும், இஃதுள்ள தீவும் சேர்ந்து, "கேமிகின்" என்று அழைக்கப்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த திரு. எடுவார்ட் சூவெஸ் (Eduard Suess) என்னும் நில இயல் வல்லுநர், இக் கேமிகின் கி. பி. 1871-ஆம் ஆண்டில் பிறந்தது என்று குறித்துள்ளார். கடலுக்கு அடியில் எரிமலைகள் அடிக்கடி வெடித்ததால் இத் தீவு உண்டானது என்பது அவர் கருத்து. தற்காலத்தில் 1948, 1950, 1951 ஆகிய ஆண்டுகளில்கூட எரிமலைப் புரட்சிகள் ஏற்பட்டுள்ளன.

என்றாலும், 1951-ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 4-ஆம் நாளன்று, நிகழ்ந்த எரிமலைப் புரட்சிதான் உலகின் உணர்வைப் பெரிதும் கவர்ந்தது. ஏறக்குறைய ஆயிரம் பேர் அப்போது உயிர் இழந்தனர். அத் தீவில், மகிழ்ச்சியில் மூழ்கி வாழ்ந்த மக்களில் பெரும்பான்மையோர், பிறந்து வளர்ந்த தாயகத்தை விட்டு, வெளியேறிச் சென்றனர். 1951-ல் நடைபெற்ற நிகழ்ச்சி, வெடிப்பு எரிமலைக்கு இணையற்ற எடுத்துக்காட்டு. கற்பாறைகளும், வெப்பப் பொடியும், நொய்தான துகளும் தீவின் பல பகுதிகளை மூடி, அதனைப் புதுமை உறச் செய்தன. இந்த நிகழ்ச்சி, உலகில் இதுவரை நிகழ்ந்த இதைப்போன்ற எல்லா நிகழ்ச்சிகளையும் நம் நினைவுக்குக் கொண்டுவருகிறது.

வையத்தில் உள்ள எரிமலைகள் எல்லாவற்றையும், மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

"வைய எரிமலைகள் எல்லாம் வகுத்துரைப்பின்
மெய்யாய் மூன் றுமெனலாம்
மேதினியில்— கைகாட்டிக்
கண்குவளை காட்டிக் கடவுளடித் தொண்டர்க்கும்
விண்ணின்பம் நல்கும்பெண் ணே."

அம் மூன்று வகையாவன: 1. வெடிக்கும் எரிமலை (The explosive type) 2. பொழியும் எரிமலை (The flowing or effusive type) 3. வெடித்துப் பொழியும் எரிமலை (The part explosive and part effusive type).

இவற்றுள் முதல் பிரிவான வெடிக்கும் எரிமலை, ஒரு விநோதமான நிகழ்ச்சியை உடையது. இத்தகைய எரிமலைகள் அடிக்கடி "படீர் படீர்" என வெடித்து நாட்டையே நடுங்கவைக்கும்; சூடேறிக்

கொதிக்கும் நீர் ஆவியும், அதைப் போன்ற வேறு ''காச்''களும் (gases) நிலத்தின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு மேல் நோக்கிப்பாயும். ஆனால், இத்தகைய திடீர் நிகழ்ச்சிகளில், எரிமலைக் குழம்பைக் காண முடியாது. ஆவிப் பொருள்களே வெளியே தள்ளப்படும்.

"இடியும் நடுங்கி, எதிர் நில்லா(து) ஓடும்
படியே, வெடிமுழக்கிப், பாரைப்-பிடி நடையால்
அன்னு(ம் ஒ)ரு பெண்ணே! பல் ஆவிகளைத்
தூள்களோடு
தள்ளுவதே முன்வகைத் தாம்."

இரண்டாவது வகையான பொழியும் எரிமலை, முன் சொன்ன வெடிப்பு எரிமலையிலிருந்து, மிகவும் வேறுபட்டது. இவ்வகை எரிமலையில், வெடிப்பொலி அவ்வளவாக எழாது. எரிமலையின் வாய் திறந்தவுடன், நிலத்தின் ஆழத்தில் இருந்து, எரிமலைக் குழம்புகளும், உருகி வழியும் பாறைகளும் பீறிட்டு வெளியேறும். இவ்வகை எரிமலையிலிருந்தும், வெப்ப மிக்க நீர் ஆவியும், வேறு பல ''காச்''களும், வெளிக்கிளம்புமாயினும், சூடேறிய துகள்களைக் காண முடியாது. வெடிக்கும் எரிமலையிலேயே இத் துகள் வெளிப்பட்டுச் சுற்றிலும் படியும்.

"குழம்பாய் உருகிக் குலைந்தபல் பாறை
மழைபோல் நிலமிருந்து மால்வரை
வாய் பாய்ந்(து) இழிதல்
வெண்ணடையால் வாங்கி உயிர்
கண்ணால் களியூட்டும்
பெண்ணே வகை இரண்(டு)என் பார்."

மூன்றும் வகை வெடித்துப் பொழியும் எரிமலை. இவ்வகை எரிமலை வெடிக்கும் எரிமலையைப்போல், வெடி முழக்கத்துடன் சூடான துகள்களையும் வெளிக் கொணர்ந்து படியவைக்கும். பொழியும் எரிமலையைப் போல், வெப்ப மிக்க பாறைக் குழம்புகளையும், வெளியே பொழியவைக்கும். ஆகவே தான், இவ்வகை எரிமலைக்கு ''வெடித்துப் பொழியும் எரிமலை'' என்ற பெயரை விஞ்ஞானியர் சூட்டியுள்ளனர். இத்தாலி நாட்டில் உள்ள ''வெசுவியச்'' மலை வெடித்துப் பொழியும் மலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டு.

''வெப்பத் துகளை வெடிமலை போல் பெய்வித்தும்
இப்பார்மேல் பாறைக் குழம்பை வழிவித்தும்,
ஓங்கெரி வீங்குமலை ஒன்றித் திலகைபாய்!
ஈங்குவகை மூன்றென்பார் கேள்."

1883-ஆம் ஆண்டில் வெடித்த ''காரக்கடோவா'' எரிமலை வெடிக்கும் எரிமலைக்கு உயர்ந்த எடுத்துக்காட்டு எனலாம். காரக்கடோவா என்பது ஓர் எரிமலைத் தீவு. கிழக்கு இந்தியத் தீவுக் கூட்டங்களில் சாவாவுக்கும், போர்னியோவுக்கும் இடையில் 15 கல் அகலம் உள்ள சுந்தா நீர் எதிர்ப்பாட்டில் (Straight of Sunda) காரக்கடோவாத்தீவு அமைந்துள்ளது. 1883-ஆம் ஆண்டுக்குமுன், அத் தீவின் பரப்பு ஏறக்குறைய 30 சதுரக் கல் (Square miles) இருந்தது. அவ்வாண்டு ஆகச்ட் திங்கள் 26, 27-ஆம் நாட்களில் அத்தீவே வெடித்து விட்டது என்று சொல்லலாம்! ஏறக் குறைய பத்துப் பருமக் கல் (10 cubic miles) அளவுப் பாறைத் துகள்களை வான வெளியில் தூக்கி எறிந்தது; இவ் வெடிப்பின் விளைவாக, அத் தீவின் மூன்றில் ஒரு பங்கு மறைந்துவிட்டது.

இந்த வெடிப்பினால் உண்டான பேரொலி, வானத்தையே அதிர வைத்தது; மூவாயிரம் கற்களுக்கு அப்பாலும் இந்த முழக்கம் ஒலித்தது! குமரி முனையில் இந்தப் பெரு வெடிப்புத் தோன்றியிருக்குமானால், திராவிடத்தின் பெரும்பகுதி கடலில் மறைவதோடு, வான் பேர் இமயத்தின் பனிமுடிகளையும் பாழ்படுத்தி உயரத்தைக் குறைத்திருக்கும்!

மேற்கு இந்தியத் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த மார்ட்டினிக் தீவில் உள்ள பெலீ எரிமலையில் (Mount Pelee) 1902-ஆம் ஆண்டு, மே திங்கள் 8-ஆம் நாளன்று தோன்றிய வெடிப்புத்தான், எண்ணற்ற

உயிர்களைக் கொள்ளை கொள்ளும் செயலில், இணையற்று விளங்கியது. இம் மலைக் குத்தென் மேற்கில் நிலம் நொய்தாக, மென்னிலமாக இருக்கின்றது. இதனால், எரிமலை வெடிப்பால் ஏற்பட்ட அழிவாற்றல், நேரே செய்ன்ட் பியர் (St. Pierre) என்ற துறைமுகத்தை நோக்கிப் பாய்ந்துவிட்டது.

அன்று காலை 8-மணி இருக்கும்; எரிமலையின் அருகே தோன்றிய ஒரு பெரிய வெடியொலி வானத்தைப் பிளந்தது; வெப்பமிக்க ஆவிகளும், புகையும் மண்ணும் விண்ணையும் இணைத்தன. எங்கும் ஒரே கறுப்பு! ஒரே இருள்! மினிட்டுக்கு (Minute) ஒரு கல் என்ற வேகத்தில் விரைந்து பரந்த துகள் படலம், சில செகண்டுகளுக்குள் (Seconds) செய்ண்ட் பியர் நகர உயிர்களையெல்லாம் ஏப்பமிட்டு விட்டது! அந் நகரில் வாழ்ந்தோர் 2,500 பேர். 2,500 பேரில் எஞ்சி நின்றோர் இருவர்! நங்கூரம் பாய்ச்சிய கலங்களும், கடலில் ஓடிய கலங்களும் தவிடுபொடியாயின!

"அம்மா! அம் மா! எனவே ஆர்த்(து)அலறி
ஓலமிட்டு
இம்மே தினிஉயிர்கள் எல்லாம் இறந்(து)ஒழிய
வெம்பொடியை வீசிய ஓர்வெற்புப்
பெலீயைப் போன்(று)
இம்மண் வெடிமலை ஒன்(று) இல்."

கடலில் ஊர்ந்த கலங்களில் ஓர் இரு கலங்கள் தப்பிப் பிழைத்தன. அவற்றில் பயணம் செய்யும் நற்பேறு பெற்றவரே, செயின்ட் பியர் நகரம் அழிவுற்ற கொடிய காட்சியைக் காணும் தீப்பேறும் பெற்றனர்; அவர்கள் மூலம் தான் இவ் அழிவுச் செய்கை உலகுக்கு எட்டியது. அந்நகரில் இறந்தவர் சவங்களை மருத்துவர் ஆராய்ந்தனர்; வெடிமலை வீசிய பொடியும், வெப்பம் மிக்க ஆவிகளும் கலந்த காற்றை உள்ளுக்கு இழுத்து, அவர்கள் மாண்டதாக அறிந்தனர்.

இத்தாலியில் உள்ள வெசுவியச் எரிமலையும், மேற்கூறிய மலையைப் போன்றே, பழங் காலத்தில் ஒரு பேரழிவை உண்டாக்கி இருக்கின்றது. கி. பி. 79-ல் நிகழ்ந்த இப் பேரழிவைப் பிளினி (Pliny) என்ற சிறந்த எழுத்தாளர் வர்ணித் திருக்கிறார். அது வரை, அவ் வெசுவியசின் அடிப்புறத்தில் பாம்பே, எர்க்குலேனியம் என்ற அழகான நகரங்கள் நின்று அழகு செய்தன. கி. பி. 79-ல் வெசுவியச் வெடிக்கத் தொடங்கியதும், இவை இத்தாலியின் மொகஞ்சதரோ, ஆரப்பாக்களாகி விட்டன!

பாம்பே, எர்க்குலேனிய நகரங்களில் வாழ்ந்தவர்கள், இம்மாதிரி வெசுவியச் என்றேனும் வெடித்துத் தம்மை யெல்லாம் விழுங்கும் என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல், கவலையற்றுக் களிப்பில் மிதந்து வாழ்ந்தனர்! இப்பேரழிவின் முதல் அறிகுறி 16 ஆண்டுகளுக்கு முன், கி. பி. 63-ல் தோன்றியது. அவ் வாண்டு பிப்ரவரித் திங்கள் 5-ஆம் நாள், நில நடுக்கம் ஒன்று ஏற்பட்டது. இதனால் பாம்பே, எர்க்குலேனியம், அருகிருந்த பல நகரங்கள் ஆகியவற்றில் வாழ்ந்த மக்கள் பலர் உயிர் இழந்தனர்; நகர்களும் பாழாயின; வெருண்டனர் மக்கள்; வெறுத்தனர் நகரை; வேறிடம் நோக்கிப் புறப்பட முனைந்தனர். ஆனால், வெசுவியசின்மேல் படர்ந்திருந்த திராட்சைக் கொடிகளின் பசுமைக் காட்சி, அவர்களைப் போகவிடவில்லை; அவையே காலன் கயிறாக இருந்தன என்பதை அவர்கள் உணரவில்லை; பாம்பேயையும், எர்க்குலேனியத்தையும் புதுப்பித்து மீண்டும் அழகு நகர் ஆக்கினர்; மகிழ்வோடு வாழ்ந்தனர், எரிமலையை மறந்து.

கி. பி. 79-ஆம் ஆண்டு ஆகச்டுத் திங்கள் 25-ஆம் நாள் ..... கிழிந்தது வெசுவியசின் வாய்; அதிர்ந்தது காற்று; நடுங்கியது நிலம்! உடைந்தது மக்கள் உள்ளம்; வெடி மேல் வெடி! இடிமேல் இடி! நீராவி மேகமும், வேறு காச்களின் (gases) படலமும் வானை முட்டிப் பரந்தன; வெப்பத் துகள் எங்கும் விரிந்தது! உரு அழகுடையாள், உள்ள நஞ்சுடையாள், வேசி! வெசுவியச்

வெளியேற்றிய துகளும் வேசி! உருஅழகு மிக்கது; சன்னமானது; உட்கொண்டாலோ உயிரைக் குடிப்பது!

எரிமலை வாயிலிருந்து எழுந்து பரந்த புகையும், தீயும், துகளும், நேபில்ச் நகர் (Naples) வரை தெரிந்தன. கண்டான் பிளீனி, உரோமாபுரியின் கப்பல் படைத் தலைவன்! கலம் ஒன்றில் தாவினன்; புறப் பட்டான் வெசுவியசின் அழகுக் காட்சியை அருகிருந்து காண. ஆராய! வேசிமலை சென்றவன் உடல் நலன் இழப்பான்; வெசு வியசை நெருங்கிய பிளீனி உயிரையே இழந்தான்!

"உள்ளக் களிப்பூட்டி, நல்லுயிரைக்
கொள்ளை கொள்
கள்ளமன வேசி வெசுவியசை-மெல்லவே
கண்டுவரச் சென்றபிளீனி கடி(து) இறந்தான்
பெண்டு விழை காமுகர்க் கோர் காட்டு!"

பிளீனி இறந்ததும் அவன் ஒன்றுவிட்ட தம்பி இளம் பிளீனி (Pliny the younger) தன் தமையன் எப்படி எரிமலைத் துகளை உள்ளிழுத்து மாண்டான் என்பதை விவ ரித்து "டாசிடச்" (Tacitus) மன்னனுக்கு ஒரு கடிதம் வரைந்தான்.

வெசுவியசிலிருந்து வெளிப்பட்ட நீரா விப் புயல் வானத்தில் ஒன்றுதிரண்டு, செறிவுற்றுக் கொதிக்கும் வெப்ப மிக்க மழையாகப் பொழிந்து,நச்சுத் துகளை யெல் லாம் நிலப்பரப்பின்மீது அடித்துச் சென் றது. அதனல் உண்டான வெப்பச் சேறும், நச்சுத் துகளும் சேர்ந்து, எல்லா உயிர்களை யும் அழித்தன. பாம்பே, எர்க்குலேனியம் இன்னும் வெசுவியசின் அடியிலிருந்த வேறு ஊர்கள் அனைத்தும் நச்சுத் துகளால் மூடப்பட்டு நாசமாயின. உரோமன் ஆட்சி கவிழ்ந்தபின், நெடுங்காலம் வரை மறக் கப்பட்ட இந் நகரங்கள், தற்காலத்தில் தான் தோண்டி ஆராயப் படுகின்றன.

இரண்டாம் வகையைச் சேர்ந்த பொழி யும் எரிமலைகள் "இலாவா" (lava)எனப் படும் "பாசால்ட்"(basalt)அனல் குழம்பை மேலுக்குக் கொண்டுவந்து பொழியும்; இக் குழம்பு பொதுவாகக் குளிர்ந்து திண்மை பெறுவதற்கு முன், பலகல் தொலைவு ஓடிக் கொண்டே இருக்கும். இத்தகைய குழம் புகள் ஓர் எரிமலையி லிருந்து அடிக்கடி வெளியேறினல், சிறிது சிறிதாகக் காலப் போக்கில், அகன்ற தட்டையான உச்சி களை உண்டாக்கி விடும். மலையின் சரிவு தரைமட்டத்தி லிருந்து, சுமார் 8°யில்தான் உயர்ந்துகொண்டு போகும். இத்தாழ்வான மலை உச்சிகள் பழங்காலப் போர் வீரர் பயன்படுத்திய தோல் படை (shield) போன்று காணப்படும். ஆகவே இவற்றைத் "தோல்படை எரிமலைகள்" (shield volca- noes) என்று நிலநூல் வல்லுநர் கூறுவர்.'

இத்தகைய பெரிய எரிமலை ஒன்று பசி பிக் பெருங்கடலில் இருக்கின்றது. இஃது உலகிலேயே பெரியது. கடலின் அடியி லிருந்து 30,000 அடித் தொலைவு எழுந்து நிற்கின்றது. கடல்மட்டம் வரை அதன் உயரம் 16,000 அடி; இதுதான் அவாய்த் தீவு (Island of Hawaii); இதில் உள்ள எரி உச்சியின் பெயர் "மாவ்ன லோவா" (Mauna loa).

கோடிக் கணக்கான ஆண்டுகளாக இங்கு"இலாவா"வழிந்து, ஆறிக் குளிர்ந்த காரணத்தால், அவாய்த் தீவும், அதைச் சுற்றியுள்ள சிறு தீவுகளும் தோன்றியுள் ளன. ஒவ்வொரு தீவும் ஓர் எரிமலை என்றே இயம்ப வேண்டும்.

"கனல்குழம்பு கக்கும் கனவரை
ஒன்(று) உண்டேல்
புனல்ஆழி உள்ளும் புதுத் தீ(வு)ஒன்(று)
உண்டாம்; நல்
சாந்தமணம் வீசும் தளிர்மேனி யாய்! அவாய்
சான்(று) என்று சாற்றிடலாம் நன்று."

இப் பகுதியில் தற்போது "மாவ்ன லோவா" சிகரத்தைத் தவிர, வேறு எந்த உச்சியும் கனல் குழம்பைக் கக்குவதில்லை.

மாவ்ணு லோவாவின் எரிவாய்க்குத் தென் கிழக்கில், ஏறக்குறைய 20 கல் தொலை வில், ''கிலாயே'' (Kilauea) என்று ஓர் எரி மலை உச்சி இருக்கின்றது. இது 1790, 1924-ஆம் ஆண்டுகளில்கூட எரிமலைக் குழம்பைக் கக்கி இருக்கிறது.

மலைகள் இங்ஙனம் திடீரென வெடிப்ப தற்கும், நச்சுத் துகளை வீசுவதற்கும், கனல் குழம்பை வாரி இரைப்பதற்கும் கார ணம் என்ன? அவற்றின் வழியே நீராவி எப்படி வெளிப்படுகிறது? நீராவி உண் டாக நீர் வேண்டும்; உலகம் உருவான நாளில் உண்டான நீர், நிலத்தின் வயிற் றுக்குள் அடங்கி இருக்கிறது என்றும், அதுவே எரிமலையிலிருந்து நீராவி வெளி வரக் காரணம் ஆகிறது என்றும் ஒரு சாரார் கூறுவர்; நிலத்தின் மேல் பகுதி யின் இடையில் நிறைந்துள்ள தண்ணீரே வெப்பத்தால் ஆவியாக்கப்பட்டு வெளி யேறுகிறது என்பர் மற்றொரு சாரார். இவ் விருவகை நீர்களில் எந்நீர் ஆவியாகமாறி, எரிமலை வாய்கள் வழியே வருகின்றது என்பது இன்னும் நில நூல் வல்லார்க்கு உறுதியாகத் தெரியவில்லை. வெவ்வேறு வேளைகளில், வெவ்வேறு இடங்களில், இருவகை நீருமே ஆவியாக மாறி வெளி வரக்கூடும். 1902-ஆம் ஆண்டில் பெலீ மலையிலிருந்து உண்டான நீராவி, நிலத் தின் மேல் பகுதிக்கு இடையில் உள்ள நீராலேயே உண்டாயிருக்கவேண்டும் என் பது விஞ்ஞானியரின் ஆராய்ச்சி முடிவு.

நீராவிக்கு வேண்டிய வெப்பம் எங்கி ருந்து கிடைக்கிறது? இருநூறு கோடி ஆண்டுகளுக்கும் மேலாகப் பூமியின் நடு விடத்தில் அடங்கிச் சிறிது சிறிதாக வெளியேறும் வெப்பமே நீரை ஆவியாக மாற்றுகின்றது. ஆகவே, இப் பெருவெப் பமே நிலத்தில் தோன்றும் எரிமலை வெடிப் புக்களுக்கும், அவை கக்கும் கனல் குழம் புக்கும், வீசும் நச்சுப் பொடிக்கும் இறுதிக் காரணம் ஆகின்றது.

—இ—

எங்களுக்கு முதன்முதல் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. எங்கள் மகிழ்ச்சிக்கு அளவில்லை. நாங்கள் கடைக்குச் சென்று புதிய தள்ளுவண்டி வாங்கினோம். குழந்தையை அவ்வண்டிக் குள் வைத்து மிக்க பெருமிதத்தோடு நந்தவனத்திற்குள் தள்ளிக் கொண்டு சென்றோம். அங்குள்ள மக்கள் அனைவரும் எங்கள் பக்கமாகத் திரும்பி புன்முறுவல் பூத்து ஒருவருக் கொருவர் மெல்லப் பேசிக்கொண்டனர். எங்களுடைய குழந்தையைத் தான் அவர்கள் எல்லோரும் பாராட்டிப் பேசிக்கொள்கின்றனர் என நாங்கள் நினைந்து மகிழ்ந்தோம். வீட்டிற்குச் சென்றதும் அத் தள்ளுவண்டியின் முன்புறத்தில் பின்வருமாறு எழுதியிருந் ததை நாங்கள் கண்டோம்; ''உலகத்திலேயே உயர்தரமானது இவ்வண்டி'' எங்கள் மனநிலை எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்!

—கேத்தரின் மில்ஸ்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கோவலன் கனவு

திரு. மு. அ. சண்முகம், M. A., B. Sc.,

கோவலன் இரவில் வழி நடக்கவேண்டியதன் காரணம் இதுவாயின், அதனை ஏன் கவுந்தியடிகளிடம் வெளிப்படையாகக் கூற வில்லை? அப்பொழுது அதனை மறைத்து, வேறு காரணங்கள் கூறுவானேன்? அப்பொழுது மறைத்த நிகழ்ச்சியொன்றை இப்பொழுது கூறுவானேன்? அப்பொழுதே கவுந்தியடிகளிடம் கனவினைக் கூறி, மனவமைதி நாடி இருக்கலாமல்லவா?

கண்ணகியும் அறிய இக்கனவை எவ்வாறு கூறுவது என்று கோவலன் தயங்கியிருக்கலாம். கொடிய பாலைவனம் வழியாக நடந்து, துவண்டு வருந்தும் கண்ணகியின் உள்ளத்தை, இக்கனவையும் கூறி மேலும் துன்புறுத்த வேண்டாம் என்று கோவலன் நினைத்திருக்கலாம். வெந்த புண்ணில் வேல்கொண்டு பாய்ச்சியதாக வன்றோ முடியும்? எனவே, கண்ணகி இல்லாத பொழுதொன்றைக் கோவலன் எதிர் நோக்கியிருக்க வேண்டும். கவுந்தியடிகளும், கண்ணகியும் பெரும்பாலும் உடன் உறைந்தே வந்தனர். கண்ணகிக்குக் கவுந்தியடிகளைத் துணையாக வைத்துக் கோவலன் தனியாகச் செல்வான். மதுரைப் பயணத்தின் போது, இவ்வாறு கோவலன் பிரிந்து சென்ற இடங்கள் மூன்றை இளங்கோவடிகள் கூறுகிறார். கண்ணகி கவுந்தியடிகளையும் கோவலனையும் பிரிந்து, தனியாகச் சென்றிருக்க முடியாதல்லவா? கண்ணகிக்குக் கோவலன் அல்லது கவுந்தியடிகள் துணையாக அமைந்தனரே ஒழிய, கவுந்தியடிகள் யாருடைய துணையையும் நாடவில்லை. எனவே கோவலன் கவுந்தியடிகளிடம் கனவினைக் கூறுவதற்குக் கண்ணகி இல்லாத பொழுதொன்றை இறுதிவரையிலும் பெறவில்லை போலும்! இப்பொழுது கண்ணகி சமணப் பள்ளியில் பாதுகாவலான இடமொன்றில் தங்குகிறாள். அங்கு எத்தகைய துன்பமும் நிகழ்வதற்கு இடமில்லை. கவுந்தியடிகள் போன்ற எத்தனையோ பெண் துறவியர் அப்பள்ளியில் இருந்திருக்கலாம். கவுந்தியடிகளும், கோவலன் கண்ணகி இருவரையும் மதுரைக்கு அனுப்பிய பின்பு அப்பள்ளியிலேயே தங்கிவிடுகிறார். எனவே, கோவலன் தனது கனவைக் கவுந்தியடிகளுக்கும் மாடலனுக்கும் கூறிய பொழுது, கண்ணகி அங்கு இல்லை என்றே கருதவேண்டும். இம்மூவருடைய உரையாடல்களில் கண்ணகி கலந்துகொள்ளவில்லை. கனவைக் கேட்ட கண்ணகி, அங்கு அஞ்சியதாகவும் ஆசிரியர் கூறவில்லை. தான் அதிகம் பழகி அறியாத மாடலன், ஒரு ஆண்மகன் முன்னிலையில், கண்ணகியைப் போன்ற அடக்கமும், அமைதியும் நிறைந்த பெண் நிற்பாள் என்று எதிர்பார்க்க முடியுமா?

கோவலன் கனவினைக் கூறியபொழுது, கண்ணகி மறுமொழி கூறியதாகவோ அல்லது அஞ்சியதாகவோ ஆசிரியர் கூறாமையே கண்ணகி அப்பொழுது அங்கில்லை என்பதைக் காட்டும். அன்றியும், கண்ணகி கோவலன் கண்ட இக்கனவை எங்கும் சுட்டிக் கூறவில்லை. கண்ணகி கொலை

யுண்ட கோவலனைக் கண்டாள். கோவலன் அவளை 'இருந்தைக்க' எனக் கூறி விண்ணுலகடைந்தான். கண்ணகி அப்பொழுது இந்நிகழ்ச்சிகளை யெல்லாம் முன்னரே அவளுக்கு அறிவுறுத்திய கனவொன்றை நினைத்தாள். ஆனால், முந்திய நாளில், கோவலன் கூறிய கனவினை அவள் நினைக்கவில்லை; இரண்டு மாதங்களுக்கு முன்பு, புகாரில் தான்கண்ட கனவை நினைத்தாள். கோவலன் கனவு அவளுக்குத் தெரிந்திருந்தால், முந்திய நாள் நிகழ்ந்த இக்கனவையன்றோ அவள் நினைத்திருக்க வேண்டும். "இடருற்ற தீக்கனா நின்றுள் நினைந்தாள்" என்கிறார் ஆசிரியர். இங்கு எந்தக் கனவென்று ஆசிரியர் விதந்துகூற வில்லை. தீக்கனாவென்று பொதுவாகக் கூறுகிறார். கோவலன் கண்ணகி இருவரும் கண்ட கனாக்கள் தீக்கனாக்களே. இவற்றில் கண்ணகி நினைத்ததாக எதனைக் கூறுவது? இதனை முடிவு செய்வதற்கு இவ்வடிகளுக்கு முன்பின் நிகழும் நிகழ்ச்சிகளைக் காணவேண்டும். "தீவேந்தன் தனைக் கண்டு திறங்கேட்பல்" என்றாள். "இடருற்ற தீக்கனா நின்றுள் நினைந்தாள்." சென்றாள் அரசன் செழுங்கோயில் வாயில் முன்." எனவே, கண்ணகியை அரசன் முன்னிலையில் சென்று நீதி கேட்கும்படித் தூண்டியது அவள் நினைத்துக்கொண்ட கனவு. கோவலன் கனவில் இந்நிகழ்ச்சியைத் தூண்டுதற்குரிய செய்தி எதுவும் இல்லை. கண்ணகி, தான் அரசன் முன்னிலையில் சென்று முறை கேட்டதாகக் கனவு கண்டிருந்தாள். ஆகவே கண்ணகி நினைந்தது புகார் நகரில் தான் கண்ட கனவே யாதல் வேண்டும். உரையாசிரியர் இருவரும் கண்ணகி புகாரில் கண்ட கனவையே கருதினர், "இடருற்ற தீக்கனா வென்றது, முன்பு தான்கண்டு, தேவந்திக்குச் சொன்ன கனவினை" என்பது அரும் பதவுரையாசிரியரின் விளக்கம். "எழுந்தவள் தன்னூரிற் கண்ட தீக்கனவை நின்று நினைந்தாள்" என்பது அடியார்க்கு நல்லாரின் விளக்கம்.

எனவே கோவலன் கண்ட கனவு கண்ணகிக்குத் தெரியாது. கோவலன், கண்ணகி அதனை அறியாதவாறு மறைத்தே வைத்தான்; கனவினைக் கவுந்தியடிகளுக்குக் கூறுவதற்குக் கண்ணகி இல்லாத பொழுதொன்றை எதிர்பார்த்திருந்தான், அது இப்பொழுதுதான் கிடைத்தது. எனவே கனவினைக் கவுந்தியடிகளுக்குக் கூறிவிடுகிறான்.

அன்றியும், கோவலன் மாதவியோடு தான் உறைந்த வாழ்க்கையைக் கவுந்தியடிகள் அறியாதவாறு இதுவரையிலும் மறைத்தே வந்தான். (இக்கருத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடுகளில் Annamalai University Journals வெளிவந்த "கவுந்தியடிகள்" என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையில் விளக்கியுள்ளேன்.) கோவலன் தன் கனவில் மாதவி மணிமேகலையைப் போதி அறவோன் முன்பு கொடுத்ததாகக் கண்டான். கனவைக் கூறினால், இதனையும் கூறவேண்டுமே என்று கோவலன் அஞ்சினான் போலும்! ஆனால் மாடலன் இப்பொழுது கோவலனுடைய சிறப்புக்களை விளக்கும் முறையில் கோவலன் மாதவியின் வீட்டில் வாழ்ந்த பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றை விளக்கமாகக் கூறிவிட்டான். இனிமேலும் மாதவியோடு வாழ்ந்த வாழ்க்கையைக் கவுந்தியடிகளுக்குத் தெரியாதவாறு மறைக்க இயலுமா? அதனால் பயன் ஒன்றுமில்லை. மாடலன், கவுந்தியடிகளும் உடனிருக்கவே அந்நிகழ்ச்சியைக் கூறினான். எனவே, கோவலன் துணிந்து கனவினைக் கூறிவிட்டான். கவுந்தியடிகளுக்குத் தன் வாழ்க்கையின் இப்பகுதி தெரியுமாயின், அவர் தன்னை மதியார் என்பதைக் கோவலன் உணர்ந்திருத்தல் வேண்டும். அவ்வுணர்ச்சியும் அவ்வளவாகப் பொய்த்துவிட வில்லை. அந்நிகழ்ச்சியைக் கேட்டதும், கவுந்தியடிகளுக்குக் கோவலனிடம் கொண்ட அன்பு தளர்வுற்றிருக்க

வேண்டும். அவ்வன்பின் தளர்ச்சியே கோவலனுக்கு எத்தகைய ஆறுதல் மொழிகளும் கூருது. அவனே விரைவில் பள்ளியைத் துறந்து சென்றுவிடுமாறு கவுந்தியடிகளைக்கூறத் தூண்டி விட்டது. கவுந்தியடிகள் விருப்பு வெறுப்பற்ற ஞானியாகி விடவில்லை. இவ்வுலகப் பற்று அவர்களையும் ஓரளவு வாட்டிற்று. அன்றியும் அவர் துறவு வாழ்க்கையில் அளவு கடந்த பற்றுள்ளம் கொண்டவர். இல்லற வாழ்க்கையையே இகழ்ந்து கூறும் இயல்புள்ளவர். இத்தகையவர் பரத்தையர் வாழ்க்கையை வெறுக்காதிருக்க முடியுமா? அப்பரத்தையரோடு வாழ்ந்த கோவலனை அவர் விரும்பமுடியுமா? எனவே இப்பொழுது தான் கோவலன் அடைந்த இத்துயரத்தின் உண்மைக் காரணத்தை உணர்ந்தார் கவுந்தியடிகள். உணர்ந்தவரது உள்ளம், அதனையே நினைவில் கொள்வதாயிற்று. இதுவரையிலும் உணராத ஒன்றைத் திடீரென்று உணர்ந்துவிட்டாரல்லவா? அவர் உள்ளம் அதிலேயே ஊன்றி நின்றதில் வியப்பில்லை. உரையாடலின் போக்கையே மறந்தார். எனவே கோவலனுக்கு ஆறுதல் கூற, அவர் மறந்தார். இத்தகையோன் இனிமேலும் பள்ளியில் தங்குதல் தகாதென நினைத்தார் போலும்! கோவலனைப் பற்றிய தீவினை பள்ளியையும் பற்றி வருத்துதல் ஆகாதென அஞ்சினரோ? உடனே பள்ளியைவிட்டுப் போய்விடும்படி கூறினர். இல்லறத்தார் இரவில் பள்ளியில் தங்குதல் ஆகாதென்பது உண்மையே. ஆனல் கோவலனுக்கு எத்தகைய ஆறுதல் மொழிகளும் கூருது துரத்தியதே நமது உள்ளத்தில் இவ்வையப்பாடுகளை எழுப்புகின்றது. கவுந்தியடிகள் கோவலனிடம் கொண்ட அன்பு சிதையலாம். ஆனல் கண்ணகியைக் கவுந்தியடிகளால் வெறுக்கமுடியுமா? பெண் இனமல்லவா? இதனலேயே கண்ணகியிடம் கவுந்தியடிகளின் அன்பும், இரக்கமும் மேலும் பெருகுவதாயின.

புறஞ்சேரியை அடைந்ததும், கோவலன் தனியாக மதுரை சென்று கண்டுவர விழைந்தான். ஊர்காண் காதையில், மதுரையைக் காணச் செல்வதற்கு முன்பு கோவலன் கவுந்தியடிகளிடம் தான் நெறியின் நீங்கியோர் நீர்மையோனுகி அலைந்ததாகவும், அதன் பயனை இப்பொழுது இவ்வேற்று நாட்டிடைக் கண்ணகியுடன் சென்று அனுபவிப்பதாகவும் கூறினன். அப்பொழுது கோவலன் ''நெறியின் நீங்கியோர் நீர்மையேனுகி'' என்று கூறியதன் உண்மைப் பொருளைக் கவுந்தியடிகள் உணரவில்லை; இப்பொழுதுதான் உணர்ந்தார். கோவலனும் தான் அடைய நினைத்த மதுரையை அடைந்துவிட்ட பின்பும், உற்சாகமிழந்து, மனச் சோர்வுடையவனுகக் கவுந்தியடிகளிடம் இவ்வாறு கூறியதற்குக் கனவைப் பற்றிய அவனுடைய எண்ணமே காரணமாதல் வேண்டும். அன்றியும் மதுரை நகர் சென்று, தன் குலத்தவர் உறையும் இருக்கையை அறிந்து வருவதாகக் கூறிச் சென்றுன். ஆனல் மதுரை நகர் முற்றிலும் சுற்றியலைந்தும், தன் குலத்தவர் உறையும் இருப்பிடத்தை அவன் நாடிச் சென்றதாகத் தெரியவில்லை. அதற்கு அவன் எத்தகைய முயற்சியும் எடுத்துக் கொள்ளவு மில்லை. அவர்கள் இருக்கும் இடத்தை அறிந்திருந்தால், கவுந்தியடிகள், கண்ணகியையும் கோவலனையும் மாதரியிடம் அடைக்கலமாகக் கொடுத்திருக்க மாட்டார். கொடுக்கும் பொழுதும், ''கோவலனுடைய குலத்தவர் இவர்களுடைய வருகையை அறிந்தால் அரும்பொருள் பெற்றதே போல எதிரேற்றுக் கொள்வர். அதுவரையிலும் தாய் போல இவர்களைக் காத்தல் வேண்டும்,'' என்று கூறி இருக்கவும் மாட்டார். ஆயர் பாடியில் சென்று உறைந்த பின்பும், கோவலன் தன் குலத்தவரை நாடிச் செல்லவில்லை. நேராகச் சிலம்பினை விற்கச் சென்றுவிட்டான். குலத்தவரிடம் சென்றிருந்தால், கதைப்போக்கே மாறியிருக்கும்

அல்லவா ? அப்பொழுது கோவலன் பொற் கொல்லன் கையில் சிக்குவானு ? அவர்கள் கோவலனே நல்ல முறையில் பாதுகாத்து இருப்பர். அன்றியும் இந்த ஏழ்மையான நிலேயில், அவர்களைச் சென்று காணக் கோவலன் நாணமடைந்திருக்க லாம். அது எவ்வாருயினும், உறவினர் கண்டு வருவேன் என்று கூறிச் சென்ற வன் அவர்களேக் காண எத்தகைய முயற்சி யும் செய்யாது, திரும்பி வருவானேன் ? கவுந்தியடிகளும், ''வருந்தாதேகி மன்னவன் கூடற் பொருந்துழி யறிந்து போதீங்கு'' என்று கூறியே மதுரைக்கு அனுப்பி வைக்கிருர். வையங்காவலர் மகிழ்தரு வீதி, எண்ணெண் கலேயோர் இருபெரு வீதி, கூலங்குவித்த கூலவீதி, பால்வேறு தெரிந்த நால்வேறு தெரு, அந்தி, சதுக்கம், ஆவணவீதி, மன்றம், கவலே, மறுகு இங்கெல்லாம் அலேந்து திரிந்து மதுரையைக் காண்கின்ற கோவ லன், தான் வந்த நோக்கத்தை மறந்தானு? அல்லது வேண்டுமென்றே பொய்யாக ஒரு காரணத்தைக் கூறிக் கொண்டு இவ்வாறு வந்தானு ? எப்படியும் மதுரையினுள்ளே அன்றே செல்லப் போகிருன். மதுரை நகரினுள்ளே சென்ற பின்பு மதுரையைச் சென்று பார்க்கலாமே? மேலும் ஒரு நாள் பொறுத்துக் கொள்ளுதல் ஆகாதா? மது ரைமா நகரைக் காணவேண்டும் என்பதே அவனுடைய பெரு விருப்பமாயின், கண் ணகிக்கும் அத்தகைய விருப்பம் இருந் திருக்குமே? அவளேயும் உடன் அழைத்துச் சென்று காட்டுத லாகாதா ? அவளேப் பள்ளியில் வைத்துவிட்டுத் தான் தனி யாகச் செல்வானேன்?

கோவலன் உண்மையில் மதுரையில் உறைகின்ற தன் உறவினர்களேக்காண வேண்டும் என்ற நோக்கத்தோடு மதுரை நகரினுள்ளே செல்லவில்லே. கோவலன் கனவினேக் கண்டு ஒன்பது நாட்களாகின் றன. மதுரைமா நகரில் தான் இறக்கப்போ வதை ஒருவாறு நன்கு உணர்ந்து விட்டான். இல்லேயாஞல், கனவினேக் கூறிய பின்பு, ''கடிது ஈங்கு உறும்'' என்று துணிந்து கூற முடியாதல்லவா? இவ்வாறு துணிந்து கூறியவன், கனவின் பயனே எந்நேரமும் எதிர் நோக்கியே இருந்திருக்கவேண்டும். திருவாங்கச் சாரணர் விதியின் போக்கை எவ்வளவு முயன்ருலும் தடுக்க முடியாது என்று கூறியதையும் கோவலன் நன் குணர்ந்திருக்க வேண்டும். எனவே இவ் வாறு, தனது எதிர்காலத்தை ஓரளவு நன்கு உணர்ந்திருந்த கோவலன் தன் உறவினர் களேக் கண்டு, அவர்களோடு உட னுறைந்து, அவர்களுக்கும் துன்பத்தைக் கொடுக்க ஒருக்காலும் விரும்பியிருக்க மாட்டான். ஆகையால் கோவலன் 'உறவி னர்களேக் கண்டுவருகிறேன்' என்று கூறிச் சென்றது, ஒரு பொய்யுரையே யாகும். ஒரு வேளே தன் இறுதி நாள் நெருங்கி விட்டதை நன்குணர்ந்த கோவலன், அதனே எதிரேற்று மதுரையினுள்ளே சென்ருன் போலும் ! அக்கொலேயைக் கண்ணகி உட னிருக்கக் கோவலன் அனுபவிக்க விரும்ப வில்லே. கண்ணகி இப்பொழுது மிகவும் பாதுகாவலான இடமொன்றில் அமர்ந் திருக்கிருள். புறஞ்சேரியில் சமணப்பள்ளி யில் கவுந்தியடிகளின் காவலில் கண்ணகி இப்பொழுது தங்குகிருள். கவுந்தியடிக ளிடம் ''தொன்னகர் மருங்கின் மன்னர் பின்ஞேர்க் – கென்னிலே யுணர்த்தி யான் வருங்காறும் – பாதக்காப்பினள் பைந் தொடி'' எனக் கண்ணகியின் பொறுப்பைக் கவுந்தியடிகளிடம் ஒப்படைத்து விடுகி ருன். காடுகாண் காதையில் தண்ணீர் கொண்டுவரக் கோவலன் தனியே சென்ற பொழுதாவது (11—116–160), புறஞ்சேரி யிறுத்த காதையில் (13—40–41) காலேக் கடன்களே முடித்தற் பொருட்டுக் கவுந்தி யடிகளேயும், கண்ணகியையும் பிரிந்து சென்றபொழுதாவது கோவலன் கண்ண கியைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கவுந்தி யடிகளிடம் ஒப்படைத்து இவ்வாறு கூற வில்லே; ஆனல், இங்கு அவள் சமணப்

பள்ளியில் மிகவும் பாதுகாவலான இடத்தில் அமர்ந்திருப்பினும், கண்ணகியைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கவுந்தியடிகளிடம் ஒப்படைக்கின்றான்.

கோவலன் கண்ட கனவில் கண்ணகியுடனேயே தான் விண்ணுலகடைந்ததாகக் கண்டான். எனினும் கண்ணகியை அவன் பாதுகாக்க விரும்பினான். அவள் துன்பமடைவதைக் கோவலன் விரும்புவானா? அன்றியும், இறுதி நாட்களில் ஏற்படுகின்ற கோவலன் விருப்பம் இது. தான் இறந்து விட்டாலும், கண்ணகியாவது உயிருடன் வாழ மாட்டாளா என்று எண்ணினான்; விரும்பினான். எனவே தான் இறந்துவிட்டாலும், கண்ணகியைக் காக்கும் பொறுப்பு கவுந்தியடிகளையே சாரும் என்பது கோவலனுடைய மறைமுகமான வேண்டுகோள். கவுந்தியடிகளின் சார்பினால் கண்ணகி துறவினை மேற்கொண்டும் வாழலாமல்லவா? ஆனால் இவற்றைக் கவுந்தியடிகள் எவ்வாறு அறிவார்? ''நறுமலர் மேனி நடுங்குதுயரெய்த - அறியாத்தேயத் தாரிடையுழந்து - சிறுமையுற்றேன் செய்தவத் தீர்யான்'' எனக் கவுந்தியடிகளிடம் தான் மேற்கொண்ட ஒழுக்கந் தவறிய நெறியைக் கூறி, ஒருவாறு மன்னிப்பு வேண்டிக் கொண்டான். இதுவரையிலும் தான் சிறுமையுற்றதைக் கோவலன் கவுந்தியடிகளுக்குக் கூறவில்லை. கூறிவிடவேண்டும் என அவன் மனம் தூண்டியது. ஆனால் நாணம் வெளிப்படையாகக் கூறுவதற்கு இடங்கொடுக்க வில்லை. மறைமுகமாகவே கூறி மனவமைதியைத் தேடிக் கொண்டான். இவ்வாறு தனது பொறுப்புக்களையெல்லாம் ஒருவாறு முடித்துக் கொண்டு கனவின் பயனை நுகர்வதற்கு ஒருவாறு மதுரையினுள்ளே புகுந்தான் போலும்! இவ்வாறு வேறு எண்ணத்தோடு மதுரையினுள்ளே சென்றமையினாலேயே, அவன் தான் கூறிச் சென்றவாறு தன் உறவினர்களைத் தேடிச் செல்லவில்லை. கவுந்தியடிகளுக்கு வேறொரு காரணத்தைத் கூறி மதுரையினுள்ளே புகுந்தான். தன் இறுதியை ஒருவாறு உறுதியாக உணர்ந்து விட்டானாதலின், இறந்துபடுவதற்கு முன்பே மதுரையைக் கண்டு களிப்போம் என்று சென்றானோ? கோவலனைக் கொல்ல வந்த பொழுது, கோவலன் சொற்களால் எத்தகைய மறுப்புக்கும் இடந்தராது ஆசிரியர் கதையை நடத்திச் சென்றதும் இக் கருத்தினாலேயே போலும்! இளங்கோவடிகளுக்கும், இந்த வாய்ப்பை விட்டு விட்டால், மதுரைமா நகரை வருணிப்பதற்கு வேறு வாய்ப்பும் இல்லை. கதையின் மிகமுக்கியமான நிகழ்ச்சிகள் நிகழ்ந்த மதுரையை வருணிக்காது விட்டுவிட முடியுமா? ஆனால், ஊழ்வினை கோவலனுக்கு அப்பொழுது தன் பயனைக் கொடுக்க மறுத்து விட்டது. மலைப்போடு புறஞ்சேரியில் இருந்த பள்ளிக்குத் திரும்பினான். வேறு வழி இன்றிக் கனவைக் கவுந்தியடிகளுக்குக் கூறி, ஆறுதல் நாடினான். அதுவும் கிடைக்கவில்லை. ஊழ் கோவலன், கண்ணகி இருவரையுமே மதுரைமா நகரின் உள்ளே இழுத்துச் சென்று பழிவாங்கியது.

(சிறுகதை)

அடிச்சுவடு

(திரு. வே. கோதண்டராமன்)

செந்தாமரை:

காலை எட்டு மணிக்குச் சென்றவர் இன்னும் வரவில்லை. வெளியே எங்கும் இருள் பரவிவிட்டது. இருளில் எங்கு அவர் தொல்லைப்படுகிறாரோ தெரியவில்லை. நேற்றிரவுகூட அமைதியான துயிலில்லை. அயர்ந்து அவர் உறங்கிக்கொண்டிருந்த போது, 'ஐயோ, ஐயோ,' என்று கூவியபடி வந்தான் ஒரு வயிற்றுவலிக்காரன். எழுந் தார். நானும் விழித்துக்கொண்டேன். அவனுக்கு மருந்து கொடுத்து இன்சொல் கூறி அனுப்பினார். அவனுக்கு வயிற்று வலி வந்த காரணத்தை என்னிடம் விளக்கி விட்டுப் பின்னர்தான் கொஞ்சம் தூங்கினார். இன்று, எட்டுக்கல் தொலைவிலிருக் கும் நாரையூரில் ''இலக்கிய மன்றம்'' ஒன்று திறக்கிறார்களாம். அதற்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று காலையில் இவரை அழைத்துச் சென்றுவிட்டார்கள். 'இலக்கியமும் நல்வாழ்வும்' என்பது பற்றி அங்குப் பேசப்போகிறார்களாம். இரவு வந்துவிட்டது. இன்னும் அவர் வரவில்லை. நல்ல இலக்கியம்! நல்ல நல்வாழ்வு! அவர் நலமுடன் வீடுவந்து சேர வேண்டுமே என்று எனக்குக் கவலை. அவரை அழைத்துச் செல்பவர்களுக்கு இந்த எண்ணம் இருக்குமா? சேரிச் சீர் திருத்தம், பொதுக் கூட்டம், ஆண்டு விழா, துவக்கவிழா, இப்படிப் பலப்பல சொல்லிக் கொண்டு, அவர் அடிக்கடி எங்கெங்கோ சென்று வருகிறார். ஒன்றரை ஆண்டுகளில் அவர் எப்படி மாறிவிட்டார்! வீட்டையும், என்னையும் முன்போல அவர் கவனிப்பதில்லை. மணி ஒன்பதுக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் அவர் வரவில்லை. குழந்தை மணிவிளக்கு தூங்குகிறான். ஏனோ மனம் மிக்க வேதனையாக இருக் கிறது. ஆம்; அவர் நலமாக வீடு திரும்ப வேண்டும் என்று அது துடிக்கிறது. வாயிற்படிக்குச் சென்றேன். வானத்தை நோக்கினேன். இரவிலே மட்டும் காணும் எண்ணற்ற சின்னஞ்சிறு விண்மலர்கள். செடியின்றி, இலை தழை எதுவுமின்றி, மகரந்தப் பொடிகூட இல்லாமல், மனிதரின் கலைவாழ்க்கைக்கு ஒளியூட்டி, வழிகாட்டும் வாடாமலர்கள். பெற்று மகிழ வேண்டும் என்ற ஆசை எண்ணத்தை மனிதரிடம் எழுப்பாத நல்ல வைர மலர்கள்; இப்படி ஒரு முறை அவர், முற்றிலும் கறுத்த இரவு மக்களுக்குப் பெருந்தீமை தரும் என்ற எண்ணத்தாலோ, எதனாலோ, வானெங்கும் இறைந்து ஒளியைச் சிதறிக் கொண்டிருக்கும் விண்மீன்களைப் பற்றிக் கூறியிருக்கிறார். இன்று என் கண்மலர்கள் அந்த விண்மலர்க் காட்சியைத் தொடுகின்றன. மகிழ்ச்சியூட்டும் அந்த எழில் வானம் இருக்கிறது. ஆனால் மகிழும் மனம் தான் எனக்கில்லை. அவரைப்பற்றிய அச்சமும், துயரமும் என் மன அரங்கிலே சுழலுகின்றன. மெதுவாகத் திரும்பி நடந்து படுக்கையில் சாய்ந்தேன்.

வடித்து வைத்த முல்லைச் சோறும், பதம் பார்த்து இறக்கி வைத்த முருங்கைக்காய்க்

குழம்பும், மணம் கமழ வறுத்த வாழைக் காய்ப் பொரியலும், பெரும் பகுதி அப்படியே இருக்கின்றன, குழந்தை மணி விளக்கிற்குக் கொஞ்சம் ஊட்டியது போக.

அவர் சாப்பிட்டாரோ, சாப்பிடவில்லையோ, எந்த நிலையில் எங்கிருக்கிறாரோ, எப்படி வந்துகொண்டிருக்கிறாரோ, என்ற எண்ணம், இருக்கும் போது, சாப்பிட எனக்கு எப்படி மனம் துணியும்? கணவன் மொழிக்கு மாறு சொல்லக் கூடாது, அவர் எதுசொன்னாலும், அதை அப்படியே செய்ய வேண்டும், கணவன் தூங்கியபின் தூங்கி, அவர் எழுமுன் விழித்தெழ வேண்டும் என்று பழங் காலத்திலிருந்து பல விளக்கங்களுக்குரிய ''பத்தினி'' என்ற நினைவு எனக் கில்லாவிடினும், அவர்—அந்த அன்பு வடிவம்— உணவு கொண்டிருப்பார் என்று தெரியாத நிலையில், எப்படி எனக்குச் சாப்பிட எண்ணம் ஏற்படும்? 'நான் வர நேரமானாலும் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள்' என்று அவர் பலமுறை வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். ஆனால் என் மனம்? அது மனமாகத்தானே இருக்கிறது, மரமாகவில்லையே, அவர் சொல் கேட்டுத் தட்டாது நடக்க? எப்படி இருந்தவர் எப்படி மாறிவிட்டார்!

''ஏதாவது பேசு; நீ எது பேசினாலும் இனிக்கிறது எனக்கு; வானவில்லின் வண்ண வேடிக்கைகள் மட்டுமல்ல செந்தாமரை, உன் பெயரைப் பெற்றிருக்கும் குளிர்க்குளம் வளர்க்கும் மலரிலே பனி துஞ்ச, கதிரொளியிலே அது வீசும் எழிலையும் காண்கின்றேன் உன் கண்களில்! இந்த ஈரம் படிந்த இதழ்களின் அமைப்பை என்னென்பேன்! உன் நிலா நிறப் பட்டுக் கன்னங்களைத் தொட்டுக் கொண்டிருந்தாலே போதும்!...'' இப்படியும், இன்னும் பலவிதமாகவும் சொல்லருவி பாய்ச்சிய அவர், இப்போதெல்லாம் உபதேச மழையல்லவா பொழிகிறார்!

மக்களின் நல்வாழ்க்கையே என் இலட்சியம் என்றல்லவா அலைகிறார்! முன்போல் என்னிடம் கொஞ்சிப்பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. வாழ்க்கையில் எப்போதும் கொஞ்சிக் கொண்டிருக்க முடியாதென்று நானறிவேன். ஆனால் எங்கெங்கோ சுற்றியலைந்து உடலைக் கெடுத்துக்கொள்கிறாரே என்றுதான் கவலைப்படுகிறேன். இல்வாழ்க்கையின் பயன் நன் மக்கட்பேறும், விருந்தோம்பலும்தாம் என்று பெரியவர்கள் கூறிச் சென்றுள்ளார்கள். வீட்டிலிருந்து கொண்டு, வரும் விருத்தினர்களை முக மலர்ந்து உபசரித்து அனுப்பும் அளவிற்கு மக்கள் தொண்டு புரிந்தால் போதும். எதற்காகப் பொதுவாழ்வி லீடுபட்டு, வெயிலிலும், கானலிலும் அடிபட்டு, அவர் எழில் மேனி கருகி மெலிய வேண்டும்? இதை எடுத்துச் சொன்னால், இலட்சிய மொழிகளைக் கொட்டுகிறார். அம்மொழிகளுக்கு முன்னால் நான் மௌனமாகத்தான் வேண்டியிருக்கிறது. என்னால் தொடர்ந்து பேசி அவரை என்பக்கம் திருப்பி, இசைய வைக்க இயலவில்லை. என் செய்வேன்? எத்தனை இரவுகள், எத்தனைப் பகல்கள் இத்தகைய வேதனையோடு கழிந் திருக்கின்றன? எப்படி இருந்தவர் எப்படி மாறிவிட்டார்! ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் அன்றொரு நாள்!........ அதை நினைத்தால்.........

* * *

நானும், என் அத்தையும் எங்கள் உந்து வண்டியில் (Pleasure car), ஊரிலிருந்து, என் அத்தை வாழும் வேலூருக்குச் சென்றுகொண்டிருந்தோம். இரு பக்கங்களிலும் பசுமையான நெல் வயல்களின் பச்சைக் கம்பளம் விரித்த காட்சியைக் கண்டுகொண்டிருக்கும் போதே வண்டி நின்றுவிட்டது. வலவர் (Driver) இறங்கி எந்திரத்தைச் சோதிக்க ஆரம்பித்தார். அவர் சோதனை விரைவில் முடிவதாகக் காணோம். நான் வண்டியைவிட்டு இறங்கினேன்; வலவரை நோக்கினேன். ''எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. ஏனோ

நின்றுவிட்டது'' என்று கூறி உதட்டைப் பிதுக்கினர் அந்த மனிதர். என்ன செய்வதென்று புரியாத நிலையில் நான் திகைத்து நின்றுகொண்டிருந்தேன். 'என்ன நேர்ந்தது?' என்று கேட்டபடி சைக்கிள் (Cycle) ஒன்றைத் தள்ளிக்கொண்டு எதிர்ப் புறத்து வயல் வெளியின் ஒரு குறுகிய பாதையிலிருந்து இறங்கி, நாங்கள் இருந்த இடத்தை நெருங்கினர், ஓர் இளம் வாலிபர். அவர் அழகிய தோற்றமும், அரச நடையும், எனக்குக் கொஞ்சம் அதிர்ச்சி கொடுத்தன. அலட்சியமாகப் பார்த்தபடி, அதே சமயத்தில் தம் வண்டியை நிறுத்திவிட்டு, அக்கரையோடு எங்கள் உந்து வண்டியின் எந்திரத்தைச் சோதிக்க ஆரம்பித்தார். கொஞ்ச நேரத்தில் அவர் சோதனை முடிந்துவிட்டது. அவர் முகத்தில் வெற்றிக்களை தோன்றியது. வண்டியில் ஏறினர். அதை இயக்கினர். அது இயங்கியது; நகர்ந்தது. நிறுத்தினர். பின் இறங்கி, வலவரை நோக்கி, 'சரி வலவரே! இனி நீங்கள் செல்லலாம்' என்று கூறினர். வலவர் ஏறி அமர்ந்தார். மென்மையான புன்சிரிப்புடன், ''உங்கள் உதவிக்கு மிக்க நன்றி'' என்று கூறினேன். ''நல்லது; நீங்கள் செல்லுங்கள்'' என்றார் அவர். வண்டியில் நான் ஏறிக்கொண்டேன். என் அத்தை 'நல்ல வண்டி இது' என்று அலுத்துக்கொண்டார். வண்டி நகரத் துவங்கியது. அப்போது அவரைப் பார்த்தேன். நின்றுகொண்டிருந்த அவரும் என்னைப் பார்த்தார். எங்கள் இருவரின் அந்தப் பார்வை, இமைக்கும் நேரத்தில் உலகத்து உணர்ச்சிகள் அத்தனையையும் தேக்கிக் காட்டியது. பல காவியங்களைப் படித்தாலும் கிட்டாத உணர்வை அன்று உணர்ந்தேன், அந்த நொடி நேரப்போதிலே! எழுத்தாலும், சொல்லாலும், அதை எடுத்து விளக்க முடியாது. வாழ்க்கையில் அரிதாக ஏற்படும் நிகழ்ச்சியின் மூலம்தான் அந்த நுகர்வை உணர முடியும். வண்டி சென்றுகொண்டிருக்கும்போது எனக்கு, நானே வெட்கப்பட்டுக்கொண்டேன். வழியில் வந்த வாலிபரை நான் ஏன் அப்படிப் பார்க்க வேண்டும்? என் மனத்திற்கும், என் கண்களுக்கும் என்ன துணிவு! ஆனாலும், அந்தப் பார்வையை என்னால் மறக்க முடியவில்லை. வண்டி இரண்டு மைல் சென்றிருக்கும். ஒரு சிற்றூர் எதிர்ப்பட்டது. இந்தப் பாதை வழியே பல முறை நான் இதற்கு முன்னர் சென்றதுண்டு. அப்பொழுதிற்கும், இப்பொழுதிற்கும் மாறுதல் அதிகம் காண முடியவில்லை. பாதை யோரத்திலே, ஒரு மாடி வீட்டின் வாயிலிலே, என் பள்ளித் தோழி மாதவி நின்றிருக்கக் கண்டேன். மாதவி தானா அவள்? வண்டியை நிறுத்துமாறு வலவரை நோக்கிக் கூறினேன்; வண்டி நின்றது. ஐயம் கொஞ்சம்கூட இல்லை. ஆம், அவளே தான். 'மாதவி' என்று கூவியபடி, அவளிடம் சென்றேன். என் அத்தையையும் அழைத்தேன். அவளோடு மனங்கலந்து பேசினேன். அவள் எங்களுக்குச் சிற்றுண்டி அளித்தாள். வலவர் சிற்றுண்டி அருந்திய பின்னர், நாங்கள் மாதவியிடமும், அவள் தாயிடமும் விடை கேட்டோம். அவர்கள் எங்களைத் தங்கிப் போகும்படி வற்புறுத்தினார்கள். அப்போது அந்த சைக்கிள் வாலிபரை அங்குக்காண நான் திடுக்கிட்டேன். அவர் வண்டியுடன் உள்ளே வந்தார். மாதவி, ''அண்ணா! இவள் என்பள்ளித் தோழி; அவர்கள் இவள் அத்தை; வேலூர் உயர்நிலைப் பள்ளியில் அத்தை வீட்டில் இருந்துகொண்டு இவள் என்னோடு படித்தாள். சொந்த ஊரிலிருந்து, இப்போது அத்தையுடன், வேலூருக்குச் சென்றுகொண்டிருக்கிறாள்'' என்று எங்களை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். ''மதிவாணா! நீயே அவர்களிடம் சொல்லப்பா, இரண்டு நாள் இருந்துவிட்டுப் போகவேண்டுமென்று; பிடிவாதமாகப் பேசுகிறார்கள். இப்போதே போகத்

துடிக்கிறார்கள்'' என்றார்கள் மாதவியின் தாயார். மதிவாணன் — அவர் பெயர்! மாதவிக்கு அவர் அண்ணன். இந்த உண்மை எனக்கு ஏனோ இனந் தெரியாத உவகையைத் தந்தது. அவர் எங்களை நோக்கினார். தானே என் முகம் வேறு பக்கம் திரும்பிக்கொண்டது, நாணத்தால். வற்புறுத்தி வேண்டினார். எங்கள் பிடிவாதம்தான் வென்றது. இன்னும் பத்து மைல் தானே இருக்கிறது வேலூர் என்று சொல்லிப் புறப்பட்டோம். ஆசையோ காதலோ, என்ன பெயரோ 'அவர்' என் வாழ்க்கைக்குத் துணையாக வரவேண்டுமென்று நான் விரும்பினேன். ஊர் சென்ற பிறகு வெட்கத்தைவிட்டு, மாதவிக்கு என் விருப்பத்தை வெளியிட்டுத் தனியாகக் கடிதம் எழுதினேன். அவர் சம்மதம் அறிந்த பின், அவள் அன்னை வழியே தன் தந்தையை எங்கள் வீட்டிற்குப் பெண் கேட்க அனுப்பச் செய்ய முயலும்படி எழுதினேன். மாதவி எங்கள் இருவரையும் இணைத்து வைத்தாள். காலம் ஓடியது. அவள் கணவன் வீடு சென்றுவிட்டாள். அவளுடைய தாய் வீடு, இப்போது என் கணவன் வீடாகிவிட்டது. எங்கள் வாழ்க்கை இன்பமாக, இச் சிற்றூரிலே சென்றது. என்னை மகிழ்விப்பதற்கென்றே, அவர் மானையும், மயிலையும் வாங்கிவந்தார். வெண்முயலும், வண்ணப் புறாக்களும்கூட எங்கள் வீட்டிலே கலைவிழா நடத்த வந்தன. வெளியுலகத்திற்கு நாங்கள் வியப்பிற் குரியவர்களாகக் காணப்பட்டோம், ஆனால், உண்மையில் நாங்கள் வாழ்க்கையைச் சுவைத்துக்கொண்டிருந்தோம். நாட்கள் ஓடின. மாதங்கள் உருண்டன. மணி விளக்குப் பிறந்தான்; இன்ப ஒளியைப் பெருக்கினான். இரண்டு ஆண்டுகள் சென்றன. எங்கள் இன்பப் பாதையில் துன்பம் தலை நீட்டியது. ''செந்தாமரை, மகிழ்ச்சியோடு நான்கு ஆண்டுகள் வாழ்ந்துவிட்டோம். இது போதும். மகிழ்ச்சியின் வாடையே வீசாமல் துன்பத்திலே உழன்று கொண்டு, தங்கள் துன்பத்தையும், துன்பத்திற்குக் காரணத்தையும் உணர்ந்து கொள்ளாமல், வேதனையுறும் ஏழைகளை முன்னேற்ற நம் தொண்டு பயன்படவேண்டும்'' என்று பொது வாழ்வில் ஈடுபட்டுவிட்டார். ஓயாது உழைத்து உடல் மெலிந்துவிட்டார். இந்த நிலையை மாற்ற என்ன செய்வது என்று தெரியவில்லை. மனம் வழிகாணாது திகைத்தது. எவ்வளவோ நேரமாகிவிட்டது. நாரையூரிலிருந்து இன்னும் அவர் வரவில்லை. எப்படியோ, நான் துயிலின் பிடியிலே சிக்கினேன்.

மதிவாணன், எம். ஏ.

நல்லது, கெட்டது தெரியாது, நாயினுங் கீழாய், அறியாமை யிருளிலே உழன்று கொண்டிருக்கும் அந்த மனிதர்களுக்கு, ஓரளவு நிலையுணர்ந்த நம்மாலன்றி வேறு யார் வழிகாட்ட முடியும்? நான்கு ஆண்டுகள் இன்பமாக வாழ்ந்தது போதும். அதுவே அதிகம், என்று மக்கள் தொண்டு புரியச் சென்றால், ''ஏன் உடலை வீணாகக் கெடுத்துக்கொள்கிறீர்கள்'' என்கிறாள் செந்தாமரை. என் உடல் நலத்தில் அவளுக்குத்தான் எவ்வளவு அக்கரை! இந்தப் பரிவை, வறுமையால் வளைக்கப்பட்டு, வழி யறியாமல், வாழத் தெரியாமல் வாழ்ந்து சாகும், மற்ற ஊர் மக்களிடம் ஏன் அவள் காட்டுவதில்லை? அவள் அன்பின் எல்லை எவ்வளவு குறுகியது! அவள் மனதில் பரந்த எண்ணத்தை எப்படி உண்டாக்குவது? எத்தனையோ முயற்சிகள் செய்தும் பயனில்லையே! புத்தர் நடந்து காட்டிய நல்ல பாதையில், அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஏசு நடந்தார். அவருடன் வள்ளுவரும் நடந்துகொண்டிருந்தார். அவர், கதிரொளியிலே காணப்படும் தமிழகத்து மலைபோல, தமிழ் மொழியிலே தெளிவாக, அந்த அடிச்சுவடுகள் காட்டும் பாதைக்கு நல்ல விளக்கமும் கொடுத்துவிட்டுச் சென்றார். இவர்களைப் பின்பற்றிக் காந்தியடிகள் நடந்தார். அப்

பாதையில் அண்மையில் நம் திரு.வி.க.வும் சென்றார். இத்தனை பேர் சென்றும் அந்தப் பாதை பண்படுத்தப்படவில்லை. விரி வடையவில்லை. அச்சாலையில், கல்லும், முள்ளும், நச்சரவுகளும் இருக்கின்றன. ஏன்? நம்மைப் போன்றோர், அவர்கள் சென்ற நல்ல பாதை வழியே செல்ல வேண்டுமென்று சொல்லிக்கொண்டு பாதையில் அடியெடுத்துவைக்க அஞ்சி, மனம் போன போக்கில் செல்வதால்தான். துணிந்து பலர் சென்றால்தான் பாதை தேய்ந்து பண்படும். இன்னல் கண்டு கலங்காமல், இலட்சியம் நோக்கி நடந்து வழி காட்டிய அந்த உத்தமர்களின் அடிச்சுவடுகளை நாம் பயன்படுத்திக்கொண்டு, அப் பாதையைச் செப்பனிட்டால்தான் வருங் கால மக்களின் நன்றியையும், நல்வாழ்த்தையும் பெறுவோம். இல்லையேல் கண்டனத் திற்கும், வசை மாரிக்கும் நாம் இலக்கா வோம். இப்படி யெல்லாம் சொன்னேன். இன்னும் பல விளக்கங்களும் தந்தேன். அவள் அமைதியாக, ''எல்லோரும் புத்த ராகமுடியாது. பொதுத்தொண்டு உங்களுக் காகக் காத்துக்கிடக்க வில்லை. ஒதுக்கி விடப்படவுமில்லை. எல்லோரும் வாழ்வது போல் வாழ்வோம். ஏன் உங்களுக்கு இந்த வம்பு?'' என்கிறாள். ஊரெல்லாம் நல்ல உண வும், போதிய உறக்கமுமின்றிச் சுற்றினால், உங்கள் உடல் என்ன ஆவதென்று அழுகி றாள். என் செய்வேன்?

செந்தாமரை :

முதல் வகுப்பில் தேறிய ஒரு எம். ஏ. பட்டதாரி, நல்ல பதவியைப் பெற்றிருக்க லாம். நிலம், உணவிற்கும் வாழ்க்கைச் செலவிற்கும் போதிய நெல் விளைவைத் தருகிறது. நிம்மதியாக வீட்டோடிருந்து, நிலத்தைக் கவனித்து வரலாம். ஆனால் அவர் போக்கு?.........அவரைத் திருத்த முடியாதென்றுதான் உணர்கிறேன். எவ் வளவு சொல்லியும் அவர் வீட்டிலே தங்க மறுக்கிறார். மாமாவிடமும், அத்தையிட மும் முறையிட்டாலோ, ''பலமுறை சொல்லிப் பார்த்து விட்டோமம்மா, உன் முயற்சியால்தான் அவன் நல்வழிக்குத் திரும்பவேண்டு'' மென்கிறார்கள். அவரோ ''மனித வாழ்வுக் கழகம்'' என்று ஒன்றை நிறுவி, அதற்குப் பல ஊர்களில் கிளைகள் அமைத்துவிட்டார். ஆடுமாடுகளைப்போல் நிலைகெட்டுழலும் நாட்டு மக்களை, அறி வுடைய மனிதராக மாற்றுவதுதான், அக் கழகத்தின் குறிக்கோளாகும். உன்னத இலட்சியமாம். நேற்று மட்டும் அவர் வெரையூருக்கு அப்படிப்பட்ட கிளை யொன்றைத் துவக்கச் சென்றிருந்தால், என் எதிர்காலம் இருண்டு விட்டிருக்கும்! அந்த ஊர் மக்களிடையே அவர் உண்டாக் கிய விழிப்பு, அவ்வூரில் கொடுமை பல புரிந்துவரும் மருத நாயகனுருக்கு அச் சத்தை உண்டாக்கிவிட்டது. மக்கள், தங் கள் வாழ்வை உறுஞ்சிவரும் அந்தப் புலிக்கு எதிராகக் கிளம்பிவிட்டனர். விளைவு? அந்தக் கொடியவன் மருதநாய கம், இவரைக் கொல்ல சதி செய்திருக்கி றான். நேற்றுத் திடீரென உடல்நலம் குன்றிவிட்டதால், இவர் அங்குச் செல்ல முடியவில்லை. ஆனால் அவ்வூர் வாலிபரால் சதி கண்டுபிடிக்கப்பட்டு, மருதநாயகம் அரசாங்கத்தாரால் சிறை பிடிக்கப்பட்டு விட்டான். இப்படி யெல்லாம் தொல்லைகள் நேர்கின்றன. என்றாலும், மக்களிடையே விழிப்பு உண்டாக்கும் வேலையை அவர் நிறுத்த மறுக்கிறார். எல்லோரும் புத்தர் களாக முடியாது, நமக்கேன் தொல்லைகள், குழந்தை மணி விளக்கையும், என்னையும், வயது கடந்த உங்கள் பெற்றோரையும் பாருங்கள் என்று அடிக்கடி, மீண்டும் மீண்டும் எவ்வளவோ சொல்லிப் பார்த் தேன். அவர் கேட்பதாயில்லை.

ஒரு நாள் அவரைக் கேட்டேன், ''நீங் கள் யாருக்காகத் தொண்டு புரியச் செல் கிறீர்களோ, அந்த மக்கள் கடவுளை நம்பு கிறார்களா?'' என்று.

''ஏன் கேட்கிறாய்? அவர்கள் கடவுளை நம்புவதில்லை'' என்றார்.

நான் திடுக்கிட்டேன். எப்படித் துணிவு ஏற்பட்டது இவருக்கு, இப்படிப் பட்ட பெரிய பொய்யை என் முன் சொல்ல? ''எல்லாம் வல்ல அவனை அவர் கள் நினைக்காத நாளில்லை'' என்று கூறு வார், அவர் கூறுவதைத் தொடர்ந்து,

''அப்படியானால், அந்தக் கடவுள் அவர்களுக்கு விழிப்புண்டாக்கித் துயர் துடைத்து, நல்வாழ்வு தருவார்; நீங்கள் உங்கள் அலைச்சலுக்கு ஒரு முடிவு கட்டுங்கள்'' என்று சொல்லலாம் என எனக்கிருந்த இறுதி நம்பிக்கையையும் அவர் தூள்தூளாக்கிவிட்டார், 'கடவுளை நம்புவதில்லை' என்று கூறிய பொய்மூலம்; அவர் தொடர்ந்து பேசினார்:

''அந்த மக்கள் மட்டுமல்ல, இந்த உலக மக்கள் அத்தனை பேருக்கும் கடவுள் மீது உண்மையான நம்பிக்கை யில்லை. அரை குறையான, பொய்யான நம்பிக்கைதான் இருக்கிறது. சிறந்த பக்தர் ஒருவரின் குழந்தைக்கு உடல் நலம் குன்றிவிட்டிருக்கும். இறைவனை நோக்கிக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்று முறையிடுவார். முறையிட்டபின் கடவுள் காப்பாற்றுவார் என்று நம்பி வாளா இருப்பதில்லை, பக்தர். மருத்துவரை நாடி யோடுவார். தலை சிறந்த நண்பரொருவரிடம், ஒரு வேண்டுகோள் விடுத்துவிட்டு, இன்னொருவரிடம் அதே வேண்டுகோளை விடுத்தால் முதல்வரிடம் நம்பிக்கை குறைவு என்று தானே பொருள்? உண்மையே பேசி வாழலாம், அதனால் வரும் இடையூறுகளினின்றும் கடவுள் நம்மைக் காப்பாற்றுவார் என்று முற்றும் நம்பி, எவரும் உண்மையே பேசி வாழ்வதில்லை. நம்பிக்கையில் அணுவளவு குறைந்தால்கூட, ''நம்பிக்கை'' பொருளற்றதாகிறது. எனவே ''கடவுள் நம்பிக்கை'' என்ற தொடருக்கே இவ்வுலகியல் வாழ்வில், இடம்காண முடியவில்லை. கடவுள் பக்தியில்தான் இப்படிப் போலி இருக்கிறதென்றால், வாழ்க்கையில் கூடவா போலி இருக்கவேண்டும்? மக்களனைவரும் கூடியவரை உண்மை வாழ்க்கை வாழ்ந்து, முழு உண்மை வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கொண்டு நடந்தால் என்ன? வாழ வைக்கவேண்டும் என்ற நோக்கில்தான், செந்தாமரை, நான் பாடுபடுகின்றேன். வேண்டாம், வேண்டாம், என்று நீ ஏன் சொல்லுகிறாயோ தெரியவில்லை,'' என்று தழுதழுத்த குரலில் சொல்லி முடித்தார். என் விழிகளில் நீர் நிறைந்தது.

ஒரு நாள் மாலை, என்னை அவர் அழைத்தார். ஓரிடத்திற்குப் போகவேண்டுமென்றார். உலாவ அழைக்கிறார் என்று எண்ணிக்கொண்டு, மகிழ்ச்சியுடன் மணி விளக்கை இடையில் ஏந்திக்கொண்டு, அவர் பின்னால் நடந்தேன். ''இசை பாடும் கடலலைகள் முத்த மிடும் குமரிமுனை, எழில் தன்னை அலங்கரித்துக்கொள்ளும் இடமான உதகமண்டல நீலமலைச்சாரல், நிற்காத அலை யரசியின் தாலாட்டைக் கேட்டபடி மயக்கத்திலிருந்து விழிக்காது நிற்கும் கலையரசின் கவின் சிற்பங்கள் வாழும் மாபலிபுரம், இங்கெல்லாம் உன்னை அழைத்துச் சென்றிருக்கிறேன்; செந்தாமரை, இன்று நான் அழைத்துப்போகும் இடம் இதுவரை எந்தக் கணவனும், தன் மனைவியை அழைத்துச் செல்லாத நிலம்; வா,'' என்று சொல்லியபடி நடந்து கொண்டிருந்தார். நான் வியப்பும், திகைப்பும் கொண்டேன். அவற்றின் விளைவாகப் புதுமைச் சுவையும், திகிலும் என் மனத்தைத் தாக்கின. நான் 'எங்கே?' என்றேன். அவர், 'வா', என்று கூறி நடந்தார்.

''பல தலை முறைகளில் வாழ்ந்த நம் மூதாதையர் இங்கு மண்ணோடு மண்ணாகி விட்டனர். அவர்கள் எழுந்துவந்தால், நமக்கு வாழும் வழிகளைச் சொல்லிக் கொடுத்துச் செல்வார்கள். அந்தி கனியும் நேரத்திலே, இளங் குழந்தையோடு இடுகாட்டிற்கு என்னை அழைத்து வந்துவிட்டாரே, என்று அஞ்சுகிறாயா செந்தாமரை! அஞ்சாதே! இலைமறை காயாக வாழ்ந்த பல வள்ளுவரும், காந்திகளும் இங்கு மீளாத் துயி லின்பத்தில் ஆழ்ந்திருக்கின்றனர்.

''.................................மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே:
சிறியோரை இகழ்தல் அதனினுமிலமே.''

என்று முதிர்ந்த நாகரிகம் பெற்ற நம் மூதாதையரின் புறநானூற்று அடிகளின் உண்மையை, இங்கு விருப்பு வெறுப்பற்ற மரணமும், மண்ணும் நிரூபித்துக்கொண்டிருக்கின்றன.

மயக்கம் வரும்போலிருந்தது எனக்கு. எனினும் சமாளித்துக்கொண்டு, "குண்டடிபட்டு, குருதிகொட்டி வீழ்ந்த காந்தி அண்ணல், சிலுவையில் அறையப்பட்ட ஏசு, நஞ்சு கொடுத்துக் கொல்லப்பட்ட சாக்ரடீஸ், ஆகியவரைப்போல் நாமும் செத்துப்போவதனுல் விளையும் பயன்தான் என்ன?" என்று நான் இடைமறித்துக் கேட்டேன். மங்கிய அந்த மாலே வேளேயிலே, மயானக்கரையில் எங்களேத் தவிர அப்போது வேறு யாரும் இல்லே.

உருண்டுகிடந்த ஒரு மண்டையோட்டை அவர் சிவந்த கையினுல் எடுத்துக்காட்டியபடி, "சாக விரும்புகிறேன், அதுவும் போராடிச் சாக விரும்புகிறேன் என்று தவருகப் புரிந்துகொண்டாய். எனக்கு நன்ருகத்தெரியும், செந்தாமரை, மனிதனின் இதுபோன்ற மண்டையோட்டை வைத்துக்கொண்டு வித்தை காட்டிப் பிச்சைகேட்டுச் சிலர் பிழைக்க முடியுமேயொழிய, மக்கள் நல்வாழ்வு பெறமுடியாது. சீல மிக்க சிலர் செத்துப்போவதால் மட்டுமே, நாடு சீர்திருந்துவதாயிருந்தால், அது எப்போதோ திருந்தியிருக்கும். இவ்வுலகை ஒருவருமே இதுவரைத் திருத்தியதில்லே. திருத்த முயன்ற சில திண்ணியர்கள் மண்ணுக்கிரையானபோது, அவர்கள் புகழ்பாடி, இதுபோன்ற மண்டையோட்டைக் காட்டிப் பிழைக்கும் வித்தைக்காரனேப்போலச் சிலர் வாழ்வுபெற முடிந்ததே தவிர, உலகம் திருந்தவில்லே. ஏன்? உலகம் திருந்துவது நம்மைப் போன்ருேர் சாவதிலில்லே. அது மக்களின் நல்ல மனமாற்றத்திலிருக்கிறது. அதற்காகத் தான் செத்துமடிந்த அந்த இலட்சிய வீரர்களின் அடிச்சுவடுகளேப் பின்பற்றி நான் ஊர் ஊராக அலேகிறேன். போராட்டத்தை யாரும் விரும்பி வா என அழைக்க மாட்டார்கள். ஆனுல் இன்று வாழ்க்கையே ஒரு போராட்டமாக இருக்கிறது. செந்தாமரை! கொள்வார் இல்லேயாதலால் கொடுப்பாரும் இல்லே மாதோ, என்று கூறுமளவிற்கு வளம் நிறைந்ததாக ஒரு காலத்தில் நம் தாயகம் இருந்தது. பொன்னும், வைரமும் மின்னிய காலம்! புலவரும், வீரரும் பெருமையோடு உலவிய நேரம்! வாழ்க்கையே விருந்தாக இருந்த வேளே! அன்றுபோல் இன்றிருந்தால், எனக்கு இவ்வேலே எதற்கு? கொடிகளிடையே சென்று நீ மறைய, நான் மலர்க்கூட்டத்திலே உன்னேத் தேடிக்கொண்டிருப்பேன் அல்லவா? ஆனுல் இன்று என்ன காண்கிருேம்? மனிதன் வீதியிலே உணவுக்கு நாயோடு போராடுகிருன். வீரர்கள் மதிக்கப்படுவதில்லே, புலமை இகழப்படுகிறது. கொடுமையும் கயமைத் தன்மையும், நாட்டைத் தம் ஆடரங் காக்கிக் கொண்டன. ஊர் முழுதும் பற்றி எரியும்போது, நம் போன்ற சிலர் தம் வீடுகளேமட்டும் பாதுகாத்துக்கொள்ளல் அறமன்று. ஊர் முழுவதும் எரிந்து சாம்பராகட்டும், பின்னர் புதிய சமுதாயம் உருவாக்குவோம் என்று வாளா இருப்பதும் அறிவுடைமை யாகாது. மக்களெல்லாரும் அழிந்த பிறகு நாம் யாருக்காக வாழப் போகிருேம்? எப்படி வாழ முடியும்? மனிதர்களே இல்லேயென்ருல், நல்ல மாடங்களும், கூடங்களும் எதற்கு? வாழ வகை இருந்தும், அந்த வகை தெரியாமல், மக்கள் வாடி நலிந்துகொண் டிருக்கிருர்கள். இந்த இழி நிலேக்குக் காரணமான அறியாமையை அகற்றத்தான் நான் போராடுகிறேன். சாவதற் கல்ல. மக்கள் நல் வழி திரும்ப வேண்டுமென்பதே என் இலட்சியம்," என்ருர்.

"துறவிகளாக இருப்பவர்கள், குடும்பப் பிணைப்பற்றவர்கள் செய்யட்டும், அந்தப் பொதுத் தொண்டை. நீங்கள் ஏன் அவதியுறவேண்டும்? உயிருக்கே ஊறு விளேவிக்கும் அப்பாதையில் இனியும் ஏன் செல்ல வேண்டும்?" என்றேன். முழு நிலா நாளன்று வானிலே நெகிழ்ந்தோடும், வெண் திங்களே நிறுத்தி, நிலத்தின் சுழற்சிக்கேற்பச் சுழன்று தேயாத நிலேயில், இந் நிலப்பகுதிக்கு ஓயாது குளிரொளி

கொடுத்துக்கொண்டிரு, இன்னொரு பகுதியினர் வேறு நிலவைத் தேடிக்கொள்ளட்டும் என்று உத்திரவிட முயல்கிறார். கனவு காண்கிறார். எனக்கல்லவா தெரியும் அவர் இலட்சியம் எட்டாக் கனியென்று, வெடிவைத்தாலும் அசைந்து கொடுக்காத பெருமலையைச் சிற்றுளிகொண்டு தகர்க்க எண்ணுகிறார். எல்லோரும் வாழ்வதைப் போல், வாழ்ந்துவிட்டுப் போகாமல் ஏனோ அலைகிறார்!

''ஒப்புக்கொள்கிறேன் செந்தாமரை! என் தோல்வியை உன்னிடம் ஒப்புக்கொள்கிறேன். வீட்டில் மனமாற்றம் செய்ய முடியவில்லை. நாட்டில் மாறுதலை விரும்புகிறேன். மனைவியை என் கொள்கைகளுக்கு இணங்கவைக்க முடியவில்லை. மாநிலத்தை, உலகைத் திருத்த விழைகிறேன், வெட்கக் கேடான நிலைதான். ஆனாலும் மனிதரை, மனித ராக்கும் என் வேலையை நான் நிறுத்திக்கொள்ளப்போவதில்லை,'' என்றார். அவர் குரல் தழுதழுத்தது. இரவின் வருகையை அறிவிக்கும் அந்த மங்கிய இருளிலும், அவர் விழிகளில் அப்போது கண்ணீரைக் கண்டேன். ''உலகைப் படைத்த கடவுள் உலகைத் திருத்திக் காப்பாற்றுவார். தொல்லை நிறைந்த அவர் தொழிலில், நாம் ஏன் சிக்கிக்கொள்ளவேண்டும் என்று தான் சொல்கிறேன். வாருங்கள் செல்வோம்'' என்று கூறியபடி அவர் கண்களைத் துடைத்தேன். பேசாமல் அவர் என் பின்னால் நடந்து வந்தார்.

திடீரென்று ஒரு நாள் அவர் நோய்வாய்ப் பட்டார். நாளாக, ஆகக் காய்ச்சல் வளர்ந்தது. எண்ணற்ற மக்கள் வெள்ளம்போல் வந்து அவரைக் கண்டு சென்றனர். நகரத்திலிருந்து உயர்ந்த மருத்துவரைத் தொண்டர்கள் அழைத்து வந்தனர். என் உள்ளம் குமுறிக்கொண்டிருந்தது. மருத்துவர் முகத்திலே துயரம் படிந்தது. மருந்தை உடலில் ஏற்றிவிட்டு அவர் சென்றார். அன்றிரவு ஏழு மணிக்கு, ''செந்தாமரை!'' என்று என்னை அழைத்தார். பக்கத்திலிருந்த நான், ''ஏன்''என்றேன். மெல்லிய குரலில் அவர் பேசினார்.

''வாழ்வேன், என்ற உறுதி எனக்கில்லை. பெரியோர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நான் நடந்தேன். நான் நடந்துசென்ற சுவட்டைப் பின்பற்றிச் சென்று, நம் செல்வம் மணி விளக்கை, இந் நாட்டின் மணி விளக்காகக் கொண்டுவா. கொண்டு வருவாயா? நம்பட்டுமா......?''

என் உள்ளம் கலங்கிற்று. மனமொடிந்து செத்த பலரின் துன்பக் கதைகள் என் நினைவிற்கு வந்தன. அஞ்சாது உண்மையை எடுத்துச்சொல்லி நஞ்சைப் பரிசாகப் பெற்ற சாக்ரடீஸிற்கு வாய்த்த மனைவி, ஒரு அடங்காத, பிடிவாதமிக்க ஆணவக்காரி என்பதை எண்ணிக்கொண்டேன். என் நெஞ்சம் வெடித்துவிடும்போலிருந்தது. என் உடல் பதறியது. கண்கள் நீரைக் கொட்டின. ''அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள் பிழைத்துக்கொள்வீர்கள், உங்களோடு நானும் பொதுவாழ்வில், தோளோடு தோள்நின்று ஒத்துழைப்பேன், நம் கண்முன்னாலேயே திருந்திய சமுதாயத்தைக் காண்போம் நாம்'' என்றேன்.

''அப்படியா! நீயும் வருவாயா! மக்களை நீ புரிந்துகொண்டாயா! ....என்ன இருந்தாலும் நீ என் செந்தாமரையல்லவா!''......... அவர் கண்கள் ஒளி வீசின. சில நாட்களில் அவர் உடல் தேறிற்று, இன்னலுக்கு ஆளாகி உயிர்துறந்த உத்தமர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நாங்கள் நடந்துகொண்டிருந்தோம்.

——டு——

*வாழ்வும் தாழ்வும்

திரு. ஸுபேர், B. A., B. L.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே'

என்று அமரகவி பாரதியார் உலகில் மக்கள் இன்பமாக வாழ்வதற்குரிய வழியை அழகும், இனிமையும், உண்மையும் ததும்பக் கூறிச் சென்றுள்ளார். அவர் அமுத மொழிப்படி ஒன்றுபட்டு வாழ்வதா, வேறுபட்டு அழிவதா என்ற குழப்பத்தில் இன்று உலகத்தை ஆழ்த்திவிட்டன உலக வல்லரசுகள். உலக வல்லரசுகள் பின்பற்றும் கொள்கைகள் அவ்வளவு மோசமாக இருக்கின்றன. இந்த நிலை இன்றுமட்டு மன்று, என்றுமே உலகத்தில் நிலவுகின்றது என்பது சில அரசியல் அறிஞர்ரின் கருத்து. நவீன போர்க் கருவிகள் மிகுந்த இந்த நவ நாகரிகக் காலத்தில்தான் இவ்விதக் குழப்பத்தில் மக்கள் அகப்பட்டு அவதிப்படுகின்றனர் என்பது ஒருசார் அறிஞரின் கருத்தாக நிலவுகின்றது. இவ்விரண்டில் எது உண்மை என்பதை ஆய்ந்து, உலக ஒற்றுமைக்கு அறிஞர் கூறும் கருத்துக்கள் எவை என்பதை எடுத்துக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

உலகில் நாகரிகம் நிலவி ஐயாயிரம் ஆண்டுகள்தாம் ஆகின்றன என்று கணக்கிடுகின்றனர் புதைபொருள் ஆராய்ச்சி வல்லுநர். உலகில் தலைசிறந்தனவாகக் கருதப்படும் சிந்துவெளி நாகரிகம், எகிப்து நாகரிகம், பாபிலோனியன், ஆசிரியன் நாகரிகம் யாவுமே ஐயாயிரம் ஆண்டுகட்கு உட்பட்டவைதாம், எனினும், ஆதாரபூர்வமாகக் கிடைத்துள்ள வரலாறு இரண்டாயிரம் ஆண்டுகட்குட்பட்ட மக்கள் நாகரிகத்தைக் குறிப்பதாகவே இருக்கிறது. இவ்வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்ட இருட்காலத்தில்கூட, மக்கள் சமூகம் குடும்பம் குடும்பமாகப் பிரிந்து, அமைதியாக ஒற்றுமையான வாழ்க்கை நடத்தியிருக்கின்றது. ஒவ்வொரு குடும்பமும் தனக்கென்று வேட்டையாடவும், ஆடு மாடுகளை மேய்க்கவும், காடுகளையும் புல்வெளிகளையும் வகுத்து எல்லையமைத்துக் கொண்டு, ஒரு குடும்பத்தின் எல்லையை மற்றொரு குடும்பம் கைப்பற்றுதவகையில் கட்டுப்பாடாக வாழ்ந்திருக்கிறது. ஆனால் காலப்போக்கில் மக்கள் இனம் பெருகப் பெருகக் கட்டுப்பாடு தளர்ந்துவிட்டது; எல்லைக் கோடுகள் மீறப்பட்டன; எல்லைப்பூசல் ஏற்பட்டுவிட்டது.

இனப் பெருக்கம் காரணமாகவே ஆரியர்களும் சிந்து - கங்கைச் சமவெளியை நோக்கிப் புறப்பட்டனர்; திராவிடர்களோடு பூசலிட்டனர். ஆரியர்கள் சிந்து, கங்கை சமவெளியைக் கைப்பற்றியபின் திராவிடர்களை அடியோடு அழித்துவிடவில்லை; தங்களுக்கு அடங்கி நடப்பவர்களாகக்கொண்டு ஒற்றுமையாகவே வாழ்ந்தனர். இதுபோன்று, உலகம் முழுதும் மக்

*மொழிபெயர்ப்பு: திரு .செ. பொன்னுசாமி, B. O. L.

கள் இனம் ஒன்றோடொன்று போரிட்டுத் தோற்றும் வென்றுமிருக்கின்றது. போரின் முடிவில் வென்றோரும் தோற்றோரும் ஒன்றுபட்டே வாழ்ந்திருக்கின்றனர்.

இப் பூசல் வயிற்றுப்பிழைப்புக்காகவும், ஆடுமாடுகளை மேய்ப்பதற்காகவும் ஏற்பட்டதே தவிர, இன்றுபோல் நாடு பிடிக்கும் ஆசையாலும், கொள்கையைப் பரப்பும் நோக்கத்தாலும் எழுந்ததன்று. ஆதலால்தான் போருக்குப்பின் ஒன்றுபட்டு வாழ முடிந்தது.

மேலே குறிப்பிட்ட காரணத்திற்காகப் போர் நடப்பது உலகியல். ஆனால் வேறு இரண்டு காரணங்களுக்காகவும் போர் நடந்ததென்பதை வரலாற்று நூல்கள் விளக்குகின்றன. அதிகாரப் போதையில் ஆழ்ந்த அரசர் உலகெங்கும் தம் அதிகாரத்தைப் பரப்பிப் புகழ்பெறக் கருதிப் பிற நாட்டுடன் படையெடுத்தனர். அலெக்ஸாண்டர், செங்கிஸ்கான், முகம்மது கோரி, பாபர் போன்ற அரசர்களின் படையெடுப்புகள் அதிகாரப் போதையால் ஏற்பட்டவை. பல்லாண்டு நடந்த சிலுவைப் போரும், ஜிஹாத்ஸ் போரும் கிறித்துவ மதத்தையும், இஸ்லாம் மதத்தையும் பரப்ப எழுந்த போர்கள்தாம்.

ஆனால் இப் போர்களினால், இன்றைய குழப்பம் அன்று ஏற்படவில்லை. சாவதா வாழ்வதா என்ற கேள்விக்கே அன்று இடமில்லை. போருக்குப்பின் அமைதியாகவே வாழ்ந்தனர் என்று தெரிகிறது. இன்றைய போர் மக்கள் சமூகமாகிய உலகத்தையே அழிக்கும் போராக மாறிவிட்டது. அன்றைய போர் பொதுமக்களைப் பாதிக்கவில்லை. ஆதலால் பொதுமக்கள், ஓரளவு போரைப் பற்றிக் கவலைப்படாமலேயே இருந்தனர். இன்று கால் பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களை மக்கள் சூழ்ந்து பார்ப்பது போல், அன்று போர் நடப்பதைத் தூரத்திலிருந்து வேடிக்கை பார்த்தனரோ என்று சொல்லும் அளவுக்கு மக்கள் மன நிலை அமைந்திருந்தது. யார் வென்றாலும், யார் தோற்றாலும் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை. வென்றவனுக்கு வரி கொடுத்துவிட்டு, வென்றோர், தோற்றோர் யாவருமே ஒன்றுபட்டு வாழ்ந்தனர்.

இருபதாம் நூற்றாண்டில் அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் பெரும் புரட்சியைக் காண்கின்றோம். எந்த நாட்டிலும் குடியாட்சி ஓங்கி நிற்கிறது; பொருளாதாரத் துறையில் பெரும் தொழில் புரட்சி வளர்ந்த வண்ணமிருக்கிறது. தொழில் யாவும் எந்திரமயமாக்கப்படுவதைப் பார்க்கின்றோம். எந்திர வளர்ச்சி பெரும் பெரும் போர்க்கருவிகளை உண்டாக்குகின்றது. அக் கருவிகள் மக்களையும், நாட்டையும் எளிதில் அழிக்கப் பயன்படுகின்றன. போரும் எந்திரமயமானதால், போரால் ஏற்படும் அழிவும் போர் வீரர்களோடு நின்றுவிடவில்லை. நாட்டில் வாழும் பொதுமக்களையும், அவர்கள் பொருளாதாரத்தையும் பெரும் அளவுக்குப் பாதித்துவிடுகிறது.

1914-18 ல் நடந்த முதல் உலகப் பெரும் போரில், இந்த உண்மையைக் கண்கூடாகக் கண்டுள்ளோம். இப் போர் ஒரு நாட்டு மக்களுக்கும் இன்னொரு நாட்டு மக்களுக்கும் ஏற்பட்ட முதல் போராக மூண்டுவிட்டது. இப் போரில் மக்கள் கணக்கிட முடியாத அளவு உயிரிழந்தனர். நாட்டின் செல்வ நிலையும் பாதிக்கப்பட்டுவிட்டது. உலகம் முழுதுமே ஓரளவு பாதிக்கப்பட்டுவிட்டது என்று சுருக்கமாகக் கூறலாம்.

இப்போரில் இங்கிலாந்து வெற்றியடைந்தது. வெற்றியடைய எடுத்த முயற்சியில் பலமிழந்து நடைப்பிணமாய் மூச்சுவிடத் திணறிற்று. தோற்றுக் குப்புற விழுந்த ஜெர்மனி சாம்பலாய் விட்டது. இந்த அளவுக்கு மக்கள் வாழ்வு பாதிக்கப்பட்டதால், நாடுகள் ஒன்றோடொன்று ஒன்று

பட்டு வாழ வழியில்லாது போய்விட்டது. பொது வாழ்வு பாதிக்கப்படாதிருந்தால், மக்களுக்குள் ஒற்றுமையைக் கண்டிருக்க முடியும்.

இப் பெரும் போரில் இங்கிலாந்து பலம் இழந்ததாலும், ஜெர்மனி சாம்பலானதாலும் அமெரிக்காவின் கை ஓங்கத் தொடங்கிற்று. இருந்தாலும் பொதுவுடைமைப் புரட்சி வளர்ந்து வரும் இரஷியாவைக் கண்டு அமெரிக்காவும், இங்கிலாந்தும் அஞ்சி நடுங்கின. எங்கு உலகமே பொதுவுடைமை மயமாகுமோ என்ற அச்சந்தான் அது. தனியுடைமையில் சுகம் கண்டவைகளல்லவா மேலைநாட்டு வல்லரசுகள்; சாம்பலான ஜெர்மனிக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தனர். தூங்கிய புலியைத் தூண்டி விடுகின்றோம் என்பதை உணரவில்லை அப்போது. ஹிட்லர் தலைமையில் உலக வல்லரசாக உருவெடுத்தது ஜெர்மனி. போர் வெறி தலைக்கேறி விட்டது. மூண்டது இரண்டாம் உலகப் பெரும் போர்.

இரண்டாம் உலகப் போரின் விளைவை இன்று கண்ணாரக் காண்கிறோம். இப் போர் உலகம் அழியும்வரை மறக்க முடியாது குறிப்பிடத்தக்க ஒன்றாக மாறிவிட்டது. போர் முடிந்தது; பிரிட்டன் இரண்டாந்தர வல்லரசாகத் தாழ்ந்து விட்டது. அமெரிக்காவின் ஆதரவை நாடி, அதைப் பின்தொடர்ந்து செல்கிறது. ஜெர்மனி சுட்டுக்கொன்று நான்காகக் கூறுபோடப் பட்டுவிட்டது. வழக்கத்திற்கு மாறாக, ஒழுங்கு மீறி அணுகுண்டு வீசியதால் ஜப்பான் சாம்பலாக்கப்பட்டது. உலகப் புரட்சியை ஏற்படுத்திப் பொதுவுடைமையை எதிர்நோக்குகின்றது இரஷியா. ஆக இரண்டாம் உலகப் போருக்குப் பின்னும் உலகில் ஒற்றுமையைக் காண முடியவில்லை. ஐரோப்பாவில் பொதுவுடைமை இரஷியாவும், ஆசியாவில் பொதுவுடைமைச் சீனாவும் குறிப்பிடத் தக்கனவாக நிமிர்ந்து நிற்கின்றன. தனியுடைமைவாதிகளான அமெரிக்காவும், பிரிட்டனும் பொதுவுடைமைக் கொள்கையை அடக்கி ஒடுக்கப் போர்முழக்கம் செய்கின்றன; போர்க் கருவிகளைச் செய்து குவிக்கின்றன. தனி உடைமையினின்றும் தங்களைக் காப்பாற்ற இரஷியாவும், சீனாவும் போருக்குத் தங்களைத் தயார் செய்கின்றன.

வேட்டையாடவும், ஆடுமாடுகளை மேய்க்கவும் ஏற்பட்ட போர் நின்று அதிகாரத்தையும் மதத்தையும் பரப்ப உண்டான அமர் அவிந்து, அரசியல் புரட்சி, தொழில் புரட்சிக்காக நடந்த சண்டையும் சாய்ந்து, இன்று தனியுடைமை, பொதுவுடைமை என்ற கொள்கைக்காக, போர் மூண்டுவிட்டது; உலக வானிலே போர்மேகம் மின்னலிடுகின்றது.

மூன்றும் உலகப்போர் நிகழ்ந்தால் அதன் முடிவு என்ன வாகும்? போர் முடிந்ததும் உலகில் ஒற்றுமையைக் காணமுடியுமா? போர் முடியும்போது, உலகமும் முடிந்துவிடுமா? - என்பன இன்றைய கேள்விகளாக நிற்கின்றன. உலகப்போர் மூண்டால், உலகமே அழிந்துவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை என்ற குரல் இன்று உலகின் பல மூலைகளிலிருந்தும் ஒலிக்கின்றது.

ஏன்? இன்று அமெரிக்காவும் இரஷியாவும் அணுகுண்டு போன்ற குண்டுகளைக் கண்டுபிடிப்பதில் கைதேர்ந்து விட்டன; அணுகுண்டுகளைச் செய்து குவித்தவண்ணமிருக்கின்றன. ஜப்பானை அழிக்கப் பயன்படுத்திய குண்டுகளைவிட பன்மடங்கு பயங்கரமான குண்டுகளே இன்றிருப்பவை; நீர் வாயுக் குண்டு, பிராணவாயுக் குண்டு, கோபால்டு குண்டு என்று விதவிதமான குண்டுகள் உற்பத்தியாகின்றன. இன்னும் எத்தனை வகையான குண்டுகள் இரகசியமாக இருக்கின்றனவோ, யாருக்குத் தெரியும்! குண்டுகளோடு நின்றுவிடவில்லை. கிருமிப்போரிலும் கைதேர்ந்துள்

ளனர். இரசாயன முறையில் போர் செய்ய வும் முனைந்துள்ளனர். இரசாயனப் புகையை வீசினுல் இன்று உலகமே புகைந்துவிடும். இவ்வாறு வல்லரசுகளிட மிருக்கும் போர்க்கருவிகளை ஏ.பி.சி. (ABC) என்ற ஆங்கில எழுத்து வரிசையில் கூறலாம். (Atom, Bacterial and chemical weapons-ABC) ஆதலால்தான் போர் மூண்டால் உலகம் நிச்சயம் அழிந்து விடும் என்பதை எல்லா நாட்டினரும் ஒப்புக்கொள்கின்றனர்.

கவிஞர் இக்பால் மேல் நாட்டினரைப் பற்றிக் கூறிய ஓர் உண்மையை இங்கு நினைத்துப் பார்க்கவேண்டியிருக்கிறது. ''சாதாரண பொருளாதாரத்தை அடிப் படையாக வைத்துப் பின்னப்பட்ட சிறிய கூடு போன்றது மேல் நாட்டினர் நாகரிகம். அந்நாகரிகம், விளையாடும் அட்டைகளால் கட்டப்பட்ட வீட்டைப் போன்று, தகர்ந்து விடும். அவர்கள் நாகரிகம் அவர்களையே அழித்துத் தற்கொலை செய்துகொள்ளும்'' என்று கூறுகின்ருர். இதில் எவ்வளவு உண்மை நிறைந்திருக்கின்றது என்பதை நன்கு உணரலாம். நாகரிகத்தின் அடிப் படையில் மேல்நாட்டினர் பெருக்கிய ஏ. பி. சி. (ABC) போர்க்கருவிகள் இன்று அவர்களை மட்டும் அழிக்காமல், ஒன்று மறியாத மற்ற நாடுகளையும் அழிக்கப்பார்க் கின்றன.

இவ்வாறு அடியோடு அழியும் ஒரு நாளை உலக அழிவுநாள் என்று எல்லா மதங் களும் கூறுகின்றன. இவ்வழிவினின்றும் உலகம் உய்யவேண்டுமென்ருல், ஒரே ஒரு வழிதான் உண்டு; மூன்ரும் உலகப் பெரும் போரை நிறுத்தவேண்டும்; இன்றேல் அழிவுதான். பழங்காலப் போரினுல் இத் தகைய சூழ்நிலை ஏற்பட்டதில்லை. இருப தாம் நூற்ருண்டின் ஏ.பி.சி. (ABC) போர் களே இந்த நிலையை உண்டாக்கிவிட்டன.

மூன்ரும் உலகப்போரை எவ்வாறு நிறுத்துவது? போர் ஏற்படுதற்குரிய கார ணங்களை ஆய்ந்து, ஒவ்வொன்ருகத் தவிர்க்கவேண்டும். காரணங்களைப் பல வாருகக் கருதுகின்றனர். அமெரிக்கா வுக்கும் இரஷியாவுக்கும் உள்ள கருத்து வேறுபாட்டினுல் ஏற்பட்ட விரோத மனப் பான்மை காரணமாகலாம் என்று சிலர் கருதுகின்றனர். சனநாயகமும், தனி யுடைமையும், மதமும் இரஷியாவில் அழிக் கப்பட்டுவிடுமே என்று அமெரிக்கா பயப் படுகின்றது; சர்வாதிகாரமும், பொதுவுடை மைக் கொள்கையும் அமெரிக்காவால் அழிக்கப்பட்டுவிடுமே என்று இரஷியா அஞ்சுகிறது என்று கருதுகின்றனர் சிலர். இவைகளன்றி, ஜெர்மன், ஆஸ்டிரியா, கொரியா, ஃபார்மோசா முதலிய நாடு களினுல் அமெரிக்காவுக்கும் இரஷியாவுக் கும் ஏற்பட்டுள்ள விவாதங்களும் காரண மாக இருக்கின்றன மூன்ரும் போர் ஏற்பட. ஆனுல், அமெரிக்கா, சேனையையும், ABC போர்க் கருவிகளையும் பலப்படுத்திக் கொண்டு இரஷியாவுடன் ஒப்பந்தம் செய்ய முயல்கின்றது. இரஷியா உலகையே பொது வுடைமை மயமாக்கத் தன்னைப் பலப்படுத் திக்கொண்டு, சமயத்தை எதிர்நோக்கு கிறது என்று அமெரிக்கா குற்றம் சாட்டு கிறது. குற்றம் சாட்டுவதுடன் நிற்காமல் உலக நாடுகளுடன் பலவித ஒப்பந்தங்களை யும் செய்துகொண்டிருக்கிறது.

இரஷியாவும் அதைச்சேர்ந்த நாடுகளும் உலக சமாதானத்தையே விரும்புகின்றன. கொரியாவிலும், இந்தோ-சீனுவிலும் போர் நின்றிருப்பதே அதற்கொரு அத்தாட்சி. போர்க்கருவிகளைக் குறைக்கவும், அணு வின் சக்தியை ஆக்கவேலைக்குப் பயன் படுத்தவும் வேண்டுமென்று அமெரிக்கா கூறுவதை ஒப்புக்கொண்டு அதற்கு ஆவன செய்ய முற்பட்டுள்ளது. சீனு சென்று மீண்ட நேருவும், பொதுவுடை மைச் சீனு இன்னும் இருபத்தைந்து ஆண்டு களுக்குள் போர் ஏற்படலாகாது என்று விரும்புகின்றது என்பதை எடுத்துக்காட்டி

யுள்ளார். இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளாவது ஆகும் சீனு உலக நாடுகளோடு முன்னேறுவதற்கு என்பது சீனர்களின் முடிவான எண்ணம். ஆயினும் இரஷியாவும், அதன் துணை நாடுகளும் போர்த்தளவாடங்களைக் குறைக்காதவரை, அமெரிக்காவின் அச்சமும் நீங்காது; அமெரிக்கா யுத்த தளவாடங்களைக் குறைக்காதவரை இரஷியாவும் குறைக்காது. ஆக இந்த இருவரின் சூழ்ச்சியில் உலகம் சிக்குண்டு கிடக்கிறது என்று கூறலாம்.

இச் சிக்கலைத் தவிர்ப்பதற்கு நம் இந்திய முதல் அமைச்சர் நேருவின் கொள்கை சாலச்சிறந்தது. உலகில் சுதந்திரமாக வாழும் ஒவ்வொரு நாடும் ஒன்ருெடொன்று விரோதித்து நிற்கும் வல்லரசுகளோடு சேரலாகாது; பக்கத்திலுள்ள நாடுகளுடன் ஏற்படும் தகராறினைப் பிறர் தலையீடில்லாமல் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ளவேண்டும். அதுவே ஒன்றுபட்டு வாழும் வழியாகும். சீனுவுக்கும் இந்தியாவுக்கும் இடையே யுள்ள திபேத்தைப் பற்றிய தகராறினை இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டே இரு நாட்டினரும் தீர்த்துக் கொண்டனர். தீர்த்துக் கொண்டபோது செய்துகொண்ட ஒப்பந்தம், ஐந்து கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டிருக்கிறது. (1) ஒவ்வொரு நாட்டின் எல்லைக்கும், ஆட்சிக்கும் மற்ற நாடு மதிப்புக்கொடுக்கவேண்டும். (2) உள்நாட்டு விவகாரத்தில் அயல்நாடு தலையிடலாகாது. (3) பலாத்காரத்தை விடவேண்டும். (4) சமத்துவம் கொடுத்து நன்மையடைதல் வேண்டும். (5) (மேலே குறிப்பிட்ட நான்கு கொள்கைகளையும் பின்பற்றி) அமைதியான கூட்டு வாழ்க்கையைக் காணவேண்டும்.

இந்தியா பாகிஸ்தானுடன் இவ்வித ஒப்பந்தத்தைத்தான் விரும்புகின்றது. இரண்டு கொரியாவும் ஒன்று சேர்ந்து சீனுவோடு ஒப்பந்தம் செய்துகொண்டால் சிக்கல் தீரும். உலக நாடுகள் இந்த ஒப்பந்தத்தைப் பின்பற்றினுல், அமைதி காணலாம்; தன்னம்பிக்கைப் பிறக்கும்; பிறரை நம்ப முடியும்; போர்க்கருவிகளைக் குறைக்கலாம்; அணுவின் சக்தியை ஆக்கத்திற்குப் பயன்படுத்தலாம்; மூன்ரும் உலகப்போர் தானே மறையும்; மக்கள் பண்பாடும், நாகரிகமும் நிலைக்கும். ஆதலால், இந்தியாவின் ஒப்பற்ற இக்கொள்கைகளை எல்லா நாடும் பின்பற்றுவனவாக! அமைதி நிலவுவதாக!

— கன்னிவெடி அகற்றிக் கப்பல் பிரிவு —

இந்தப் பிரிவில் ஐ. என். எஸ். பம்பாய், கொங்கன், பெங்கால் ரஜபுடானு, சென்னை, ரோஹில்கண்ட் ஆகிய கன்னிவெடி அகற்றிக் கப்பல்கள் உள்ளன. சுமார் 600 டன் எடையுள்ள இக் கப்பல்கள் உயர்ந்தபட்சம் 18 மைல் வேகத்தில் செல்லக்கூடியவையாகும். இக் கப்பல்கள் ஒவ்வொன்றிலும், அதிகாரிகளும், சிப்பந்திகளுமாகச் சுமார் 100 பேர் உள்ளனர்.



திரு. கே. அருணசலம்

செயற்கைப் பிரிவினையின் மதிப்பு



திரு. சந்தாமியான்

ஒன்றுபட்டால் உதவியாகும்

திரு. பி. ரங்கநாதன்

ஒற்றை யாயின் உறுகண் ஓங்கும்

தோற்றம்:
18—10—1906

மறைவு:
1—3—1955

பேராசிரியர் – உயர்திரு

ஈ. த. இராசேசுவரி அம்மையார்

(படம் உதவியவர் : திரு. கே. எஸ். எஸ். நடராஜா)

வருந்துகிறோம்

பேராசிரியர்-உயர் திரு. ச. த. இராசேசுவரி அம்மையார் அவர்கள் மார்ச் மாதம் முதல் நாளன்று இறைவன் திருவடி அடைந்தார்கள் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகின்றோம். கலைக்கதிர் தொடங்கிய காலத்தி லிருந்து எங்களுக்குப் பேருக்கமும் நல்ல அறிவுரைகளும் தந்து ஆதரித்தவர்கள்; அவர்களின் பிரிவு எமக்குப் பேரிழப்பாகும்.

அம்மையாரவர்கள் குடும்பம் நல்ல தமிழ்ப் புலமையிலும், பண்பிலும் ஊறிய குடும்பம். பல நூற்றுண்டுகளாகத் தமிழில் விருத்தப் பாக்கள் வழங்கி வருகின்றன. எனினும் அப் பாக்களுக்குரிய இயல்புகளைத் தெற்றெனத் தெருட்டிக் கூறும் இலக்கண நூல் இல்லாமலிருந்தது. அக் குறையினை நீக்கியவர் உயர் திரு. தணிகாசல முதலியாரவர்களே. அப் பெருமகனாரின் அருந்தவ மகளிராகத் தோன்றிய இராசேசுவரி அம்மையாரவர்கள் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் தேர்ந்த புலமை யுடையவர்கள். தற்கால மேற்புலப் படிப்பிலும் தலைநின்று எம். ஏ. பட்டம் பெற்றார்கள். ஆசிரியப் பயிற்சித் திறத்திலும் எல். டி. பட்டம் பெற்று, அரசினர் கல்லூரிகளில் பௌதிகப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார்கள்.

இலக்கியம், இலக்கணம், விஞ்ஞானம் எதுபற்றி யாயினும் நகைச் சுவை ததும்பப் பேசும் ஆற்றல் மிக்கவர்கள், தமிழிலே விஞ்ஞான நூல்கள் பெருக வேண்டும் என்ற எண்ணம் செயலுருவில் வெளிப்படுவதற்குப் பல ஆண்டுகள் முன்னரே தமிழில், சூரியன், வான க்கப்பல், வானக் குமிழி, ஐன்ஸ்டீன் கண்ட அற்புதக் காட்சி முதலான பல விஞ்ஞான நூல்களை எழுதினார்கள். கலைக்கதிரின் தொடக்க நாளிலிருந்து அருமையான விஞ்ஞானக் கட்டுரைகள் பல வரைந்துதவி எமக்கு ஊக்கம் ஊட்டினார்கள்.

அவர்களின் பிரிவு ஏதோ ஒரு குறிப்பிட்ட குடும்பத்தவரின் இழப்பு என்று எண்ணத் தோன்ற வில்லை. தமிழருக்கே பெருந்துயரம் அவர்களின் பிரிவால் ஏற்பட்டுள்ளது.

நம் ஆற்றலுக்கு மீறிய நிகழ்ச்சி நடந்துவிட்டது; இந்த நேரத்தில் நாம் என்ன செய்யக் கிடக்கிறது!

கலைக்கதிர் சென்னி தாழ்த்தித் தன்னுடைய வணக்கத்தை அம்மையாரவர்களுக்குச் செலுத்திக் கொள்கின்றது.

'விஞ்ஞானி கேட்ட விண்ணிசை'

—◁ 'வேலன்' ▷—

புள்ளுறங்கும் பூவுறங்கும் பூவுலகம் ஆழ்ந்துறங்கும்
நள்ளிரவை மோதிவரும் நாதமொன்று கேட்டதடா!
''கேட்டாயோ மண்ணப்பா! கேளாதே என்னப்பா!
ஓட்டைக் குழாய்மூலம் ஓயாத ஆராய்ச்சி?
குண்டைப் படைத்துக் குளிர்பொய்கைச் சோலையெலாம்
மண்டி எரியவைத்த மாயோகி நீதானோ?''
என்றகுரல் பேய்ச்சிரிப்பில் எள்ளி நகையாடி
நின்றலைந்து பாட்டாகி நீள எதிரொலிக்கும்.

அண்டம் அளந்தேன் அணுவைப் பிளந்தெடுத்தேன்
மண்டலத்தை ஆளும் மகராசர் சந்நிதியில்
'விஞ்ஞானி' என்றே விளங்கவே வீற்றிருந்தேன்
அஞ்ஞானி யாரப்பா! ஆண்மகனே! வாருமென்றேன்
சீனத்து மத்தாப்பின் செந்நீலத் தட்டொன்று
வானில் தலைக்குமேல் வந்து சுழன்றதுவே.

தட்டின் அடித்தலத்தில் தங்கவொளி வீசியதே!
வெட்டியதே மின்னல்! வெடித்ததொரு தாமரையே!
தாமரையைச் சூழ்ந்து தவளநிறம் கண்டேனே!
காமர் ஒளிமீன் கவரி இரட்டினவே!
வெள்ளைப் பனுவல் விரிந்ததடா! நாதமொன்று
கள்ளாய் வடியும் கனியமுதம் வார்த்ததடா!

சந்தப் பொதிகைத் தமிழ்முனிவன் யாழெடுத்தே
இந்தவொரு நள்ளிரவே ஏகாந்தம் கூடியொரு
நாதக் கனவில் நரம்பெறிந்து பார்த்தானோ?
வேதக் குறட்பாவை வீணையிலே சேர்த்தானோ?
''அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்றேஎ..................''

பாட்டிதுவென்?

வற்றல் மரம்நானோ? வன்பாலை இவ்வுலகோ?
அற்றேனோ அன்பை? அழகடா! நன்றாய்க்கேள்.
கட்டைவண்டி மானிடனைக் காற்றில் பறக்கவைத்தேன்
வட்ட உலகமொரு வாழும்வீ டாக்கிவைத்தேன்.
உளுத்த பனையோலை உட்கிமக்கிப் போக
அளித்தபெரு நூல்கள் அழிந்தனதாம் எத்தனையோ?
பிள்ளையார் பாட்டெழுதப் பேனா இருந்திருந்தால்
வெள்ளைப்பல் தந்தமொன்றை வீணாய் உடைப்பாரோ?

ஊற்றெடுக்கும் பேனா உரைப்பதெல்லாம் அச்சடிக்கும்
நூற்றுவகை யந்திரத்தால் நூல்கலைகள் வாழவைத்தேன்.
சுத்தப் பழங்காலம்! சொல்லிப் பிரிந்தவர்தாம்
செத்தாரோ வாழ்ந்தாரோ செய்தி அறியாமல்
பாடிப் புலம்பியதே பாலைக் கலியாச்சு
நாடெல்லாம் தந்திகட்டி நல்லசெய்தி கொண்டுவந்தேன்,
கட்டுச்சோ றில்லாமல் காசிக்குப் போவதற்குத்
திட்டமுள்ள வாகனங்கள் சீராய்ப் படைத்தளித்தேன்,

'பட்டன்' சுழற்றிப் படுக்கையிலே சாய்ந்தபடி
'பிரிட்டன்' 'அமெரிக்கா' பேச்சறிந்து பார்த்திடலாம்
'போர்'அடித்த நேரம் பொழுதை நகர்த்திடவே
'ஏர்கண்டிஷன்' 'சினிமா' இத்தனையும் நானளித்தேன்.
இத்தனையும் போதாவோ? இன்னும்என் விஞ்ஞான
வித்தையெலாம் பேச விடிந்துவிடும் வீணாக
''வற்றல்மரம்' என்றென்னை வம்புக் கிழுப்பவரே
வெற்றுலக மண்ணுருண்டை விண்ணுலகம் ஆக்கிவைத்தேன்
நன்றி மறவாதீர் நான்அன்பு விஞ்ஞானி
என்றெனக்கு வாய்த்த எதிர்க்குறளை வீசினேன்:
''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை—
செய்ந்நன்றி கொன்றமகற்'' கென்று முடித்தேனே.

''பொய்யா மொழியைப் புலவரைப்போல் பேசுமோர்
ஐயாவோ விஞ்ஞானீ! அன்புக் களஞ்சியமே!
பேசியதில் சொன்னதெலாம் பேருண்மை; நாமறவோம்;
நேசமுடன் உங்களன்பை நெஞ்சில் வைத்துக் கும்பிடுவோம்
குண்டைப் படைத்துக் கொலைக்களத்தே உம்மறிவைச்
சண்டை வெறியருக்குச் சம்மதமாய் விற்றீரே!
ஆசைக் கருவிகளாய் ஆதிக்கப் பித்தருக்கு
வேசையர்போல் உம்மையின்று விற்கத் துணிந்தீரே!

வைக்கத் தெரியாமல் வைக்கோற்போர் உட்புறத்தே
சொக்குப்பொன் தங்கத்தைச் சூடேற்றி வைத்தானும்.
அந்தக் கதைபோல் அணுச்சக்தி அற்புதத்தைச்
சிந்தை அழுகிச் செருக்கிருக்கும் மண்வெறியர்
மண்ணைசைப் போரிலிட்டு மாண்பைப் புதைத்துவிட்டீர்,
எண்ணத்தில் அன்பிருந்தால் இந்தவிதி ஏற்படுமோ?
முன்புலகைக் காத்ததுபோல் மூளும் கருணையினால்
அன்புலகத் தூதுவராய் அற்புதங்கள் ஆக்கிடுவீர்
வெள்ளம் போல் நீர்படைத்த விஞ்ஞானச் சக்தியெலாம்
உள்ளன்பே இல்லாக்கால் ஒன்றும் உதவாது.

என்புருக நெஞ்சுருக இன்கருணை ஊற்றெடுக்க
அன்புக் கிழக்கே அருளுமொழி கேளீரோ:
''புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பில் அவர்க்......''கென்று பேசியதே.
சோதி மறைந்ததுவே! சொற்பொழிவு ஓய்ந்ததுவே
வீதி அதிர்ந்ததுவே! வெண்சங்கம் ஊதியதே!

அம்மாவோ!

கண்திறந்து பார்த்தேனு, கட்டிலிலே நான்கிடந்தேன்
மின்விளக்குப் போட்டபடி மேலே சிரித்ததடா!
நாளைக்குத் தேர்வுக்கு நான்படித்த விஞ்ஞானம்!
மூளைக் குழப்பத்தில் மும்முரமாய்த் தூங்கிவிட்டேன்.
எங்குமே ஆராய்ந்தேன். என்னகத்தே நின்றொலித்த
சங்குமில்லை, பேச்சுமில்லை, தட்டுமில்லை...........

என்ன இது?

குளிர்எழுப்ப மார்கழிநாள் கூலிக்குச் சங்கூதும்
புளியோ தரைச்சாமி 'பூம்பூ'மென் றூதுகிறன்.

பரவெளிப் பயணம்

தமிழாக்கம் :

வி.ஞானி

நிலவுலகையும் நிலவுலகைச் சூழ்ந்த ஆழ்கடலையும் மனிதன் வெற்றிகொண்டு ஆண்டுகள் பல ஆயின. நிலவுலகின் எழில் முகடுபோல் காட்சியளிக்கும் வானத்தையும் தன் வெறிகொண்ட வேகத்தால் கட்டுப்படுத்திவிட்டான் விஞ்ஞானி. இந்த வெற்றியோடு மனித மனம் நிறைவு பெற்றுவிடவில்லை. விண்ணில் ஒளிரும் எண்ணற்ற கோள்களைப் பற்றியும் மீன்களைப் பற்றியும் எத்துணையோ நூற்றாண்டுகளாக ஆராய்ந்தும் அறிந்தும் வந்துள்ள மனிதன், இன்று அவற்றைப் படம் பிடித்துக் காட்டும் அளவுக்கு முன்னேறியுள்ளான். எனினும், ஒரு பொருளை நேருக்கு நேர் காண்பது போன்ற நிறைவு எந்த நிலையிலும் ஏற்படமுடியாதன்றோ? சூரியனை நேரிலே நெருங்கிச் சென்று காண்பது முடியாது; கற்பனைக்காகக்கூட விஞ்ஞானி இதுபற்றி எண்ணுவதில்லை. எல்லாக் கோள்களும் துணைக்கோள்களும் அனல் வடிவிலில்லையல்லவா? நேரிலே சென்று, தங்கிக் காணத் தகுவனவும் பல உண்டு. ஆனால், எப்படி அங்கே போவது? எதிலே போவது? போகும்போது என்னென்ன தொல்லைகள் எதிர்பார்க்கலாம்? அவற்றைச் சமாளிப்பது எப்படி? இத்தனையிலும் வெற்றி பெற்றுப் பரவெளியிலுள்ள ஏதேனும் ஒரு கோளுக்குப் போய்ச் சேர்ந்தே விடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அங்கே வாழமுடியுமா? எப்படி, எவற்றை உண்பது, உயிர்ப்பது?—இவ்வாறாக எழக்கூடிய எண்ணற்ற வினாக்களை எழுப்பிவிட்டிருக்கிறான் விஞ்ஞானி. அவன் எழுப்பும் இந்த வினாக்கள் எவரையும் திகைப்பில் ஆழ்த்திவிடும். என்றாலும், இந்த வினாக்களை எழுப்பிய அவன், திகைப்புக்கு இரையாவதில்லை; தக்க விடைகளைத் தேடிக் கண்டு, உரிய முறையில் விளக்கிவருகின்றான். இந்த வினாக்களுக்குரிய விடைகள் காண்பதில் விஞ்ஞானத்தின் எல்லாப் பகுதிகளும் ஒத்துழைக்கவேண்டும். பரவெளிப் பயணம் என்பது ஏதோ வானியலார் படைப்பு, கற்பனை..................என எண்ணிப் பிற விஞ்ஞானத் துறையினர் இருப்பதில்லை. மருத்துவத் துறைக்கும் பரவெளிப் பயணத்துக்கும் உள்ள இயைபுகளையும் ஆய்வுகளையும் இங்குச் சிறிது காணலாம்.

பரவெளிப் பயணம் என்பது, இன்றைய விஞ்ஞானியின் சாதனைகளால், திட்டமிடப்படும் நிலையை அடைந்துள்ளது. திட்டம் தீட்டிவிட்டால் செயல் நிறைவேறிவிட்டது என்று முடிவுசெய்ய முடியாதன்றோ? அதே போலத்தான் பரவெளிப் பயணமும் திட்டம் என்ற அளவில் நிற்கின்றது. அணு ஆற்றலால் இயக்கப்படும் ராக்கட்டுகளில்தான் பிற கோள்களுக்குச் செல்லலாம். அவ்வாறு ஏறிச்செல்லும் அணு ராக்கெட்டே பரவெளிப் பிரயாணியின்

ஆதாரம்: ISPS

பிண ஊர்தியாகவும் ஆகிவிடக் கூடும். அவ்வளவு ஆபத்துகள் பரவெளிப் பிர யாணிக்கு ஏற்பட வழியுண்டு.

பரவெளிப் பயணத்தை வெற்றிபெற முடிப்பதற்காகப் பல்வேறு துறையினர் ஆராய்ச்சி செய்வதைப் போலவே மருத் துவத் துறையினரும் இக்கருத்துப்பட ஆராய்ச்சி நடத்திவருகின்றனர். பரவெளி மருத்துவ ஆய்வுக் கழகம் என ஒன்று அமெரிக்காவில் ஐந்து ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகின்றது. இங்கிலாந்தி லும் பரவெளிக் கோள் கழகம் நிரம்பிய ஆராய்ச்சியில் பல்லாண்டுகளாக ஈடுபட் டுள்ளது.

தட்ப வெப்ப நிலைகளாலும் பயிர் உயிர் வருக்கங்களாலும் மண்ணுலகில் ஒரு சூழ் நிலை உண்டாகியுள்ளது. அவ்வாறு உரு வாகியுள்ள சூழ்நிலை பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து வந்ததாகும். அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ற படி அமைந்த மனித உடலின் நிலையும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக ஏற்பட்ட வரலாற்றின் விளைவாகும். இந்த அடிப்படையான கொள்கையை வைத்துத் தான் ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன.

பரவெளிப் பயணத்தி லுள்ள முதல் சிக் கல் நிலவுலகத்தி லிருந்து மேல் எழும்பிச் செல்வதாகும். புறப்படும் இடத்தில் லிருந்து—புறப்படும் கணத்திலேயே—எல்லை யற்ற பெருவேகத்துடன் ராக்கெட் மேல் நோக்கி எழவேண்டும். மிகப் பெருவேகம் இருந்தால்தான் பூமியின் ஈர்ப்பாற்றலுக்கு மீறி விண்வழியே ராக்கெட் போகமுடியும். அப்படிக் கற்பனைக்கு எட்டாத வேகத்தில் ராக்கெட் எழும்போது அதனுள் இருக்கும் மனிதர்கள் பெருத்த பாதுகாப்புக்களுடன் இருக்கவேண்டும். தடுப்புக்கும் காப்புக் கும் உரிய உடுப்புக்கள் அணியாமலிருந் தால், அவர்களுடைய முகம் பஞ்சுபோல் தொய்வுற்றுப் போகும்; தலைப் பகுதியி லுள்ள குருதி முழுவதும் உடலின் கீழ்ப் பகுதிகளுக்கு இறங்கி, உடல் ஊதிப்போய் விடும். பின்னர்க் கண்கள் இருண்டுவரும்; முடிவில் அது சாவில் போய் முடியும். உறுதிமிக்க உடலமைப்புப் பெற்றவர்— வளியமுத்தத்தைச் சமாளிப்பதற் குரிய தடுப்புடுப்பும் அணிந்துகொண்டால், ஒரு வேளை அந்த விரைவிலிருந்து தப்பித்துக் கொள்ளக்கூடும். தடுப்பு உடுப்பு வளி யழுத்தத்தினால் ஏற்படக்கூடிய குருதி யோட்டத்தைச் சீரான நிலையில் வைத்தி ருக்க உதவும்; அத்தகைய உடுப்பினை அணிந்தவர்கள் ரப்பராலாகிய ஒரு வகைப் பாயல்மீது சாய்வாகப் படுத்திருக்க வேண்டும்.

இத்தகைய தடுப்புடுப்பு பரவெளியை அடைவதற்கு உதவுகின்றது. அவ்வாறு பரவெளியை அடைந்தபின், அங்கு ஏற் படக்கூடிய சிக்கல்கள் உண்டு. பரவெளி யில் ஈர்ப்பு ஆற்றலே கிடையாது. பூமி யின் ஈர்ப்பு ஆற்றல்தான் நம் உடம்புக்கும் செய்கைகளுக்கும் ஒரு நிலைபேற்றினைக் கொடுக்கிறது. அத்தகைய ஈர்ப்பாற்றல் எதுவும் இல்லாத பரவெளியில்—அந்தரத் தில்—நாம் மிதக்க நேரிடும். அந்த நிலை யில்—தலை தடுமாற்றம் என்ற தொடர் உண்மையிலேயே காணக்கூடிய நிலையில்— எது கால் எது தலை என்று நமக்கே புரியாத நிலையில் என்ன செய்வது!

ஈர்ப்பாற்றல் அற்ற சூழல் எப்படி யிருக் கும், அத்தகைய சூழலில் நாம் எப்படிச் சமாளித்துக்கொள்வது என்றெல்லாம் இங்கே நாம் முன்கூட்டிச் சோதனை செய்து தெரிந்துகொள்ள முடியாது. ஏனென்றால், ஈர்ப்பாற்றல் அற்ற சூழ்நிலையை இங்கே ஏற்படுத்தத் தகுந்த முறை எதுவும் இல்லை. கரணங்கள் அடித்துப் பழகும் பழக்கம் ஓரளவு இத்துறையில் பரவெளிப் பிரயா ணிக்குத் தன்னம்பிக்கை ஊட்டக்கூடும். குறிப்பிட்ட திசையிலேயே இயங்கவேண் டிய இயந்திரம் ஒன்று, ஏதேனும் கோளாறு

ஏற்பட்டால் மாறுபட்டு இயங்கக்கூடு மல்லவா? அத்தகைய கோளாறு ஏற்படும்போதும் அந்த இயந்திரம் இயங்க வேண்டிய திசையிலேயே இயங்குவதற்குத் தானே சீர்செய்து கொள்ளக்கூடிய ஒரு கருவி உண்டு. அதனைக் கைராஸ்கோப் என்று சொல்லுவார்கள். இந்த கைராஸ்கோப்பின் துணைகொண்டு பரவெளிப் பிரயாணிக்கு ஏற்ற உடுப்பினைத் தயார் செய்யலாம். மேலும், உருக்கினால் செய்யப்பட்ட மிதியடியும் அதனை ஈர்க்கக்கூடிய காந்த அமைப்பும் ஏற்படுத்திக் கொள்ளலாம். இத்தகைய ஏற்பாடுகளால் பரவெளியில் 'தலைதடுமாற்றம்' ஏற்படும்போது நம் மூளையை நாமே ஏமாற்றிக்கொள்ள முடியும்—மேல் எது, கீழ் எது என்ற மயக்கம் ஏற்படாது.

பரவெளியிலே காஸ்மிக் கதிர்கள் உண்டு. கற்பனையும் செய்யமுடியாத விரைவில் இயங்குகின்றனவும் செறிந்த பேராற்ற லுடையனவுமான துகள்களின் தொகுப்பே காஸ்மிக் கதிர்கள். அணுக் குண்டு வெடிப்பதன் பின்விளைவாகக் (கரு இடும் அல்லது கரு உறும்) கரு—ஆற்றல் மனிதருக்கு இல்லாமல் போகக்கூடும். இதே விளைவு காஸ்மிக் கதிர்களால் உண்டாகலாம். சிந்தனைக்கு எட்டாத விரைவுடன் விண்கற்களும் தூசிகளும் பரவெளியில் வெறிகொண்டு இயங்குகின்றன. பரவெளிப் பயணக் கப்பலை மிக எளிதில் ஊடுருவிப் பாயக்கூடும். அப்படிப் பாய்ந்தால் கப்பலின் உள்ளே உள்ள அழுத்த நிலையில் மாறுதல் ஏற்பட்டுப் பிரயாணிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படும். இந்தத் துன்பத்தினின்றும் விடுபட வேண்டுமாயின், இரண்டு அங்குலத்திற்குக் குறையாமல் ஆறு அங்குலம் வரையிலு முள்ள தடிமனான உருக்கினால் பரவெளிக் கப்பல் செய்யப்பட வேண்டும்.

இவ்வளவு கனத்தையும் சுமந்து கொண்டு போவதென்பது பரவெளிப் பயணத்துக்குப் பொருத்தமானது என்று சொல்ல முடியாது. சில விஞ்ஞானக் கதைகளில் பரவெளிப் பயணம்பற்றிய படங்கள் வெளியாகின்றன. அவற்றில் பரவெளிப் பிரயாணி அணிந்துள்ள உடுப்புகள் மிக மெல்லியனவாக வரைந்து காட்டப்பட் டிருக்கும். அத்தகைய கோமாளித் தனமான மென்மை, பரவெளி உடுப்புகளில் இருக்கமுடியாது. எத்தகைய ஆபத்துக்கள் பரவெளியில் ஏற்படக்கூடும் என்பதை இப்போது நாம் முன்கூட்டிச் சொல்லிவிட முடியாது; எனினும் எத்தகைய சிக்கலையும் வெல்லக்கூடிய உடுப்பினை உருவாக்க வேண்டும். சதுர அங்குலத்திற்கு 15 பவுண்டு அளவிலுள்ள காற்றழுத்தம் பரவெளி உடுப்பின் உட்பகுதியிலே இருக்கும். அந்த அழுத்தத்துக்கு ஈடுகொடுக்கக்கூடிய அமைப்பு உடுப்புக்கு வேண்டும். உடுப்பினுள் இருக்கக்கூடிய காற்று ஒருமுறை சுவாசித்தவுடன் பயனற்றதாகிவிடக் கூடாது; எத்துணைமுறை வேண்டுமாயினும் உயிர்ப்பதற் குரியதாய் அந்தக் காற்று இருக்கவேண்டும்.

உடம்பிலே ஏற்படக்கூடிய ஈரத்தை உறிஞ்சக் கூடியதாகவும், சரியான வெப்ப நிலையில் உடம்பை வைத்துக் கொள்ளக் கூடியதாகவும் பரவெளி உடுப்பை அமைக்க வேண்டும். பரவெளியிலே ஒரு பக்கம் கதிரவன் வெப்பம் உருக்கும் சூட்டில் உயிருக்கு உலைவைக்குமாறு காயும்; இன்னொருபுறம் உறையும் குளிர் கிடந்து உடம்பைத்தாக்கும். இந்த இடைஞ்சலை எப்படித் தவிர்ப்பது? ஹார்வர்ட் கல்லூரியின் வானிலை மண்டலத்தைச் சேர்ந்த டாக்டர் டொனல்ட் மென்ஸல் என்பார் ஒரு முறையைக் குறித்துள்ளார். அவர் குறித்தபடி பரவெளி யுடுப்பிலே வெப்பத்தை வெளியேற்றும் செதில்களை அமைத்தால் தட்ப வெப்பச் சிக்கலை ஒருவாறு தவிர்க்க முடியலாம்.

மனித உயிர் வாழ்வதற்கு ஏற்ற வளி மண்டலம் பரவெளியில் இல்லையென்றால்,

உயிர்க்காற்று (பிராணவாயு)க் கருவியை எப்போதும் பரவெளிப் பிரயாணி அணிந்து கொண்டிருக்க வேண்டும். சாதாரணமாக வளிமண்டலச் சூழலைச் செயற்கையாக உண்டாக்கக் கூடிய ஒரு கூடாரம் பர வெளிப் பிரயாணிக்கு இன்றியமையாதது. அந்தக் கூடாரத்தினுள் தங்கி உண்ணும் நேரம், உறங்கும் காலம் தவிர, மற்ற நேரங்களி லெல்லாம் உயிர்க் காற்றுக் கருவியைப் பரவெளிப் பிரயாணி அணிந்திருக்க நேரிடலாம்; இந்த முறையிலும் சிக்கல் உண்டு. சாதாரணக் காற்றினை உட்கொள்வது பரவெளியில் முடியாது. அதிலுள்ள உயிர்க்காற்றை உட்கொண்ட பின் எஞ்சியிருக்கும் நைட்ரஜன் காற்று எங்கும் வெளியேற முடியாது. அது ஒரு சுமையாகக் கூடவே வரும். கலப்பற்ற தனி உயிர்க்காற்றை எவ்வளவு காலம் வேண்டுமாயினும் உட்கொள்வது என்பதும் இயலாத காரியம். குறிப்பிட்ட ஓரளவுள்ள காலத்துக்குமேல் கலப்பற்ற உயிர்க் காற்றை உட்கொள்வதால் போதை உண்டாகும். தனி உயிர்க்காற்றை உட்கொண்டு பணியாற்றக்கூடிய காலம் ஒரு குறிப்பிட்ட எல்லையுடையது. அதற்குள்ளாக வெளிமண்டலம் அற்ற பரவெளியில் மனிதன் தன் வேலையை முடித்துக்கொள்ள முடியுமா?

இப்படி எத்தனை எத்தனையோ சிக்கல்கள் பரவெளிப் பிரயாணிக்கு உண்டு. எதிர்பார்க்க முடியாத—முன்கூட்டிக் குறி சொல்லமுடியாத—சிக்கல்கள் இருக்கலாம். ராக்கட் ஒன்றில் ஒரு குரங்கை வைத்துப் பரவெளியில் 35 மைல் உயரத்துக்கு மேல் செலுத்தினார்கள். அந்த ராக்கெட்டிலிருந்து குரங்கு ஒரு விண்குடையில் (பாரசூட்) இறங்கிவந்தபோது எவ்வகையான மாறுதலுமின்றி வாழைப் பழத்தைச் சாப்பிட்டுக்கொண் டிருந்ததாம். இத்தகைய நிகழ்ச்சிகள் மனிதனுக்கு நம்பிக்கை ஊட்டுவனவாக உள்ளன. எத்தகைய சிக்கல் ஏற்படுவதா யிருந்தாலும்—எந்தச் சலசலப்புக்கும் அஞ்சாமல், தளராமல்—பாருலகப் பிரயாணியாக வுள்ள மனிதன் பரவெளிப் பிரயாணியாகவும் மாறுவது திண்ணம்.

—ஓ—

அவனியில் அரியர்

பெரியோர் செய்தது பெரும்பிழை எனினும்
உலகினர் அதைச் சிறு பிழையாகப் புறக்கணிப்பர்;
சிறியோர் செய்தது சிறுபிழை எனினும் உலகினர்
அதைப் பெரும் பிழையாகப் பறைசாற்றுவர்.
எனவே, உள்ளதை உள்ளவாறு உரைக்கின்றவரை
இவ் அவனியில் காணல் அரிது.

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை.

வினாக்களும்? விடைகளும்!

ஏன் இரும்பு, எஃகு அல்லாத மற்ற உலோகங்களுக்குக் காந்தத் தன்மை இல்லை?

இரும்பும், எஃகும் அதிக காந்த சக்தியை ஏற்றுக்கொள்ளுகின்றன. சுத்தமான நிக்கல் ரூபாயும் காந்தத்தால் கவரப்படுகிறது, சற்றுக் குறைந்த அளவில். கோபால்ட் உலோகமும் இப்படியே. இம் மூன்றும் ஃபெர்ரோ மேக்னெடிக் சப்ஸ்ட்டன்ஸஸ் (ferromagnetic substances) எனப்படும். இவை தவிர மற்ற எல்லாப் பொருள்களையும் இரு வகையாகப் பிரிக்கலாம். ப்ளேட்டினம், அலுமினியம் போன்ற சில காந்தத்தால் இழுக்கப்படுவது அப்பட்டமாகப் புலப்படாததால் நாம் அவற்றை மேற்கூறிய உலோகங்களோடு சேர்ப்பதில்லை. இவை பேராமேக்னட்டிக் சப்ஸ்டன்ஸஸ் (paramagnetic substances) எனப்படும். பிஸ்மத் (bismuth), வெள்ளி, படிகம் (quartz) போன்ற மற்றவை காந்தத்தை விட்டு மிக மிக இலேசாக விலகும் இயல்புடையவையாதலால் டையமேக்னட்டிக் சப்ஸ்டன்ஸஸ் (diamagnetic substances) எனப்படுகின்றன.

பொருள்கள் அணுக்களாலானவை. அணுவின் காந்த சக்தி அதனுள் அடங்கிய மின்னணுக்களில் வெளிப்புறமாக உள்ள சிலவற்றின் தனிச் சுழற்சியைப் (spin) பொறுத்தது. ஒரு பொருளுக்கு வன்மை மிக்க காந்தசக்தி இருக்கவேண்டுமானால் அது காந்த சக்தியால் இழுபடும் வகையைச் சேர்ந்ததாயிருப்பதோடன்றி, பொருளின் எல்லா அணுக்களிலும் மின்னணுக்களின் சுழற்சி ஒருப்பட்டதாயிருத்தலும் அவசியம். இந்த ஒற்றுமை, பொருளில் அணுக்கள் அமையும் கிரமம், கலவைப் பொருளானால் அருகிலமைந்த அணுக்கள் ஆகிய பல விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. இது சிக்கலான, பூர்த்தி பெறாத ஒரு விஷயம். ஹுஸ்லர் கலவையில் (Heusler's alloy) வெறும் மேங்கனீஸ் (manganese), தாமிரம், அலுமினிய உலோகங்களிருந்த போதிலும் வலிமையான காந்த சக்தி காட்டுகின்றது. இரும்பு சம்பந்தமான கூட்டுப் பொருள்கள் சில, காந்த சக்தி யில்லாதவைகளா யிருக்கின்றன.

உலோகங்களே இல்லாத வெறும் ப்ளாஸ்டிக் வகையைச் சேர்ந்த பொருள்களாலேயே சக்திவாய்ந்த காந்தங்கள் மேல் நாடுகளில் செய்யப்பட்டிருப்பதாகக் கேள்வி. காந்த சக்தியின் காரணங்களைக் கவனிக்கு மிடத்து உலோகங்களுக்குத் தான் இந்த ஏகபோக உரிமை என்று எதுவும் இல்லையே!— பிராணவாயுகூட திட திரவ நிலைகளில் காந்தத்தால் கவரப்படுவது பலருக்குத் தெரிந்திருக்கலாம்.

புதிதாக ரேஸர் செட் உபயோகிப்பவர்கள் கவனிக்கவேண்டியவை யாவை?

பிறருக்கு நன்கு புலப்படு மளவிற்கு நம் முகத்தில் மயிர் வளர்ச்சி ஏற்பட்ட பிறகே ரேஸர் செட் உபயோகிக்கத் தொடங்குவது நல்லது. மட்டரகமான ப்ளேடுகளின் ஓரம் சரியாக அமையாததால் கீறிவிட ஏதுவாகும். முகத்தின் பகுதிகளில் சோப்பின் நுரை ஓரிரண்டு நிமிடங்கள் நன்கு தோயுமானால்—உலராதபடி இரண்டாவது முறையும் இட்டுக்கொள்ளலாம் — களைவதற்கு எளிதாயிருக்கும்.

ரேஸரை அழுத்திக் களைவது நல்ல பழக்க மல்ல. ஒரே இடத்தில் பல முறை தேய்த்துத் தேய்த்து எடுப்பது தோலின் மிருதுத் தன்மையை வெகுவாகக் கெடுக்கும். சிலமணி நேரங்களில் வளரும் மயிர் நுனி கைக்குப் புலப்படுவது பார்க்கு மிடத்துப் பல முறை தேய்ப்பது பயனற்ற பழக்கமென்பது விளங்கும்.

கூடுமானவரை பதம் மழுங்காத ப்ளேடு அழுத்தம் கொடுக்காமலே தன் வேலையைச் செய்யும். மழுங்கிய ப்ளேடானால் மேற்றோலில் நமைச்சல் கொடுக்கும்; அதன் காரணமாக இரண்டு மூன்று தினங்கள் சுருக்கங்கள் கூடிய வெள்ளையான திட்டுக்கள் முகத்தில் காணப்படும். சுமார் மூன்று அல்லது நான்கு தினங்களுக் கொருமுறை செய்துகொள்வது போதுமானது. மேற்கூறியவற்றைக் கவனிக்குமிடத்து, முகத்தைப் பொறுத்தவரை நாவிதன் கத்தியை விட நாமே ரேஸர் செட் வைத்துக்கொள்வது சிறந்ததாகப் படுகிறது. இறுதியாக, முகத்தைக் கழுவ கிருமி கொல்லி சோப் பயன்படுத்தலாம். முகத்தைத் துடைத்துக்கொண்டு, வேண்டுமானால் முகப் பவுடரும் போட்டுக் கொள்ளலாம்.

பொருள் நூல்
(CHEMISTRY)

திரு. கி. கண்ணபிரான்,
M. A., B. Sc. (Hons.)

நீரகம் (Hydrogen)

நீரகம் என்பது ஒரு தனிப் பொருள். இவ்வுலகக் காற்றுச் சூழலில் (atmosphere) தனிம நிலையில் மிகக் குறைந்த அளவிலே இருக்கிறது. மேலும் தனிம நிலையில் கதிரவனின் சூழலின் வெளிப் பகுதியில் மிகுந்து காணப்படுகிறது. நம் உலகில் கூட்டுப் பொருள் நிலையில் தண்ணீரிலும், பயிரினங்களிலும், விலங்கினங்களிலும் பரவியிருக்கிறது.

நீரகத்தைத் தனிப் பொருள் நிலையில் ஆக்கவேண்டுமாயின் இது இருக்கின்ற பொருள்களினின்றும் இதைப் பிரித்து எடுக்கலாம். தண்ணீர், காடிகள் (acids) காரங்கள் இம் மூன்று வகையான பொருள்களினின்றும் இதைத் தயாரிக்க முடியும். தண்ணீரின் வழியாக மின்னோட்டத்தைச் செலுத்தினால், தண்ணீரானது நீரகமாகவும் தீயகமாகவும் பிரிக்கப்படுகின்றது. இதை நாம் முன்னமேயே * கண்டிருக்கிறோம். தண்ணீரின் வழியே மின்னோட்டம் எளிதில் செல்லாதாகையின், அத்தண்ணீரில் சிறிதளவு ஏதாவதொரு காடியையோ, காரத்தையோ கரைத்துக்கொள்ளல் வேண்டும். இயற்கையில் நீரகம் நேர் மின்னேற்றம்(electropositive) பெற்றிருப்பதால் அது எதிர் முனை (Cothode) யில் பிரிகிறது.

சில பொன்கள் நீரில் கலக்கும் போது நீரினின்றும் நீரகத்தைப் பிரிக்கும் இயல்புடையன. இம் முறையைப் பயன்படுத்தியும் நீரகம் ஆக்கப்படலாம். உவரம் (Sodium) சாம்பரம் (Potassium)சுதையம் (Calcium) முதலிய பொன்கள் தண்ணீருடன் கலக்கும்பொழுது, சாதாரண வெப்பநிலையிலேயே, நீரகத்தைப் பிரிக்கின்றன; அவ்வமயம் அப் பொன்களும் வேறு பொருள்களாக (காரப்பொருள்களாக) மாறுகின்றன. இவ்வினையை (reaction) நாம் குறியீட்டமைப்பாகக் கீழே தருகிறோம்.

உவரம்	+	நீர்	→	உவரநீரத்தீயதை	+	நீரகம் ↑
Sodium	+	Water	→	Sodiumhydroxide	+	Hydrogen ↑
சாம்பரம்	+	நீர்	→	சாம்பரநீரத்தீயதை	+	நீரகம் ↑
சுதையம்	+	நீர்	→	சுதையநீரத்தீயதை	+	நீரகம் ↑

அம்புக் குறி மேல் நோக்கியிருப்பது நீரகம், காற்றுக இருப்பதைக் குறிக்கிறது. உவரநீரத்தீயதை தண்ணீருக்குள் கரைந்து விடுகிறது. இதுவே போல் மேலே குறிப்பிட்ட மற்ற பொன்களுக்கும்.

நிலவியம் (Magnesium) நாகம் (Zinc) அலுமினியம் ஆகிய பொன்கள் நீராவியினின்றும் நீரகத்தைப் பிரிக்கவல்லன. சிவக்கக் காய்ச்சிய இரும்பின் மேலே நீராவியைச் செலுத்தினால் நீரினின்றும் நீரகம் பிரிந்து, இரும்பு அதன் தீயதையாக மாறு

* கலைக்கதிர் 1954 செப்டம்பர் இதழ் காண்க.

கிறது. இம் முறைகளால் நீரினின்றும் நீரகம் பிரிபடும்.

இனி காடிகளினின்றும் நீரகத்தைப் பிரிக்கும் முறைகளைக் காண்போம்.

காடிகளின் (Acids) வழியே மின்னோட்டத்தைச் செலுத்தினாலும் நீரகம் எதிர் முனையில் கிடைக்கிறது. இது ஒரு முறை. சில பொன்கள் காடிகளுடன் கலக்கும் பொழுது, காடிகளினின்றும் நீரகத்தைப் பிரிக்கும் இயல்பின. அவை நிலவியம், நாகம், அலுமினியம், இரும்பு. இந் நான்கும், தனித்தனியே (dilute) நீர் கலந்த (விளாவிய) கந்தகக் காடியுடனே, (Sulphuric acid) நீரப்பாசிகக்காடி (Hydrochloric acid) யுடனே கலக்கும் பொழுது இவை கரைந்து உப்பாகி, காடியினின்றும் நீரகத்தைப் பிரிக்கின்றன. இதுபோது ஏற்படுகின்ற வினைகளைக் குறியீட்டால் பின்வருமாறு அமைக்கிறோம்:

நிலவியம்	+	கந்தகக்காடி	→ நிலவியக்கந்தகை	+	நீரகம்	↑
Magnesium	+	Sulphuric acid	→ Magnesium Sulphate	+	Hydrogen	↑
நிலவியம்	+	நீரப்பாசிகக்காடி	→ நிலவியப்பாசிதை	+	நீரகம்	↑
Magnesium	+	Hydrochloric acid	→ Magnesium chloride	+	Hydrogen	↑
நாகம்	+	கந்தகக்காடி	→ நாகக்கந்தகை	+	நீரகம்	↑
அலுமினியம்	+	கந்தகக்காடி	→ அலுமினியக்கந்தகை	+	நீரகம்	↑
இரும்பு	+	கந்ததகக்காடி	→ * அயசக்கந்தகை	+	நீரகம்	↑
Iron	+	Sulphuric acid	→ Ferrous Sulphate	+	Hydrozen	↑

இதுபோலவே நீரப்பாசிகக்காடியுடன் மேல்கண்ட பொன்கள் கலக்கும்போது ஏற்படும் வினைகளும்.

மூன்றுவது முறை காரங்களினின்றும் நீரகத்தைப் பிரித்தல். முன்பு கண்டபடியே மின்னோட்டத்தைக் காரங்களின் வழியே செலுத்தினால் நீரகம் கிடைக்கிறது. எடுத்துக்காட்டாக உவரநீரத்தீயதை(Sodium Hydroxide)யின் வழியே முன்னோட்டதைச் செலுத்தினால் நீரகம் எதிர்முனையிலே கிடைக்கிறது. இன்னொரு முறை நாகம் அல்லது அலுமினியத்தை ஒரு காரத்துடன் காய்ச்சுதல் மூலமும் நீரகம் பெறப்படும். நாகமும், அலுமினியமும் இத்தகைய தன்மை வாய்ந்தன. இவ் வினைகளைக் கீழே குறிக்கிறோம்.

நாகம்	+	உவரநீரத்தீயதை	→உவரநாககை	+	நீரகம்	↑
Zinc	+	Sodium hydroxide	→Sodium Zincate	+	Hydrogen	↑
அலுமினியம்	+	சாம்பரநீரத்தீயதை	→சாம்பர அலுமினகை	+	நீரகம்	↑
Aluminium	+	Potassium hydroxide	→Potassium aluminate	+	Hydrogen	↑

நீரகத்தின் இயல்புகள் :

நீரகத்தின் இயல்புகளை இனிக் காண்போம். நீரகமானது நிறமற்றதொரு காற்று. இதற்கு மணமும் இல்லை. சுவையும் இல்லை. இது நீரில் கரையாது. இதன் கனம் மிகக் குறைவு. நம் உலகில் இதைக் காட்டிலும் இலேசான பொருள் வேறொன்றும் இல்லை. இது பல்லேடியம் (Palladium) என்று ஆங்கிலத்தில் கூறப்படுகிற

* அயகக்கந்தகை (Ferric Sulphate) என்றதொரு உப்பும் உள்ளது. அப் பொருள் இங்கு பெறப்படாமை கவனிக்கத் தகுந்தது.

தொரு பொன்னல் உறிஞ்சப்படுகிறது. (அதன் காரணமாகவே நாம் இப் பொன்னுக்கு உறிஞ்சியம் என்றும் பெய ரிடலாம்.)

நீரகமானது மற்ற சில தனிப்பொருள் களுடன் கூடும் தன்மையது. இது காற் றில் நிறமற்றதொரு சுடருடன் எரியும். அதுபோது காற்றிலுள்ள தீயகத்துடன்கூடி நீரைப் பிறப்பிக்கின்றது.

நீரகம் + தீயகம் → நீர்
(Hydrogen + Oxygen → Water)

நீரகத்தையும், தீயகத்தையும் ஒரு புட்டி யில் அடைத்து அப்புட்டியின் வாயினரு கில் நெருப்பைக் கொண்டு சென்ருல் நீரக மும் தீயகமும் ஒரு வெடிச் சத்தத்தை உண்டாக்குகின்றன. அது சமயம் நீர் பெறப்படுகின்றது. நீரகமும், பாசிகமும் கூடும்பொழுது நீரகப்பாசிதை பிறக்கிறது. இவ்விரண்டும் சாதாரண வெப்ப நிலையி லேயும்கூட, மங்கிய சூரிய ஒளியில் (diffused sunlight) வெடிச் சத்தத்துடன் கூடுகின்றன. நீரகமானது சோரியம், ஊதிதம், வாரியம், கந்தகம், காலகம் முத லிய பொன்வகையல்லாத தனிப் பொருள் களுடன் கூடும் தன்மையது.

நீரகம் + சோரியம் → நீரகச்சோரிதை
நீரகம் + ஊதிதம் → நீரகஊதிதை
நீரகம் + வாரியம் → நீரகவாரிதை
நீரகம் + கந்தகம் → நீரகக்கந்ததை
நீரகம் + காலகம் → நவக்காரம்
Hydrogen + Nitrogen → Ammonia

பொன்வகைப் பொருள்கள் சிலவற்றுட னும் கூடும் இயல்புடையது நீரகம். உவ ரம், சுதையம் இரண்டும் நீரகத்துடன் கூடும்பொழுது உவரநீரதை, சுதைய நீரதை என்ற கூட்டுப்பொருள்கள் பிறக் கின்றன.

நீரகமானது கூட்டுப் பொருள்களில்கூடி யிருக்கிற தீயகத்தைப் பிரிக்கவல்லது. குறிப்பாக, பொன்னென்றும் தீயகமும் கூடிய பொற்றீயதையி (Metallic Oxide) னின்றும் தீயகத்தைப் பிரிக்கவல்லது. செப்புத்தீயதையை நன்ருகச் சிவக்கக் காய்ச்சி அதன் வழியே நீரகத்தைச் செலுத் தினல் செப்புத்தீயதையிலுள்ள தீயகம் நீர கத்தால், பிரிக்கப்பட்டு, நீரகத்துடன்கூடி நீராக மாறுகிறது. செப்புத்தீயதை செம்பா (copper) க மாற்றமடைகின்றது. இதை நாம் ஏற்கனவே மடங்குவீத விதியைச் செய்முறையின் மூலம் நிலைநிறுத்தும் போது கண்டிருக்கிறேம்.* இதுபோலவே பழுக்கக் காய்ச்சிய ஈயத்தீயதையின்மேல் நீரகத்தைச் செலுத்தும்போது நீரும், ஈய மும் கிடைக்கின்றன.

செப்புத்தீயதை	+	நீரகம்	→	செம்பு	+	நீர்
Copper oxide	+	Hydrogen	→	Copper	+	Water
ஈயத்தீயதை	+	நீரகம்	→	ஈயம்	+	நீர்

நீரகத்திற்கு இத்தகைய இயல்பு இருப்ப தால் இது "தீயகம் நீக்கி" அல்லது "தீயகம் குறைப்பான்" (reducing agent) ஆகப் பயன்படும்.

நீரகத்தின் பயன்கள்:

நீரகம் மிகவும் இலேசானதாக இருப்ப தால், வானத்தில் எழும்பிச் செல்லும் 'பலூன்'களில் அடைப்பதற்குப் பயன்படு கிறது. தீயகத்தையும், நீரகத்தையும் இரண்டு குழல்கள் வழியாக வேண்டுமான அளவில் செலுத்தி, நீரகத்தைத் தீயகத் தில் எரிக்கும்பொழுது அதிக அளவில் வெப்பம் உண்டாகிறது. இந்த அளவு வெப்பத்தில் இரும்பு, பிளாட்டினம் முத லிய பொன்கள் உருகிவிடும். இத்தகைய பொன்களைப் பற்றவைப்பதற்கு (welding) தீயக-நீரக ஊதுகுழல் (oxy-hydrogen blow pipe) பயன்படுகிறது. நீரகத்தை யும், பாசிகத்தையும் ஒன்றுடனென்று கூடும்படி அமைத்தால் நீரப்பாசிகக்காடி (hydrochloric acid) கிடைக்கிறது.

* கலைக்கதிர், நவம்பர் '54 இதழ் காண்க.

செயற்கை மனிதன்

திருமதி. ரா. விசாலாட்சி

விஞ்ஞானத்தின் உதவியால் செயற்கை உணவு, உடை, உலோகம், வீடு, மருந்து— இன்னும் இது போன்று எத்தனையோ அற்புதத்திலும் அற்புதமான காரியங்களை மனிதன் சாதித்திருக்கிறான். இதனால் மனித சமூகம் எவ்வளவோ சுகமும் சந்தோஷமும் நன்மையும் பெற்றிருக்கிறது. எத்தனையோ வகையான இன்னல்களிலிருந்து விடுபட்டிருக்கிறது. ஆனால் எல்லாவற்றிலும் கொடிதான சாவின் பிடியிலிருந்து இன்னும் விடுபடவில்லை. சாவின் பிடியிலிருந்து மனிதன் விடுபட இயலாது என எல்லா அறநூல்களும் கூறுகின்றன. எல்லா மதாச்சாரியர்களும் இவ்விதமே கூறிப் போந்துள்ளனர். உலகில் மிகப் பெரும்பாலான மக்களும் இதையே ஒப்புகின்றனர். ஆனால் விஞ்ஞானி ஒப்புகிறானில்லை, ''மரணத்தை வெற்றி காண்பேன். அது மட்டுமல்ல. என்றென்றும் இன்பம் சுவைக்கும் அமர குமரப்பருவமும் கிட்டும்படிச் செய்கின்றேன்'' என மார்பு தட்டுகின்றான். ''இன்றல்ல நாளையல்ல இன்னும் எத்தனை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் சரி மரணத்தை வெற்றி கொண்டே தீருவேன். இறுதி வெற்றி எனக்கே யன்றி மரண தேவனுக் கல்ல'' எனக் கொக்கரிக்கிறான். தான் கூறுகிறபடி விஞ்ஞானி மரணதேவனை வெற்றி கண்டால் அப்பொழுது இவ்வுலகத்தின் கதி என்ன ஆகும் என சிந்தித்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது.

மரண தேவனை வெற்றி காணும் பாதையில் தற்சமயம் பல விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இத்துறையில் வெற்றி பெறலாம் என்னும் நம்பிக்கை ஒளியும் இப்பொழுது அவர்களுக்குத் தோன்றி இருக்கிறது.

மனித இருதயம் இயங்காமல் நின்று போவதாலேயே மரணம் உண்டாகிறது எனபது நாமெல்லோரும் அறிந்ததே. ஆகையால் இவ்விதம் நின்றுபோன இருதயத்தைப் பழயபடி இயக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டுள்ளனர். இதில் ஓரளவு வெற்றியும் கண்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. செயற்கை இருதயத்தின் மூலம் காரியத்தைச்சாதிக்க மற்றொருபுறம் முயற்சிகள் நடந்து வருகின்றன. இத்தாலியில் ட்யூரின் (Turin) நகரிலிலுள்ள புரபசர் ஏ. எம். டக்லியோடோ (Prof A.M. Dugli-oto) என்னும் டாக்டர் ஒருவரிடம் சமீபத்தில் சிகிச்சைக்காக ஒரு நோயாளி வந்தானாம். அவன் இருதயத்தில் தசை வளர்ந்து கட்டிபோல்(Heart Tumour)வீங்கி இருந்ததாம். அதை அறுத் தெடுத்தால்தான் நோயாளி பிழைப்பான் என்ற நிலை ஏற்பட்டிருந்ததாம். அப்படி அறுத் தெடுப்பதாக இருந்தால் இருதயம் வேலை செய்வதை

நிறுத்தித்தான் அறுத்தெடுக்க வேண்டும். இருதயம் இயங்குவதை நிறுத்தினால் மரணம் உண்டாகும். என்ன செய்வது? இதற்காக அந்த மருத்துவர் செயற்கை இருதயம் ஒன்றைத் தயாரித்து அதோடு இரத்தக் குழாய்களை இணைத்துத் தற்காலிக இருதயமாக அதை இயங்கும்படி செய்தாராம். பிறகு இருதயத்திலுள்ள கட்டியை அறுத் தெடுத்துப் பழையபடி இரத்தக் குழாய்களை இருதயத்தோடேயே இணைத்து விட்டாராம். நோயாளி நோய் நீங்கிப் பூரண சுகமாயிருக்கிறானாம்.

அமெரிக்காவில் டாக்டர் சி. கிளார்க் (Dr C. Clark) என்பவரிடம் சமீபத்தில் ஒரு நோயாளி வந்தானாம். அவன் நுரை ஈரல்(Lungs)வீங்கி, இருதயத்தை அழுத்தி இருதயம், நுரை ஈரல் இரண்டுமே சரியானபடி இயங்க முடியாத நிலையிலிருந்தனவாம். இதனால் இரத்தம் சரியானபடி சுத்தமாகாமலும், வேண்டிய உறுப்புகளுக்குச் சரியானபடி போய்ச் சேராமலும் நோயாளி நிமிஷத்துக்கு நிமிஷம் மோசமான நிலையை அடைந்துகொண்டிருந்தானாம். மருத்துவர் உடனே ஒரு இயந்திரத்தைத் தயாரித்து அவன் காலில் உள்ள ஒரு இரத்தக் குழாயை வெட்டி அதோடு இணைத்தாராம். அதன் வழியாக இயந்திரத்தில் வடிந்த இரத்தத்தில் செயற்கை முறையில் பிராண வாயுவைச் செலுத்திச் சுத்தம் செய்தாராம், பிறகு அவன் கையிலுள்ள இரத்த நாளம் ஒன்றை வெட்டி அதை இயந்திரத்தோடு இணைத்து அதன் மூலம் சுத்தம் செய்த இரத்தத்தைப் பழையபடி உடலுக்குள் செலுத்தினாராம். இவ்விதம் அந்த இயந்திரத்தின் உதவியால் இருதயம் நுரை ஈரல் இரண்டின் வேலையையும் சாதித்தாராம். நோயாளியும் அபாயத்திலிருந்து தப்பிப் பிழைத்தானாம். இதனால் இறந்துபோகக் கூடிய நோயாளியைச் செயற்கை இருதயம் மூலம் ஜீவிக்க வைக்கலாம் என்னும் நம்பிக்கை வலுத்திருக்கிறது.

இரத்தக் குறைவால்தான் முதுமையும் நோயும் சாவும் உண்டாகின்றன. ஆகையால் இரத்தக் குறைவைச் சுலபமாகப் பரிகரிக்கும் முறையைக் கண்டறிந்து விட்டால் சாவின் பிடியிலிருந்து விடுபட்டு விடலாம் என்பது வேறு சிலர் கருத்து. ஆகையால் அவர்கள் இரத்தக் குறைவைப் போக்கும் துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொணடுள்ளனர். ஆனால் கடந்த உலக மகாயுத்த காலத்தில் ஏற்கனவே ஜெர்மானியர் செயற்கை இரத்தம் தயாரிக்கும் முறை ஒன்றைக் கண்டறிந்து விட்டனர். இந்த செயற்கை இரத்தம் மூலம் சுமார் 5 லட்சம் குண்டடிபட்டு உயிருக்கு ஊசலாடிக்கொண்டிருந்த ஜெர்மன் போர்வீரர்கள் தப்பிப் பிழைத்துள்ளனர். ஹிட்லரின் தோல்விக்குப் பிறகு இந்தச் செயற்கை இரத்தம் தயாரிக்கும் இரகசியம் அமெரிக்காவுக்குத் தெரிய வந்தது. ஆனால் அதை வெளிக்குத் தெரிவிக்காமல் பரம ரகசியமாக அது வைத்துக்கொண்டு செயற்கை இரத்தத் தயாரிப்பில் இப்பொழுது ஈடுபட்டுள்ளது. அடுத்து வரும் உலக மகா யுத்தத்தின் போது ஒருவேளை ரஷியா தன் மீது அணு ஆயுதப் பிரயோகம் செய்தால் அப்பொழுது மக்களைக் காப்பாற்ற இந்த செயற்கை இரத்தம் வெகுவாகப் பயன்படும் என அது நம்புகிறது. இதற்காகப் பதினொரு லட்சம் பிண்ட் செயற்கை இரத்தம் தயாரித்து அவசரகால தேவைக்காகத் தயாராக வைத்திருக்க அது முடிவு செய்துள்ளது. இந்த இயற்கை இரத்தத்திற்கு "பி. பி. பி. மைக்ரோஸ்" (P.B.P. Microse) எனப் பெயர்.

நன்கு வயது வந்த ஒரு மரத்தின் கிளையை வெட்டி, நட்டுத் தண்ணீர் பாய்ச்சினால் அது தளிர்த்துத் தாய்மரம் போன்று வளர்ந்து வருவதை நாம் பார்க்கிறோம். இதேபோல் வயதுவந்து வம்ச விருத்திசெய்யக்கூடிய நிலையிலுள்ள (Reproductive Stage) ஒரு ஆண் அல்லது பெண்ணின்

உடலிலிருந்து சதைத் துண்டு (Tissue) ஒன்றை வெட்டி உடனே கர்ப்பப் பையில் வைத்தால் அது வேண்டிய சத்துக்கள் பெற்று அதே பெண் அல்லது ஆணைப் போன்றே வளரும். உருத் தோற்றத்தில் இரண்டுக்கும் எவ்வித வித்தியாசமு மிருக் காது. இவ்விதம் ஒரே ஆளை மீண்டும் எத்தனையோ முறை புனர் ஜென்மம் எடுக் கும்படி செய்லாம். மயில்ராவணன் கதை யில் வருவதைப்போல் ஒரே ஆளிலிருந்து அதே தோற்றமுள்ள அனேக ஆட்களை உற்பத்தி செய்யலாம் எனப் பிரபல அமெ ரிக்க டாக்டரும் விஞ்ஞானியுமான பேராசி ரியர் ஓஸ்க்ராயி சூடே (Prof. Oskrai Soote) என்பவர் கூறுகிறார். இத் துறையில் அவர் தீவிர ஆராய்ச்சிகளில் இப்பொழுது முனைந் துள்ளார். இது வெற்றி பெற்றால் உலகில் பெரும் புரட்சிகரமான விளைவுகள் தோன் றக்கூடும்.

தேன் ஈ, இன்னும் அது போன்ற சிறு வண்டுகள், புழு பூச்சிகள் முதலியவற்றை அவை பிறந்ததிலிருந்து சாகும்வரை வெப் பக் குறைவான இடங்களில் வளரும்படி செய்தால் அவற்றின் ஆயுட்காலம் வெகு வாக அதிகரிக்கிறது. வெப்பம் கூடக் கூட அதற்குத் தகுந்தபடி அவற்றின் ஆயுள் காலம் குறைவுபடுவதாகவும் தெரிய வந்திருக்கிறது. ஜேக்ஸ் லோப் (Jacks Lobe) என்னும் விஞ்ஞானி ஒருவர் பழ ஈக்கள் மீது ஒரு சோதனை நடத்திப் பார்த் தார். 50 F வெப்ப நிலையில் அவற்றை வளரவிட்டபோது 177 நாட்கள் அவை ஜீவித்திருந்தனவாம். 70—77°F வெப்ப நிலையில் வளரவிட்டபோது, 21 நாட்களே ஜீவித்திருந்தனவாம். இதே சோதனையை மனிதர் விஷயத்திலும் இப்பொழுது டாக் டர் லோப் ஆராய்ச்சிகள் நடத்திவருகிறார். ஒரு மனிதனை அவன் பிறந்ததிலிருந்து இறக்கும்வரை 45.5°F வெப்ப நிலையில் வளரும்படி செய்தால், அவன் 1900 வரு டங்கள் உயிரோடிருப்பான் என அவர் கூறுகிறார். அவர் கூற்று வெற்றிபெற் றால் இன்று உள்ள உலக நிலை எவ்விதம் மாறுமோ யாருக்கும் தெரியாது.

மேலே கூறியவைகளை எல்லாம் கவ னிக்குமிடத்து, ''எனக்குச் சக்தியையும், பொருளையும் கொடு; நான் அவற்றில் இருந்து இவ் அகிலத்தைச் சமைக்கிறேன்'' (Give me matter and energy I will construct all universe out of it) என கிரேக்க ஞானி ஒருவர் கூறியது முற்றி லும் சரி எனவே கூறத் தோன்றுகிறது.

—இ—

உயிர் உய்ய......

''மீன், இறைச்சி, உண்ணா நோன்பு, பின்னிய சடைத் தலை, அழுக்காடை, மறத்த தோல், தீ வணக்கம், எண்ணற்ற தவச் செயல்கள், வாழ்த்துப் பாடல்கள், காணிக்கைகள், பருவத்து ஒழுக்கம் — இவற்றில் எதுவும் தன் ஐயத்திலிருந்து விடுதலை பெறாத உயிரைத் தூய்மைப் படுத்தி உய்விக்க முடியாது.''

—புத்தர்.

காதல் படும் பாடு

திரு. தா. ஏ. ஞானமூர்த்தி M.A.

முன்கதைக் குறிப்பு :

சிவராமனும் சிவகாமியும் காதலர்கள். வரதன் என்பவன் சூழ்ச்சியால் சிவராமன் படையில் போர் வீரனாகச் சேர்ந்து விட்டான். அதைச் சிவகாமி அறிந்ததும் அவனைப் படையிலிருந்து விடுவிக்க முயன்றாள்; முடியவில்லை. சிவராமன் சென்னைப் படை நிலையத்திற்கு அனுப்பப்பட்டான். சிவகாமியின் தந்தை பொன்னம்பலம் அவளை வற்புறுத்திப் புருஷோத்தமன் என்ற செல்வ மகனுக்குத் திருமணம் செய்துகொடுக்க முயன்றார். சிவராமன் அதை அறிந்து படை நிலையத்தினின்றும் தப்பி ஓடி வந்து சிவகாமியைச் சந்தித்தான்.

இருவரும் திருமணம் செய்துகொண்டு விழுப்புரத்தில் இனிதே வாழ்க்கையை நடத்தினர். அங்கு ஒரு நாள் சிவராமன் வரதனைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தது. வரதன் சிவராமனைப் படை நிலையத்தாருக்குக் காட்டிக் கொடுத்துவிட்டான். சிவராமனுக்கு ஐந்நூறு சாட்டை அடி தண்டனையாகத் தரப்பட்டது. படை நிலையத்தின் கொடுமைகளைத் தாங்கமுடியாமல் சிவராமன் மீண்டும் படைநிலையத்தினின்றும் தப்பி ஓடி, தன் மனைவியோடு திருச்சிராப்பள்ளிக்குச் சென்று வாழ்க்கை நடத்தி வந்தான். அங்கும் அந்தப் பாவி வரதனைச் சிவராமன் சந்திக்க நேர்ந்து விட்டது. வரதன் முன்போலத் தன்னைப் படை நிலையத்தாருக்குக் காட்டிக்கொடுத்துவிடுவான் என்ற அச்சத்தால் சிவராமன் தன் அருமை மனைவியோடு பிரஞ்சு அரசாங்கத்தைச் சேர்ந்த புதுச்சேரிக்குப் போய் விட்டான். மீண்டும் வரதனது சூழ்ச்சியால் சிவராமன் படை நிலையத்தாரால் பிடிபட்டுச் சிறையிடப் பட்டான். அவனுக்கு மீண்டும் ஐந்நூறு சாட்டை அடிகள் தரப்பட்டன. அதோடு குற்றவாளி என்ற முத்திரையும் அவனுக்கு இடப்பட்டது.

சிவராமன் வரதனை எப்படியும் பழிவாங்க நினைத்தான். அவன் அஞ்சல் அதிகாரிக்கு வரதன் பூந்தமல்லி அஞ்சல் நிலையத்தில் செய்துவரும் அநியாயங்களை விளக்கி ஒரு கடிதம் எழுதினான். வரதன் தண்டிக்கப்பட்டான்.

வரதன் சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டான். தான் சிவராமனைப் பழிவாங்கப் போவதாகச் சிவகாமிக்குக் கடிதம் எழுதினான். அக் கடிதத்தைக் கண்டு சிவராமன் மனமுடைந்தான். தன் வருத்தத்தை மறக்க அவன் மது அருந்தினான். சிவகாமி அதை உணர்ந்து கண்ணீர் உகுத்தாள்.

ஒரு நாள் மாலை சிவகாமி கடைவீதிக்குச் சென்றிருந்தாள். அங்குப் புருஷோத்தமன் எதிர்ப்பட்டு அவளைத் தன்வயமாக்க முயன்றான். அவன் முயற்சி பலிக்கவில்லை. கோரமான உருவமுடைய யாரோ ஒரு புது மனிதன் புருஷோத்தமனைச் சந்தித்துச் சிவகாமியை எப்படியும் அவனிடம் சேர்ப்பதாக உறுதி கூறினான்.

படைநிலையத்தில் சிவராமன் குடியில் மூழ்கியிருப்பதாகப் புருஷோத்தமனால் குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறையிடப் பட்டான். தன் மனைவியைத் தந்திரமாக வேசி வீட்டிற்குக் கடத்திச் சென்றிருப்பதாகச் சிவராமன் செய்தி அறிந்தான். உடனே அவ்விடத்திற்கு விரைந்து ஓடி, புருஷோத்தமனைத் தாக்கித் தன் மனைவியை மீட்டான். சிவராமன் தன் கவலையை மறக்க அடிக்கடி மதுவை நாடினான். சிவராமனது படை செங்கற்பட்டிற்கு மாற்றப் பட்டது. சிவகாமி முன்னதாகவே தன் குழந்தையோடு அங்கு சென்று குடியிருப்புக்கு ஏற்பாடு செய்தாள். புருஷோத்தமன் தம் மனைவியின் கற்பைக் கெடுத்துவிட்டதாகப் பொன்னம்பலம் அவன்மீது மானநஷ்ட ஈடு வழக்குத் தொடுத்திருந்தார். அவ்வழக்கில் அவர் வெற்றி பெற்றார்.

40. இடிமேல் இடி

பல மாதங்கள் கடந்தன. சிவராமனைக் குடிப்பழக்கம் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டது. அவன் தன் வீட்டிற்குப் போவதே அருமையாகி விட்டது; தனக்குப் பணம் தேவையாய் இருக்கும்போது மட்டும் போவான்; போனதும் சிவகாமியிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவிடுவான். சிவகாமிக்கு முன்போல் தையல் வேலை அதிகமாகக் கிடைக்கவில்லை. ஒரு கடையில் அவள் சிறு தொகையை முன்பணமாகக் கட்டி வேலை பெற்று வந்தாள். கடையில் வியாபாரம் நாளடைவில் குறைந்து விட்டதால் சிவகாமிக்குக் கிடைத்த வேலையும் குறையலாயிற்று. எனவே, தன் கணவனுக்கு அவன் வேண்டும் பணத்தை அவளால் கொடுக்க இயலவில்லை; தன்னுடைய நகைகளை ஒவ்வொன்ருக அடகு வைத்துத் தன் கணவனுக்குப் பணம் கொடுத்து வந்தாள். அவளிடமிருந்து பெற்ற தொகை முழுமையும் சிவராமன் தன் குடியில் கரைத்துவிட்டான். அவன் அளவு மீறிக் குடித்த குற்றத்திற்காகப் படை நிலையத்தில் அடிக்கடி அவனுக்குச் சிறு தண்டனைகள் விதிக்கப்பட்டன. அவற்றை யெல்லாம் அவன் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

சிவகாமி உழைத்தாள்—உழைத்தாள்—இடையருது உழைத்தாள். தையல் வேலை கிடைத்தபோது, பாவம், அத் தையல் அல்லும் பகலும் ஓய் வின்றி உழைத்தாள். ஆனல் வறுமை அவள்தன் அன்பு நிறைந்த இல்லத்தில் புகுந்துவிட்டது. வறுமை புகுந்தால், புகுந்த அளவில் அது நிற்பதில்லை. விரைந்து வளர்வதன்றே அதன் இயல்பு? வறுமை, பற்றியவுடன் ஒருவரைக் கொல்வதில்லை. பூனை எலி மீது பாய்ந்து அதை உடனே கொல்வது போன்றது அன்று வறுமை தன் இரையைக் கொல்வது. அது தனக்கு இரையாக உள்ளவரைச் சுற்றிச் சுற்றி வளைத்துக் கொள்ளும். பெரும் பாம்பு இரையைத் தன் உடலால் சுற்றிக்கொண்டு, சிறுகச் சிறுக, அதை அழுத்திக் கொல்வதுபோல, வறுமை தான் பற்றியோரை அழிக்கும். ஐயோ, நம் சிவகாமி இத்தகைய வறுமையின் கொடுமைக்கு உள்ளானுள்! அக் கொடுமையைத் தானே தாங்கிக்கொண்டாள்; அது தன் அருமைக் குழந்தையை நாட அவள் விடவில்லை. அவளுக்குக் கிடைத்து வந்த தையல் வேலை நிலையாக இல்லாமற் போயினும், தன் குடும்பத்தை ஒருவாறு இனிதே நடத்த அவளுக்குத் திறமை இருந்தது. ஆனல் சிவராமன் அடிக்கடி குறுக்கிட்டான். அவளிடம் ஒரு காசும் மீதியாகாதபடி அவளிடமிருந்து அதிகாரத்தோடு பணத்தைப் பெற்றுக் குடியில் செலவழித்தான். தன் வீட்டு வறுமை நிலையை அவள் அவனுக்கு மிக நயமாக உணர்த்தினுள். ஆனல் அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. சில சமயங்களில் அவள் தன் குழந்தையின் ஒரு வேளை உணவிற்காக வைத்திருந்த காசையும் எடுத்துக் கொண்டு போய்விடுவான். ஆகையால் அவள் கடைக்காரனிடம் சென்று உணவுப் பொருளைக் கடனுக்குக் கொடுக்கும்படி கெஞ்சுவாள்; அல்லது தன் உடைகளில் ஒன்றிரண்டை அடகு வைப்பாள்.

அவளுடைய துன்பம் இதோடு நிற்கவில்லை. தன்னிடம் பணமே இல்லை என்று தன் கணவனிடம் சொல்லும் நிலை சிவகாமிக்கு வந்துவிட்டது. அதைக் கேட்டதும் சிவராமன் அடங்காச் சீற்றங்கொண்டான். ''நீ இப்போது முன்போல் வேலை செய்வதில்லை. மிகவும் சோம்பேறி யாய்விட்டாய்'' என்று அவன் அவளைச் சற்றும் இரக்கமின்றிக் கடிந் துரைத்தான். அவளுடைய கண்களிலிருந்து நீர் பெருகிக் கன்னங்களின் வழியாகப் பாய்ந்தது. ''கடைக்காரர் எனக்கு ஒரு வாரமாக வேலை தரவில்லை. ஆகையால் கையில் பணமில்லை'' என்று நெஞ் சுருகி உரைத்தாள். ''அப்படி

யாஞல், நீ போய் அந்தக் கரைக்காரனிடம் முன்பணமாகச் செலுத்தியிருக்கும்தொகையை வாங்கி வா'' என்று ஆணையிட்டான் சிவராமன். இதைக் கேட்டதும் சிவகாமி திடுக்கிட்டாள். அவள் மேலும் வேலை பெறுவதற்குப் பற்றுக்கோடாக இருப்பது அம் முன்பணம்தான். அதைத் திரும்பிப் பெற்றுக்கொண்டால், அவள் வருவாய்க்கு வேலை? அப்பணத்தை அவள் வாங்கி வர அவள் உறுதியாக மறுத்தாள். அவள் வாழ்க்கையிலேயே இதுதான் முதன் முறை தன் கணவன் கட்டளையை மறுத்தது. சிவராமனுக்குக் கோபம் பொங்கியது. திடீரென அவ்விடத்தை விட் டகன்ருன்; தானே அம் முன்பணத்தைப் பெறுவதற்குக் கடைக்காரனிடம்சென்ருன். ஆனல் கடைக்காரன் அத்தொகையை அவனிடம் கொடுக்க மறுத்துவிட்டான். அவன் மனைவியிடமிருந்து எழுதி வாங்கிவந்தாலன்றி முன்பணத்தைஅவனிடம் கொடுக்க இயலாது என்று கடைக்காரன் கூறிஞன். சிவராமன் மீண்டும் தன் வீட்டிற்கு ஓடி வந்தான். முன் பணத்தை அவனிடம் கொடுக்கும்படியாய்க் கடைக்காரனுக்கு ஒரு சீட்டு எழுதித்தரும்படியாகக் கேட்டான். அதைக் கேட்க வேண்டாம் என்று சிவகாமி தன் கணவன் திருவடிகளில் விழுந்து கெஞ்சிஞள். அப் பணத்தில்

பாதித் தொகைக்காவது எழுதும்படி சிவராமன் அவளை வேண்டினன். சிவகாமி அதற்கும் விரும்பவில்லை. பிறகு அதில் கால் தொகைக்காவது கடிதம் எழுதும்படிக் கேட்டான். சிவகாமி அதையும் மறுத்தாள். சிவராமனுக்குச் சீற்றம் கொழுந்து விட்டு எரிந்தது. சரேலென அவன் அவ்விடத்தை அகன்றுன். சிவகாமி அடைந்த துன்பம் சொல்லமுடியாது; அந்நாள் முழுதும் துயரத்தில் ஆழ்ந்தாள். தன் குழந்தையின் மழலை மொழிகள்கூட அவளைத் தேற்ற முடியவில்லை.

இத்தகைய துன்பங்கள் சிவகாமிக்குத் தொடர்ந்து வந்தன. சிவகாமிக்கு வேலை கிடைக்கும் காலங்களில், சிவராமன் சனிக்கிழமையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். அவளுக்குக் கூலி கிடைக்கும் நாள் சனிக்கிழமை. அந்நாள் வந்ததும், அவளிடமிருந்து தன் குடிக்குப் பணத்தை எடுத்துக் கொள்வான். அன்றி அவள் கடையிலிருந்து திரும்பும்போது, அவளை வழி மறித்துப் பணம் பெற்றுக் கொள்வதும் உண்டு. சிவகாமி அத் தொகையைப் பெறுதற்கு எத்தனை நாட்கள் இரவும் பகலும் மெய்வருந்தி உழைத்திருக்க வேண்டும் என்பதைச் சிறிதும் அவன் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அவள் மெய்வருந்தி உழைத்துப் பெற்ற பணத்தைத் தன் குடிக்குச் செலவழிப்பதால் அவளும், தன் அருமைக் குழந்தையும் பட்டினியால் வாட நேரிடுமே என்பதையும் அவன் எண்ணுவதில்லை. முன்பெல்லாம் அவனுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அவள் முகம் வாடி மெலிந்திருந்த தன்மையையும் அவன் கவனிக்கவில்லை. ஓயா உழைப்பாலும், வறுமையின் கொடுமையாலும் அவள் உடல் நாளுக்கு நாள் நலிவெய்திக்கொண்டே சென்றது. அதுவும் அவனுடைய கண்களுக்குத் தெரியவில்லை. முன்பு மழலை மொழியாலும், செயலாலும் தன்னை இன்புறுத்திய அருமை மகன், பாவம், இப்போது உடல் மெலிந்து தோன்றினன்! தன் தந்தையைக் கண்டதும் முன்பு அன்போடு ஓடி அவன் மீது தாவுவான் அல்லவா? ஆனல் இப்போது குடிவெறியால் உருமாறி இருக்கும் தன் தந்தையைக் கண்டால், அவன் அச்சத்தோடு பின் நகர்வான். இவற்றை எல்லாம் சிவராமன் சிறிதும் கவனிக்க வில்லை.

நாட்கள் செல்லச் செல்ல, சிவகாமியின் துன்பமும் மேலும் மேலும் மிகுந்தது. அவளுடைய கணவன்—கொடிய கணவன்—கடைக்காரனிடமிருந்து முன் பணத்தைப் பெற்றுவரும்படியாகச் சிவகாமியை மீண்டும் வற்புறுத்தலானன். அவனை இப்போது கொடியவன் என்றுதான் கூறவேண்டும். சிவகாமிக்கு அவன் தரும் துன்பம் எவ்வளவு! சிவகாமி முன்பணத்தைப் பெற்று வர மறுபடியும் மறுத்தாள். சிவராமன் தன் குடிவேட்கையைத் தணிக்க எதை வேண்டுமானலும் செய்யச் சித்தமாயிருந்தான்; அப்போது அவனுக்குக் குடிக்குப் பணம் வேண்டும்; அவ்வளவுதான். மறுநாளைப்பற்றி அவனுக்குக் கவலையில்லை. அவன் சிவகாமியை மிரட்டினன்; அச்சுறுத்தினன்; பழித்தான்; அத்தகைய பழிச்சொற்கள் இதுவரை அவன் வாயிலிருந்து வந்ததே இல்லை. சிவகாமி அவற்றைக்கேட்டு நடுங்கினள். ஆனல் முன் பணத்தைப் பெற்றுவர அவளுக்குத் துணிவில்லை. முன் பணத்தைப் பெற்றுக் கொண்டுவிட்டால், பிறகு பட்டினிதான்! தன் பசியை அவள் எப்படியும் தாங்கிக் கொள்வாள். ஆனல் தன் அருமை மகன் பட்டினியை அவள் எப்படிப் பொறுக்க முடியும்? அவள் உறுதியாக மறுக்கவே, சிவராமன் அடங்காக் கோபமுற்று அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்! தன் அருமை மனைவியை—தன் நலத்திற்காக அல்லும் பகலும் ஓயாது உழைக்கும் ஒப்பற்ற கற்பரசியை—மங்கையர் திலகத்தை—ஓங்கி அடித்தான். அவள் மயக்கமுற்

றுக் கீழே விழுந்தாள். குழந்தை முருகன் 'அம்மா' என்று கதறிக்கொண்டே அவளிடம் ஓடிச் சென்று, தேம்பித் தேம்பி அழுதான். சிவராமன் அவ்விடத்தினின்று நீங்கினான். அப்போது அவன் உள்ளம் அவனை உறுத்தாமல் இல்லை.

ஆனால் அடுத்த கணம் தான் செய்த தவறை மறந்தான். சிவகாமிக்கு இத்தகைய கொடுமைகளை அடிக்கடி இழைக்கலானான். அவளை அடிப்பதும் உதைப்பதும் சாதாரண நிகழ்ச்சிக ளாகி விட்டன. அவ் வீட்டுச் சொந்தக்காரர்களால் இத் தொந்தரவைப் பொறுக்க முடியவில்லை. அவர்கள் ஒரு நாள் சிவகாமியை நோக்கி, "அந்தக் குடிகாரன் அடிக்கடி இங்கு வந்து இவ் வீட்டு அமைதியைக் குலைப்பதை எங்களால் இனிப் பொறுக்க முடியாது. நீங்கள் உடனே வீட்டைக் காலி செய்யுங்கள்" என்று ஆணையிட்டார்கள். ஐயோ, சிவகாமி அடைந்த மனவேதனை அளவிட முடியாது. தன் அன்பிற் குரிய கணவனுக்கு இத்தகைய பழியும், அவமானமும் நேர்ந்ததை எண்ணி எண்ணி நொந்தாள். அவன் அவளுக்கு இப்போது இழைக்கும் கொடுமைகள் எவ்வளவு? எனினும், இன்னும் அவளுடைய அன்பு மாறவில்லை. தன் அருமைக் கணவனின் முன்னைய ஒழுக்கம், பெருந் தகைமை, பண்புடைமை—இவைகளை அவள் எண்ணிப் பார்த்தாள். திருச்சியிலும், புதுச்சேரியிலும் அவர்க ளிருவரும் வாழ்ந்த இன்ப வாழ்வு அவள் மனக் கண்முன் தோன்றியது. அங்குத் தன் கணவனைப் பாராட்டாதவர் யார்? அவனை அறிந்தவர்கள் அனைவரும் அவனை எவ்வளவு போற்றினார்கள்! இவையெல்லாம் சிவகாமிக்குத் தற்போது கனவாகிவிட்டன; அவளுடைய கணவன் இப்போது எவ்வளவு மாறிவிட்டான்! எவ்வளவு இழி நிலைக்கு இறங்கிவிட்டான்! ஊரார் அனைவரும் உச்சிமேல் வைத்துப் போற்றும் ஒப்பற்ற பண்புடையவனாக விளங்கிய தன் அருமைக் கணவன் இவ்வளவு இழி நிலைக்கு இறங்கி இருக்க முடியுமா? சிவகாமிக்கு இதை நம்ப முடியவில்லை. ஒருவேளை இது கனவா? கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தாள்! ஐயோ! அவ்வழகு முகம் கவலையினால் இப்போது எவ்வளவு மாறிவிட்டது! தன்னுடைய கைகால்களை உற்று நோக்கினாள்; தன் கணவன் அடித்த அடியின் வடுக்கள் அங்கெல்லாம் காணப்பட்டன. தன்னுடைய அருமை மகனை உற்றுக் கவனித்தாள். அவனுடைய மேனி எவ்வளவு மெலிந்து இளைத்து விட்டது! இவை எல்லாம் கன வல்ல; நனவே என்று அவளுக்கு விளங்கியது.

சிவகாமி வீட்டைக் காலிசெய்யும் நிலை ஏற்பட்டு விட்டது. மற்றொரு வீட்டிற்கு அவள் குடிபுகுந்தாள். இப்போது அவள் குடிபுகுந்த வீடு மிகவும் சிறியது. எனினும் சிவகாமி அதைச் சுத்தமாகவும், ஒழுங்காகவும் வைத்துக் கொண்டாள். அவள் தையல் வேலையைத் தொடர்ந்து செய்தாள்; தனக்கும் தன் மகனுக்கும் உணவுக்காக இடையறாது உழைத்தாள். அவர்களுக்கு உடுக்கப் போதுமான உடையுமில்லை. எனினும், இருக்கும் ஒன்றிரண்டைச் சிவகாமி அடிக்கடி தூய்மைசெய்து உடுத்திக்கொண்டாள்! தன் மகனுக்கும் எப்போதும் உடையைத் தூய்மையாகவே அணிவித்தாள்.

புதிதாகக் குடிபுகுந்த சிறு வீட்டைச் சிவராமன் முதன் முதல் கண்டதும் திடுக்கிட்டான். தன் குடும்பம் இந்த நிலைக்கு வரவேண்டி நேர்ந்ததை எண்ணி வருந்தினான். ஆனால், அவ் வருத்தம் சில வினாடிகள்கூட நிலைக்கவில்லை. அடுத்து சிவகாமியிடமிருந்து ஒரு ரூபாய் பெற்றுக் கொண்டு உற்சாகத்தோடு அவ்விடத்தை விட்டு அகன்றான். அவனுடைய மனம் முழுமையும் இப்போது கல்லாகிவிட்டது. அவனுடைய தன்மைகளும் மிருகத்தன மாகி விட்டன. அவனுடைய நெஞ்சில்

சற்றும் ஈர மில்லை. அன்று விவசாயிகள் கூட்டத்தைத் தாக்கும்போது அவனுக்கு இருந்த கருணையை இப்போது அவனிடம் காணமுடியாது; இப்போது அத்தகைய கூட்டத்தைத் தாக்கும்படியாக அவனுக்குக்கட்டளையிட்டால், நூற்றுக் கணக்கான வர்களைச் சிறிதும் இரக்கமின்றிக் கொன்று குவிப்பான். சிவராமன் இழந்தது உள்ளம் மட்டுமன்று. அவனுடைய உடலும் சீர் குலைந்து வந்தது. அவனுடைய அழகான தோற்றம் மறையலாயிற்று. அவன் வாயினின்றும் அடிக்கடி இரத்தம் வெளிவந்தது. அவன் உடலுக்குள் ஈரல் குலைந்துவிட்டது; இடுப்பில் அடிக்கடி தாங்க முடியாத வலி ஏற்பட்டது. இரு முறை அவன் பெற்ற சாட்டை யடியின் விளைவு அது. அவனுடைய அளவு மீறிய குடியினால் அவன் நிலை இன்னும் மோசமாகிவிட்டது.

செங்கல்பட்டில் நடந்த வழக்கிற்குப் பிறகு சிவகாமி தன் தந்தையைச் சந்திக்கவில்லை; அவரைப் பற்றிய செய்தி ஒன்றும் அவளுக்கு எட்டவில்லை. சிவராமன் வீதியில் அவரைத் தற்செயலாகச் சந்திக்கவுமில்லை. சந்தித் திருந்தால் நிச்சயம் அவன் சிவகாமியிடம் சொல்லி யிருப்பான். அவரைப் பற்றி அறிய சிவகாமி ஆவல்கொண்டாள். அவரும் தீராக் குடியராகி விட்டாரோ என்பது அவள் அச்சம். தன்னுடைய அளவற்ற துன்பங்களுக் கிடையேயும், தன் தந்தையை அவள் மறக்கவில்லை. ஒரு நாள் சில பொருள்கள் வாங்குதற்கு அவள் கடைக்குச் சென்றாள். அங்கு இரண்டு பேர் அவளுடைய தந்தையைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தனர்; அவள் யார் என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் பேச்சிலிருந்து தன் தந்தை பூந்தமல்லிக்கு அருகே உள்ள ஒரு சிற்றூரில் மிகவும் நலமாக வாழ்க்கை நடத்துகிறார் என்றும், அவருக்குக் கிடைத்த மானநஷ்ட ஈடுத் தொகையால் அவர் வாழ்க்கை உயர்ந்துவிட்ட தென்றும், ஆனால் எந்நேரமும் அவர் குடித்தபடியாக இருப்பதாகவும் அவள் அறிந்தாள்; பின்பு துன்பம் நிறைந்த உள்ளத்தோடு வீட்டிற்குத் திரும்பினாள். அவள் தந்தை இப்போது வளத்தோடு வாழ்கிறார்; தன் மகளுக்கு உதவி செய்வாரா? சிறு உதவி அவளுக்கு எவ்வளவு பெரிதாக இருக்கும்? ஆனால் சிவகாமி அவரிடமிருந்து வேண்டுவது பொருளுதவி அல்ல; ஆறுதல் மொழி. அவள் தன் தந்தைக்குக் கடிதம் எழுதினாள். ஆனால் அக்கடிதத்திற்குப் பதில் இல்லை; இது அவளுக்கு மற்றொரு இடி.

பொங்கல் விழா நெருங்கிற்று; அதற்கு முன்னாள் தன் கணவன் பொங்கலன்று தன்னுடன் இருப்பாரோ என்று ஐயுற்றாள்; பொங்கலுக்காகச் சிறிதுதொகை சேமித்து வைத்திருந்தாள். இத்தொகையைச் சேமிப்பதற்கு அவள் உழைத்த உழைப்பு சொல்ல முடியாது. பொங்கலன்று தன் கணவன் தன்னுடன் சேர்ந்து உண்பாரானால் அது தனக்கும் தன் மகனுக்கும் எவ்வளவோ மகிழ்ச்சியைத் தரும் என்று அவள் கருதினாள். கடும் கோடையிலே குளிர்தரும் நிழலாக அது அவளுக்கு இன்பமூட்டும். அன்று மாலை ஆறுமணிவரை தன் கணவன் வருகையை அவள் எதிர்பார்த் திருந்தாள்; அவன் வந்ததும் அடுத்த நாள் தன்னோடு உணவருந்த அவனிசைவு வேண்டவே அவன் வருகையை ஆவலோடு எதிர்பார்த் திருந்தாள்; ஆனால் ஆறுமணிவரை அவன் வரவில்லை. எனவே அடுத்த நாளுக்கு வேண்டிய பொருள்கள் வாங்க அவள் கடைவீதிக்குப் புறப்பட்டாள்; புறப்படும் போது தன் கணவன் வரும் காலடியின் சப்தம் அவள் செவியில் விழுந்தது; சிவராமன் அறைக்குள் நுழைந்தான்; அவன் குடித்திருந்தான். நுழைந்ததும் அவன் சிவகாமியை நோக்கி, ''சிவகாமி, பணம் இருக்கிறதா?'' என்றான். சிவகாமி அவனிடம் பொய்யே சொன்ன தில்லை. இப்போதும் அவனிடம் பொய்சொல்ல அவள் விரும்பவில்லை; எனவே அவள் தன்னிடம் ஐந்து ரூபாய் உள்ளதென்றும் அதைக்

கொண்டு நாளைப பொங்கல் விழாவிற்கு வேண்டிய பொருள்கள் வாங்கத் தான் கடைவீதிக்குப் புறப்படுவதாகவும் கூறினுள். அதைக் கேட்டதும் அவன் மிக்க அன்போடு சிவகாமியுடன் பேசலானுன்.

'சிவகாமி! இருள் நெருங்கிவிட்டது. இந்த நேரத்தில் நீ தனியாகக் கடைவீதிக்குப் போவது நல்ல தல்ல. நாளை உன்னுடன் உணவருந்த நான் வருவேன். நானே கடைவீதிக்குப் போய் நாளைக்குத் தேவையான பொருள்களை வாங்கி வருகிறேன்'' என்ருன்.

சிவகாமிக்கு அவனுடைய பேச்சில் நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனுல் அதை அவள் சற்றும் வெளிக்காடட வில்லை; தன்னிடமிருந்த தொகையை அவனிடம் கொடுத்தாள். அதை அவன் வாங்கிக் கொண்டு அரைமணி நேரத்திற்குள் திரும்புவதாகச் சொல்லி அகன்ருன். அரைமணி நேரம் கழிந்தது. அவன் வரவில்லை. மற்ருெரு அரைமணி நேரம்!...... இன்னுெரு அரைமணி நேரம்! சிவராமன் திரும்பவே இல்லை. சிவகாமிக்கு உண்மை புலப்பட்டது, அவன் திரும்பும் எண்ணத்தோடு தன்னிடமிருந்து பணத்தை வாங்கவில்லை என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். அவன் பெற்றுச் சென்ற பணம் முழுதும் அவன் குடிக்குச் செலவாகும். ஆனுல் அவன் மனைவியும் குழந்தையும் வீட்டில் பட்டினி! அவளிடம் ஒரு காசுகூட இல்லை. அடகு வைத்துப் பணம் பெறுதற்கு அவளிடம் ஆடை எதுவும் இல்லை. சர்க்கரை, பால் முதலியனவும் வீட்டில் சிறிதும் இல்லை. காலையில் செய்த அப்பம் இரண்டு மூன்று இருந்தன; அவளுக்கு அவை போதும், ஆனுல் தன் மகனுக்கு? அடுத்த நாள் சிறந்த விருந்தை எதிர்பார்த்திருந்த தன் அருமை மகனுக்கு? ....ஐயோ! அக்குழந்தைக்கு எவ்வளவு ஏமாற்றம்! இவ்வளவு கடுமையாக நடந்துகொள்ள தன் கணவனுக்கு எப்படி மனம் வந்தது என்பது அவளுக்குப் புரியவில்லை.

சிவகாமி வீட்டில் பொங்கல் இங்ஙனம் கழிந்தது! சிவராமன் வரவே யில்லை. அவன் நாவுக்குச் சுவையாக வீட்டில் தின்னவோ குடிக்கவோ ஒன்றும் இருக்காது என்பது அவனுக்குத் தெரியும். சிவகாமிக்கும் முருகனுக்கும் உணவு அப்பம்மட்டும்தான். சிவகாமி உண்ட அப்பம் முழுவதும் அவளுடைய கண்ணீரால் நனைக்கப்பட் டிருந்தது.

ஒரு வாரம் கழிந்தது. தன் மனைவி முன்னிலையில் வரச் சிவராமனுக்குத் துணிவில்லை. சிவகாமியும் படைநிலையத்திற்குச் சென்று அவனைக் காண அஞ்சினுள். இதற்குமுன் இரண்டுமூன்று முறை அவனைப் பார்க்கப் படைநிலையத்திற்கு அவள் சென்றபோது, அவளை அவன் கடிந்துரைத்தான். இனி எக் காரணத்தைக் கொண்டும் அவள் அங்கு வரக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தான். ஏழு நாட்களாகியும் அவன் வராமையால் சிவகாமிக்கு அச்சம் ஏற்பட்டது. எப்படியும் படைநிலையத்திற்குச் சென்று அவனைக் காண்பதென்று முடிவுசெய்தாள். இங்ஙனம் அவள் முடிவுசெய்து சில விஞடிகள் கூட ஆகவில்லை. அதற்குள் சிவராமன் அங்கு வந்தான். வந்தவுடன் தான் பொங்கலன்று வராததற்குக் காரணங் கூறினுன். அது வெறுங் கற்பனை. கடைவீதியில் அவன் சட்டைப் பைக்குள் ளிருந்து பணத்தை யாரோ திருடிக்கொண்டார்கள் என்றும், ஆகையினுல் வீட்டிற்கு வர தான் விரும்பவில்லை என்றுங் கூறினுன். சிவகாமி ஒன்றும் பேசவில்லை. தான் கூறியதை அவள் நம்பவில்லை என்பதைச் சிவராமன் உணர்ந்துகொண்டான். அவனுக்கு அடங்காக் கோபம் எழுந்தது; வாயில் வந்தவாறு பேசினுன். சிவகாமி அனைத்தையும் பொறுத்துக் கொண்டாள். ஒரு சொல்கூட அவள் எதிர்த்துப் பேசவில்லை; அதற்குப் பதிலாக அவனை அமைதியாக இருக்கும்படி கெஞ்சினுள். தான் அமைதியாக இருக்கவேண்டுமென்று அவள் விரும்பினுல், தனக்கு அவள் ஓர்

உதவி செய்யவேண்டும் என்றான்; அதாவது கடைக்காரனிடமிருந்து முன் பணத்தை வாங்கித் தரும்படிக் கூறினான். ஆனால் சிவகாமி மறுத்தாள். சிவராமன் ஓங்கி அவள் முகத்தில் அடித்தான். அவள் உணர்ச்சி யிழந்து தரைமீது விழுந்தாள்.

சிறிது நேரங் கழித்து அவள் உணர்ச்சி பெற்றாள். தன் அருமை மகன் தன்மீது விழுந்து, ஓவென்று அழுதுகொண்டு இருந்ததை அவள் உணர்ந்தாள்; பலவாறு கூறி அவனைத் தேற்ற முயன்றாள். ஒருவாறு அவனுடைய துக்கம் தணிந்ததும் அவன் தன் தாயை நோக்கி ''அப்பா அவற்றை யெல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டார்'' என்றான்.

சிவகாமிக்குப் புரியவில்லை;''எவற்றை?'' என்று கேட்டாள்.

''நீங்கள் தைத்துக்கொண்டிருந்த துணிகளை, அம்மா'' என்று பதிலுரைத்தான் மகன்.

''ஐயோ!'' என்று திடுக்கிட்டாள் சிவகாமி; அவளைக் கருநாகம் தீண்டியது போன்ற உணர்ச்சி பெற்றாள்; இனித் தான் அடியோடு அழியவேண்டியதுதான் என்று நினைத்தாள்; தன் மகனைப் பக்கத்து வீட்டார் பொறுப்பில் வைத்துவிட்டுக் கடைக்கு ஓடினாள். அவள் சந்தேகித்த படியே நடந்திருப்பதை அவள் அறிந்தாள். தான் அரைகுறையாகத் தைத்திருந்த ஆடைகளைச் சிவராமன் கடைக்காரனிடம் திருப்பிக் கொடுத்துவிட்டுத் தன் கையெழுத்தை அவனே யாரும் அறியாமல் இட்டு முன் பணத்தைப் பெற்றுக்கொண்டான் என்பதைச் சிவகாமி உணர்ந்தாள். அவள் அடைந்த வருத்தம், ஐயோ, எவ்வளவு! கல்லும் உருகும்! தனக்கு மீண்டும் வேலை தரும்படி அவள் கடைக்காரனைக் கெஞ்சினாள். ஆனால் அக் கடைக்காரன் நெஞ்சில் ஈரமில்லை. அவனுக்காகச் சிவகாமி எவ்வளவு காலம் உழைத்தாள்! அந் நன்றி கூட அப்படுபாவி கடைக்காரனுக் கில்லை. முன் பணம் இல்லாமல் வேலைதர முடியாதென்று கூறி மறுத்து விட்டான் அவன். அவன் மறுப்புக்கு மற்றொரு காரணமும் உண்டு. இதற்கு முன் பலமுறை சிவராமன் முன்பணத்தைத் தரும்படியாக அக் கடைக்காரனை மிரட்டியிருந்தான். அவனைக் கண்டாலே கடைக்காரனுக்கு அச்சம்.

பாவம், சிவகாமி மனமுடைந்து வீடு திரும்பினாள். அவள் மூளை குழம்பியது. வறுமைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த அவள் மூழ்கி அழியாதபடி அவளுக்குச் சிறு பற்றுக் கோடாக இருந்த அம் முன் பணம், அவளிடமிருந்து பறிக்கப்பட்டது. ஐயோ, அவள் மகன்! அருமைச் செல்வன்! இறைவனே—கருணை நிறைந்த இறைவனே! அவர்கள் இருவர் கதி என்னவது?

(தொடரும்)

நீர் வியாதிக்கு ஓர் அருமருந்து

நம் நாட்டின் சகோதர சகோதரியருள் சிலர் பல காரணங்களினுல் நீர் வியாதியால் பீடிக்கப்பட்டு, நாளுக்கு நாள் தம் மேனி குலேந்து வருவதைக் கண்டு கலங்குகிருர்கள். நாட்டு வைத்திய முறையிலோ, ஆலோபதி, ஹோமியோபதி முறையிலோ இவ் வியாதியைப் பூரணமாய் நீக்கிக்கொள்ள முடிகிறதில்லே. 'இன்சுலேன்' மருந்தை ஊசிமூலம் உடம்பில் செலுத்துவதனுல், சில நாட்களுக்கு மட்டும் சர்க்கரைச் சத்தைக் குறைத்துக்கொள்ள முடிகிறதே ஒழிய, நிரந்தரமான நிவர்த்தி இல்லே. 'இன்சுலேன்' மருந்தும் நீடித்து உபயோகிப்பதால்,உடலுக்குப பழக்கமாகி, அதுவும் இறுதியில் தக்க வேலே செய்வது இல்லே. இந்த நிலே ஏற்படும்போது நடுக்கடலில் கப்பல் உடைந்தாற்போல் நீரிழிவு வியாதியஸ்தர்கள் சஞ்சலப்படவேண்டி இருக்கிறது.

இனி நீர் வியாதியஸ்தர்கள் சஞ்சலப்படவேண்டியதில்லே. சிறு குருஞ்சான் என்ற மூலிகை, நீர் வியாதியை முழுதும் நீக்கி விடுகிறது. இம் மூலிகை, மலேப்பிரதேசங்களில் வளரும் ஒரு கொடி இனத்தைச் சேர்ந்தது. இதற்குச் ''சர்க்கரைக் கொல்லி''என மற்ருெரு பெயரும் உண்டு. இம் மூலிகை இலே ஒன்று இரண்டை மென்றுதின்றபின், வாய் நிறைய சர்க்கரை கொட்டினுலும், சர்க்கரை இனிப்புத் தட்டுவ தில்லே. சிறு கசப்பே இருக்கும். இம் மூலிகையை (சிறு குருஞ்சானே) ஒரு மண்டலம் தொடர்ந்து சாப்பிட்டால்,நீர் வியாதி அறவே மறைந்து போகிறது. பின் அரிசிச் சாதம், பழ வகைகளும் கூடச் சாப்பிடலாம்.

இவ் அருமருந்தை நீர் வியாதியால் அவதிப்பட்ட நான் உபயோகித்து அதன் சிறப்பை உணர்ந்த பின், இவ் அற்புதமான மூலிகை நீர்வியாதியால் தத்தளித்து நிற்கும் நண்பர்கள் பலருக்கு உபயோகமாக வேண்டும் என்ற எண்ணத்தால் 17-10-'54, 31-10-'54-லில் மதுரையில் பிரசுரமாகும் ''தமிழ் நாடு'' பத்திரிகையில் ''நீர் வியாதிக்கு ஓர் அருமருந்து'' என்று எழுதினேன். பத்திரிகை ஆசிரியர் அக் கட்டுரையை முகப்பு வரி கொடுத்துப் பிரசுரித்ததனுல் மதுரை, திருநெல்வேலி, இராமனுதபுரம் ஜில்லாவிலுள்ள நீர்வியாதியஸ்தர்களில் சுமார் முந்நூறு பேர் மேற்படி மூலிகையை அனுப்பும்படிக் கேட்டிருந்தார்கள். எல்லோருக்கும் இலவசமாய் அனுப்பப்பட்டது. இந்த விளம்பரத்தைப் பார்த்து ஷ சிறு குருஞ்சான் மூலிகையை மதுரை மருத்துவர் திரு. யு. பாக்கியநாதன், எம். ஐ. எச். அவர்களும் பல நீர் வியாதியஸ்தர்களுக்குக் கொடுத்து, அதன் சிறப்பை அறிந்து, 'தமிழ்நாடு' பத்திரிகையில் எழுதியிருக்கிருர். நூற்றுக் கணக்கான நீர் வியாதி மக்கள் சிறு குருஞ்சானுல் அற்புதமாக நிவர்த்தி பெற்றதாக எழுதி வருவதனுல், இம் மூலிகை இன்னும் பல பேர் அறியவும், அதனுல் சிகிச்சை பெற்று இன்புறவும், நாட்டிலுள்ள பல தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு எழுதலானேன். நீர் வியாதியால் தொல்லேப்படுகிறவர்கள் நிர்ப்பயமாகச் சிறு குருஞ்சானே உண்டு தம் வியாதியைப் போக்கிக் கொள்ளலாம்.

ர் வியாதியால் வதங்கி வாடிவரும் வியாதியஸ்தர் தம் முகவரி எழுதிய கவரும், தபால் செலவுக்காக நான்கு அணு 'ஸ்டாம்பும்' (stamps) அனுப்பி வைத்தால் இலவசமாக இம் மூலிகையை அனுப்பி வைக்கிறேன். அத்துடன் அதைச் சாப்பிடும் முறை, பத்திய முறையும் அனுப்பப்படும்.

இதைப் படிக்க நேரும் அன்பர்கள் இம் மூலிகையின் சிறப்பைப்பற்றி நோயுற்றிருக்கும் தங்கள் நண்பர்களுக்குச் சொல்லி, அவர்கள் நீர் வியாதியை நீக்கிக்கொள்ள உதவி செய்வீர்களாக.

வை. நடேசன்,
''லிங்க விலா''
சேரி ரோடு,
சேலம்.

(ஆங்கிலத்தில் எழுதவும்)

உள்ளத்தின் உண்மை

திரு. T.E. சண்முகம். M.A., M.Litt.

குறிப்பு:- மனிதன் குறைபாடுகள் பல. நன்கு ஆராய்ந்தால் இக் குறைகள் பலவற்றிற்கு உள்ளமே காரணமாக அமைந்திருக்கின்றது என்பது புலனாகும். உள்ளத்தைப்பற்றிய கேள்விகளுக்கு உள நூல் ஆசிரியர் திரு. தா. ஏ. சண்முகம் அவர்கள் இப்பகுதியில் தக்க விடையளிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். அன்பர்கள் கேள்விகளை எழுதி உள்ளத்தின் உண்மையை உணரலாம்.

*கேள்விகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும். கேள்விகளை எழுதி அனுப்புவோர் பெயர்கள் வெளியிடப் பெறா. எனினும் கேள்விகளோடு அவர்களுடைய பெயரையும், முழு முகவரியையும் குறித்து "**ஆசிரியர், கலைக்கதிர், பூனைமேடு, கோயமுத்தூர்** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்."*

—○—

நாம் மிகவும் அன்பு கொண்டிருப்பவரிடம் வெறுப்பும் சில சமயங்களில் ஏற்படுவது ஏன்?

"மிகவும் அன்பு கொண்டிருப்பவரிடம் வெறுப்பும் ஏற்படுவது சாதாரணமாக யாவரிடமும் காணப்படும் ஓர் உணர்ச்சியாகும். இந்த உணர்ச்சி முதன் முதலாகக் குழவிக் குழந்தைப் பருவங்களில் எல்லோரிடத்திலும் ஏற்படுகிறது. இதை விவரிக்க முதன் முதலாக அன்பும் வெறுப்பும் (கோபமும்) குழந்தை யிடத்தில் எவ்வாறு ஏற்படுகின்றன என்று குறிப்போம். குழந்தை பிறந்தவுடன் அதனிடத்துச் சில விடாய்கள் பொருந்தியுள்ளன. இருப்பவைகள் சில விடாய்கள் ஆகும். அவையாவன: பசி, தாகம் முதலியன. இந்த விடாய்களைப் பூர்த்தி யடையச்செய்து குழந்தை வாழவும், வளரவும் தாயும், பிற்காலத்தில் தந்தையும் மிகவும் உதவியாக இருக்கிறார்கள். குழந்தையினது விடாய்கள் பூர்த்தி அடைந்ததும் அதனிடத்து ஓர் இன்ப உணர்ச்சி ஏற்படுகிறது. அந்த உணர்ச்சியை அளித்தவரான தாய் தந்தையரை நாடும் உணர்ச்சியும் அதன்கண் ஏற்படுகிறது. அதையே நாம் அன்பு என்கிறோம். இதன் காரணமாகத்தான் குழவிகளும் குழந்தைகளும் தாயிடுத்தும் தந்தை யிடுத்தும் மிகவும் பற்றுடன் இருக்கிறார்கள். நாளடைவில் குழந்தை வளர வளர, உடல் உரம் பெறுகிறது. குழந்தை ஓடி ஆடித் திரிய ஆரம்பிக்கிறது. 'தவறு' என்று தாய் தந்தையர்கள் கருதுவன எல்லாம் குழந்தைக்குத் தவறாகத் தெரிவது இல்லை. அதன் காரணமாகப் பலமுறை குழந்தைகளின் இயற்கை நடத்தைத் தடைபடுமானால் குழந்தை உள்ளத்தில் சினம் பொங்கி எழுகிறது. தாய் தந்தையர் குழந்தைக்குப் பல ஆதரவு அளிப்பதோடு, 'இதைச் செய்யாதே அதைச் செய்யாதே' என்று திட்டமிட்டு அவைகளைக் கட்டுப்படுத்தியும் சில சமயம் தண்டித்தும் அவர்களைச் 'சிறந்த' வழியில் வளர்க்க முயல்வதனால் குழந்தை உள்ளத்தில் (அன்புக் கொண்டிருக்கும்) தாய் தந்தையர் மேல் கோபமும் வெறுப்பும் ஏற்படுகின்றன. இந்த நிலை ஒருவன் வாழ்க்கையில் தொடர்ந்து வருகிறது. ஒரு பையன் தன் நண்பர்களுடன் மாலை சினிமா செல்ல திட்டமிட்டு இருப்பான். தந்தை

அலுவலகத்திினின்று வந்ததும், தன் பையனைக் கூப்பிட்டு, ஏதோ ஒரு முக்கிய மான வேலையைச் செய்யும்படிக் கட்டளை யிடுவார்; பையன் எவ்வளவு வேண்டியும் மறுப்பார். இதன் காரணமாக அவனுக்கு அச் சமயத்தில் கோபமும் வெறுப்பும் அவன் தந்தையின் மேல் ஏற்படுகிறது. ஆனால் அவனுக்குத் தன் தந்தையின்மேல் அன்பு இல்லை என்று கூறமுடியுமா? அவ னது நண்பன் ஒருவன் அவனது தந்தை யைக் குறைகூறிப் பார்க்கட்டும். அவன் எப்படிப் பொங்கி எழுகிறான் என்பது தெரியும்.

இந்த விருப்பு வெறுப்பு உணர்ச்சிகள் ஒருவனிடத்து நாளடைவில் இயற்கை யாகவே அமைந்தவைபோல இயங்க ஆரம் பிக்கின்றன. அதன் காரணமாக தான் நேசிக்கும் ஒருவரிடத்துச் சில சமயங் களில் தம்மையும் அறியாது, வெறுப்பு ஏற்படுவதும் உண்டு.

மேற் கூறியவை பொதுப்படையான காரணமாகும். சிலரிடம் இது போன்ற விருப்பு வெறுப்பு நிலை குறிப்பிட்ட ஒருவர் மேல் ஏற்படுவதற்குத் தனிப்பட்ட கார ணங்கள் இருக்கலாம். அதை அவரது உள்ளத்தைப் பாகுபடுத்தியோ அல்லது அதற்கேற்ற சோதனைகளைக் கொண்டோ தான் கூற இயலும்.

உடலில் நோய் உண்டானல் மனதி லிருந்து மறந்துபோன எண்ணங்க ளெல்லாம் கொழுந்துவிட்டு எழத் தொடங்கக் காரண மென்ன?

உடலும் மனதும் இரண்டு தனிப்பட்ட பொருள்கள் அல்ல என முன்பே குறித் துள்ளோம். நாணயத்தை எடுத்துக்கொள் வோம். அதற்கு இரண்டு பக்கங்கள் இருக் கின்றன அல்லவா? அவ்வாறே உடலும் மனமும் மனிதனின் இரு பாகங்களாகும். உடலில் கோளாறு ஏற்பட்டால் மனதை வேதனையில் ஆழ்த்துகிறது. அவ்வாறே மனதிற்கு கோளாறு ஏற்பட்டால் உடலை பாதிக்கிறது. ஆகவே உடலில் நோய் ஏற்பட்டால் மனது வலிவுடன் இருப்ப தில்லை. அதன் காரணமாக மனது வலி வுடன் இயங்குவதில்லை.

மறதி என்றால் நமது மனதிலிருந்து நமது பழைய அனுபவங்கள் எல்லாம் வெளியே போய்விடுவது அல்ல; அவை மனதின் பல்வேறு பகுதிகளில் ஆழ்ந்திருக் கின்றன. இதுபற்றி 'மறதி' என்ற தலைப் பில் எழுதிய கட்டுரையில் விளக்கியுள் ளேன். அப்படி ஆழ்ந்திருக்கும் அனுப வங்கள், சில சமயத்தில் நினைவுக்கு வரு வதும் உண்டு. அந்த அனுபவங்களில் பல பகற்கனவு, கனவு முதலியவைகளின் வழியாக மாறுபட்ட முறையில் வருவதும் இயற்கை. பகற்கனவு மனிதனது உட லும் மனதும் சிறந்து வேலை செய்யாத போது ஏற்படுகிறது. கனவு, ஒருவன் தூங்கும் போது அதாவது உடலும் உள்ள மும் நன்றாக இயங்காதபோது ஏற்படு கிறது. அவ்வாறே உடல் நோய்ப்பட்டால் உடல் நன்றாக இயங்குவது இல்லை; மன தும் சம நிலையில் இருப்பது இல்லை. அத னால் ஆழ்ந்திருக்கும் அனுபவங்களும், எண்ணங்களும் வெளிப்படத் தொடங்கு கின்றன. ஒருவன் நோய் வாய்ப்பட்டால் கனவுகளும் மிகுதியாக ஏற்படுவதினின் றும் அறியலாம்.

அவர் காட்டிய வழியில்.....

'குரு'

1855-ம் ஆண்டு ஏப்ரலில் தமிழ் இனத்தின் தவப்பயனுய்ப் பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளையவர்கள் தோன்றினுர். தாம் தோன்றியபோது இருந்த நிலையைவிட ஒரு மேலான நிலைக்குச் சமுதாயத்தைக் கொண்டு செலுத்தி மறைகின்றவரே பெரியார் என்று போற்றத் தக்கவர். இந்த வகையில் பேராசிரியர் சுந்தரனுர் தமிழினத்தைத் தமது வாழ்க்கைப் பணியால் மேனிலையுடையதாக்கினுர். எனவே, அவருடைய நூற்றுண்டு விழா வரும் இத்திங்களைக் கலைக்கதிர் பெரு மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்றது.

தமிழில் நாடக நூல்கள் இல்லையென்ற குறையைத் தமது ஒப்பற்ற நூலாகிய மனேன்மணீயத்தால் போக்கிய பெரியார் நம் பேராசிரியர். மனேன்மணீயம் சுந்தரம் பிள்ளை என்றே அவரைப் பெரும்பாலோர் நினைவு கூர்கின்றனர். மனேன்மணீயத்தால் அவர் செய்த பணி பெரிது; மிகப் பெரிது. நாடகம், இலக்கியம், தத்துவம், சமயம் எனப் பல துறைகளுக்கும் மனேன்மணீயம் சிறந்த காணிக்கையாகப் பொலிகின்றது. ஆனுல், அவர் செய்த மற்றெரு திருப்பணி பெரும்பாலோர் நினைவில் எழுவதில்லை.

தமிழ்த் தாய் வணக்கமே தெய்வ வணக்கமாகப் பாடியவர் என்பதற்காகவும், சமயக் கருத்துக்கள் ஊடுருவி நிற்குமாறு காவிய நெறி அமைத்த நாடகாசிரியர் என்பதற்காகவும், மற்றும் பற்பல காரணங்களுக்காகவும் இன்று அவரைப் பலர் போற்றுகின்றனர். நூற்றெகை விளக்கம் என்ற பெயரில் ஒரு நூல் எழுதினுர் என்பது எவருடைய நினைவிலும் எழுவதில்லை.

நம்முடைய நாடு பல காலமாக விஞ்ஞானத்தைப் புறக்கணித்து, அந்தத் துறையில் வளர்ச்சி அடையாமல் கிடக்கிறது என்பதை உணர்ந்தார்; தமிழில் விஞ்ஞான அறிவு பெருகுவதற்குத் தம்மால் இயன்ற பணி புரியவேண்டும் என விரும்பினுர். அந்த விருப்பத்தின் விளைவே நூற்றெகை விளக்கம் என்ற அந்த நூல். அந்த நூலின் பொதுவியற் பகுதி மட்டுமே வெளிவந்தது; பிற பகுதிகள் வெளியிடப் பெறும் என்று குறித்திருக்கிருர்; ஆனுல் வெளிவரவில்லை.

தமிழில் விஞ்ஞான அறிவுப் பெருக்கத்துக்குரிய வழிவகைகளைக் காணவேண்டும் என 1888-ம் ஆண்டிலேயே தமிழர்களுக்கு அறிவுறுத்தினுர் பேராசிரியர் சுந்தரனுர். அவர் காட்டிய வழியிலே வெற்றி நடையிட்டுப் போகும் பெருமை சுமார் அறுபது ஆண்டுகட்குப் பின்னர்க் கலைக்கதிர்க்கு வாய்த்திருக்கிறது.

அவர் காட்டிய வழியே நம் வழி.

நூல் அரங்கு

(மதிப்புரைக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும்)

பிரயாணம் ஒரு கலை: ஆசிரியர்: ''சோமலெ''—வெளியிட்டோர்: மலர் நிலையம், 133 பிராட்வே, சென்னை—விலை ரூ. 2/-

உண்மையில் இந் நூல் ஒரு சிறந்த கலை நூலாக விளங்குகிறது. இதுவரை பிரயாணம் செய்தறியாதவர்கள் இந் நூலினின்றும் பல உண்மைகளை அறியலாம். கல்கத்தா, ஜாம்ஷெட்பூர், பரோடா, ''காலி'' திருக்குற்ருலம், ஒரிசா முதலிய ஊர்களுக்குத் தாம் பிரயாணம் செய்தபோது நுகர்ந்த அனுபவங்களை இந் நூலாசிரியர் சுவைபட எழுதியுள்ளார்.

''கல்கத்தாவைப் பாதி கிழக்கும் பாதி மேற்கும் சேர்ந்த ஒரு கதம்பம் என்று சொல்லலாம். லண்டன் நகரில் இடையில் ஒரு சில இடங்களில் இந்தியாவிலுள்ள அசுத்தமான கிராமங்களைப் பதித்து வைத்து, தேம்ஸ் ஆற்றின் நீரை அப்புறப் படுத்திவிட்டு, சாக்கடைத் தண்ணீரை நிரப்பினுல் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள், அதுதான் கல்கத்தா.'' இங்ஙனம் இந் நூலாசிரியர் கல்கத்தாவை நமக்குக் காட்டுகிருர்.

''ஜாம்ஷெட்பூரில் இருப்பவை 4 தியேட்டர்கள், 7,000 சொந்தக் கார்கள், 700 வாடகைக் கார்கள், தொழிற்சாலைக்குச் சொந்தமான ஒரு விமான நிலையம், பாம்புகள். ''இல்லாதவை—திருட்டுப் பயம், அசுத்தம்'' இவை ஜாம்ஷெட்பூரில் 'சோமலெ'' கண்டவை.

''மனைவியைவிட இளமையாகவும் அழகாகவும் உள்ள பெண்களை வீட்டுவேலை செய்ய அமர்த்திக்கொள்வது 'காலி'யின் நாகரிகம்'' என்கிருர் அவர்.

''பூரி, நமது திருச்செந்தூரைப் போலக் கடற்கரையில் அமைந்திருக்கிறது. திருச்செந்தூரில் இல்லாத இரண்டு சிறப்புக்கள் பூரிக்கு உண்டு. ஒன்று, பாம்புகள். மற்ருென்று, யானைக்கால்.

''தமிழகத்துக் கோவில்கள் பொன் முட்டையிடும் வாத்துப்போல, அரசியலாருக்கு வருவாய் தருகின்றன; ஆனுல், பூரியிலுள்ள கோவில் ஒரிசா அரசியலாரின் கருவூலத்தைக் கரைக்கும் திருப்பணியை ஆண்டுதோறும் செய்து வருகிறது.'' ஒரிசாவைப் பற்றி ஆசிரியர் கூறும் கருத்துக்கள் இவை.

இங்ஙனம் இந் நூலாசிரியர் பல ஊர்களிலும் நாடுகளிலும் கண்ட உண்மைகளை மிக்க சுவையோடு தீந்தமிழில் தீட்டியுள்ளார்; மேலும் அயல் நாடுகளில் 'பஸ்'கள் இயங்கும் முறைகளையும், அந்தந்த நாட்டு மாணவர்கள் பண்புகளையும், விமானத்தில் விமான மங்கை புரியும் பணிகளையும் மிகத் திறம்பட விளக்கியுள்ளார்.

இந் நூலைப் படிப்போர் பிரயாணம் செய்ய ஆவல்கொள்ளுவர் என்பது திண்ணம்.

மாலைப் பாக்கள்: ஆசிரியர்: திரு. யம். பி. மாஸ்கரேனஸ் – வெளியிட்டோர் கஸ்தூரி பதிப்பகம், உறையூர், திருச்சி- பக்கம்: 88 – விலை ஒரு ரூபாய்.

எழுத்துணர்ச்சி பெற்றவர்களெல்லாம் ''கவிதை'' என்று பெயரிட்டு எழுதத் தொடங்கிவிட்ட காலம் இது. இத்தகைய காலக் கொடுமையிடையே தமிழ் நூல்களை முறையாகப் பயின்றவர்களின் கடு நடைப் பாடல்கள் தோன்றி கடுமையைக் கொடுமையாக்குவதும் உண்டு. இந் நிலையில் புலவர் மாஸ்கரேனஸ் அவர்களின் பாடல் தொகுதி மனத்துக்கு மகிழ்ச்சி யூட்டுகின்றது. பாவின் ஓட்டம் தட்டுத் தடங்கலின்றிச் செம்பாகமான நடையுடன் அமைந்துள்ளது. பக்திச்சுவை, அவலச் சுவை முதலாகப் பல சுவைகளமைந்த பலதுறைப் பாடல்கள் இம்மாலையில் தொடுக்கப்பட்டுள்ளன. பொதுவாக எல்லோரும் படிக்கலாமாயினும், கிறித்தவர்கள் மிக விரும்பிப் படிப்பதற்குரியது இச் சிறு கவிதை நூல். இந்நூலைப் படித்து முடித்தபின் நம் மனத்தில் நிலவுவது இதன் எளிய நடைதான்.

* * *

புதுமைப் பித்தன் கவிதைகள்:

தொகுத்தவர்: திரு. ரகுநாதன் வெளியிட்டோர்: ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை – பக்கம்: 103, விலை 2 ரூபாய்.

சிறுகதைத் துறையிலே ஈடும் எடுப்பும் இல்லாத முறையிலே சிறப்புப் பெற்ற புதுமைப் பித்தனின் 18 கவிதைகளும் 12 உதிரிக் கவிதைத் துணுக்குகளும் இந்நூலிலே இடம்பெற்றுள்ளன. இவற்றைத் தொகுத்த திரு. ரகுநாதன் முப்பது பக்கங்களுக்கு மேல் அழகான முன்னுரை ஒன்று எழுதியிருக்கிறார். புதுமை எழுத்தாளர்கள் புதுமைப்பித்தனின் கவிதைகளை எங்கே வசன கவிதைகள் என்று சொல்லிவிடுவார்களோ என்ற கவலையும், இலக்கணம் எங்கே இவை மரபு பிறழ்ந்தவை என்று புறக்கணித்துவிடுமோ என்ற பயமும் தொகுப்பாசிரியரை நீண்ட முன்னுரை எழுதத் தூண்டியுள்ளன என்று கருதுகின்றோம். நீளமான முன்னுரையாக இருந்தாலும் அறிவின் கூர்மையும் ஆராய்ச்சித் திறமும் நடையின் அழகும் முன்னுரைக்குத் தனிச் சிறப்புத் தருகின்றன.

நிசந்தானோ சொப்பனமோ, ஓடாதீர், உருக்கமுள்ள வித்தகரே, மாகாவியம் போன்ற கவிதைகள் மிக நன்றாக அமைந்துள்ளன. கற்பனையாகிய கவிதையின் உயிர்ப்பு எல்லாக் கவிகளிலும் உள்ளன; எனினும் அந்த உயிர்க் களை மாகாவியத்தில் இணையற்றுப் பொலிகின்றது. நையாண்டி, வசை, ஆத்திரம் ஆகியவற்றின் பின்னணியில் எழுந்த கவிதைகளில் எவருக்குமே சற்றுக் காரமான சொற்கள் பிறப்பது இயற்கை; பல்வேறு சுவைகளின் சங்கமங்களைச் சொல்லிலே வடித்துக் கொடுத்துயர்ந்த தென்பாண்டிக் கலைஞர்க்கு அத்தகைய சூழ்நிலைகளில் ஆழமும் நுட்பமும் வேகமும் வேக்காடும் பீறிட்டு வரும் சொற்கள் அமையக் கேட்பானேன்! நல்ல விருந்து இந்தத் தொகுப்பு. ''கொட்டாவி விட்டதெல்லாம் கூறுதமிழ்ப் பாட்டாச்சே'' என்ற இலக்கணத்துக்கு இலக்கியமாக உள்ள சில பகுதிகளும் கவிதை என்ற பெயரில் இதில் இடம்பெறாமலில்லை; தொகுப்பாசிரியர் அவற்றை விடுத்திருக்கலாம்.

* * *

கம்பன் கலை: 1 நாடும் மன்னனும்:

ஆசிரியர்: பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தம், M. A., — கிடைக்கும் இடம்: பாரிநிலையம், பிராட்வே, சென்னை– பக்கம்: 117 விலை ரூ. 1–8–0

பேராசிரியர் ஞானசம்பந்தரைத் தமிழகம் நன்கு அறியும். தமிழிலக்கியங்கள் பற்றி அவர் ஆற்றிவரும் சொற்பொழிவு

களும் வரைந்துவரும் கட்டுரைகளும் தமிழர்கள் யாவருக்கும் நல்விருந்துகள். மேலே நாட்டு இலக்கியத் திறனாய்வு முறையினைத் தமிழ் மரபுக்கு இயையப் பொருத்தி, காய்தல் உவத்தலின்றி நிறையும் குறையும் நிரல்பட அமைத்துக் காட்டும் அவர்தம் புலமைநலம் தமிழுலகின் நற்பேறென்றே கொள்ளுதல்வேண்டும். கம்ப ராமாயணம் அதனைப் போற்றுவாராலும் தூற்றுவாராலும் நன்றாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ள இக்காலத்தில், அப்பெருநூல் பற்றிக் கம்பன் கலை என்ற பொதுத் தலைப்பில் பல நூல்கள் எழுத முனைந்துள்ளார் பேராசிரிர். அவற்றுள் முதல் நூலே ''நாடும் மன்னனும்''.

லட்சிய நாடு எது, சிறந்த மன்னன் எத்தகையவன்—இவ்வினுக்களுக்குக் கம்பர் தம் நூலில் சில குறிப்புகள் தந்திருக்கிறார். கம்பர் கண்ட கனவு-நாடு எப்படி இலக்கியத்தில் கோசல நாடாகக் காட்சியளிக்கின்றது என்பதை ஆசிரியர் தக்க எடுத்துக் காட்டுகளால் நிறுவுகின்றார். மன்னன் இயல்பு பற்றியும் அதே போன்ற விளக்கங்கள் இந்நூலில் காணப்படுகின்றன. இவ்வளவுதான் என்றால், இதை எழுதப் பேராசிரியர் ஞானசம்பந்தனார் தேவையில்லை; சாதாரணப் பட்டதாரியே போதும். இந்நூலின் சிறப்பு என்ன? கம்ப ராமாயணம் என்பது ஒரு முழுக் கோபுரம் போன்றது; நாடு, மன்னன், அரசியர்...........என்று பிரித்தெடுத்துப் பார்க்கக் கூடியவையெல்லாம் கோபுரத்தின் பல்வேறு சிறு பகுதிகள். இராமாயணம் போன்ற பெரு நூல்களை இருவகையாக நோக்கி ஆராய்தல் வேண்டும். முழு நூலாகப் பார்க்கும்போது சிறு பிரிவுகளை மறந்தாலும் பரவாயில்லை; ஆனால், சிறு சிறு பிரிவுகளைத் தனித் தனியே கண்டு சுவைக்கும்போது முழு நூலுக்கும் உரிய ஒழுங்குக்கு முரணோ இழுக்கோ ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பேராசிரியரின் நூல் வரிசை சிறு பகுதிகளின் தனித் தனி ஆராய்ச்சியை மேற்கொண்டு எழுகின்றது. ஆனால், கம்ப ராமாயணம் முழுவதையும் ஒரு நெடும்போக்கில் பார்க்கக் கூடிய பார்வைக்கு முரண்பட்டுவிடாத வகையில் ஆசிரியர் கட்டுரைகளை அமைத்துள்ளார்.

கம்ப ராமாயணப் பாத்திரங்களைப் பற்றிய பண்பியல் ஆய்வு (Characterisation) இந்நூலின் மிகச் சிறப்பான வெற்றி எனக் குறிப்பிடவேண்டும். இந்த முதல் நூலில் தசரதனுடைய குறை நிறைகளை எடைப்போட்டு ஆராயுங்கால் பேராசிரியரின் புலமை புலப்படுகின்றது; வாதத் திறமை வகையாகக் கைகொடுத்து நூலைப் படிப்பவர்க்குப் பெருவிருந்தாயுள்ளது. இந்நூலின் கடைசி இரண்டு அதிகாரங்கள் ஈடெடுப்பற்ற சுவைக் களஞ்சியங்களாக உள்ளன.

சீரிய பணியில் ஈடுபட்டுள்ள பேராசிரியர்க்குத் தமிழர்கள் பெரிதும் கடமைப்பட்டவர்கள்.

* * *

தென்னாட்டுச் சிங்கம் (நாடகம்):

ஆசிரியர்: சிலம்பின் செல்வன்—கிடைக்கும் இடம்: சக்தி காரியாலயம், கோவை. பக்கம்: 107, விலை ரு. 1–8–0

பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து வெள்ளை ஆதிக்கத்துக்கு முதல் எதிர்ப்புக் குரல் கொடுத்த வீரபாண்டியக் கட்ட பொம்மனைப்பற்றி எழுந்த நாடக நூல் இது. சிலம்பின் செல்வன் என்ற (புனை?) பெயருக்கு ஏற்ப நாடகப் பண்புகள் நன்கு கைவரப் பெற்றுள்ளார் இதன் ஆசிரியர். தமிழர்களிடையே ஒற்றுமையின்மை எவ்வளவு பேரவலங்களை ஏற்படுத்தி வந்துள்ளது என்பதை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ள இந்த நாடகம் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்ற ஒன்று. எதுகை மோனைகளின் இயைபுற்று ஒலிநயம் சிறக்க உரை

யாடல்கள் அமைந்துள்ளன. எனினும் எதுவும் அளவுக்கு மீறினல் சுவை குறையுமன்றே? அசல் வெள்ளையரும்கூட எதுகை மோனை இடருத உயர்தனிச் செம்மொழியில் பேசுவதாகக் காட்டுவது பொருத்தமாக நமக்குப் படவில்லை. இந்நூலில் எதுகைமோனை இல்லாத வாக்கியங்கள் மிகக் குறைவு. தகுந்த பாடல்களும் இடையிடையே காணப்படுகின்றன.

* * *

The Coimbatore City Guide & Directory-1954.

ஆக்கியவர்: திரு. R. ராமலிங்கம், B.A., விலை ரூ. 2–8–0. பக்கங்கள்: 138. கிடைக்குமிடம்: The Popular Hindusthan Publications, 16, Old Post Office Road, Coimbatore.

உள்ளூர் வாசிகளே தெரிந்துவைத்துக் கொள்ளவேண்டிய விஷயங்கள் பல உள்ளன. கோவை நகர் தோன்றிய வரலாறு, தொழில், வாணிபத் துறைகளில் அதன் வளம், நகரைச் சார்ந்த இடங்களின் முக்கியத்துவம், சிறப்பான இடங்களின் சில படங்கள் இவற்றோடு நகரமைப்புப் படம், பஸ் மார்க்கங்களின் படம் இவையும் இதன்கண் காணப்படுகின்றன.

ஒரு சில பெரிய பிரமுகர்கள் 'நாடறிந்தவர்கள்' என்று விட்டுப்போயிருக்கவேண்டும்! வேறு சிலரை முன்னணிக்குக் கொண்டுவரும் எண்ணத்தோடுபோலும், அவர்களது பிரதாபமும், படங்களும் சற்று அதிகப்படியாகவே காணுகின்றன. கோவையின் புகழில் பெரும் பங்கு கொண்ட சிலபெரியோரைப்பற்றி - அவர்கள் மறைந்துவிட்ட போதிலும்—சில மொழிகளால் குறிப்பிடாதது பெருங் குறையாகும்.

கோவை நகரைப்பற்றித் தமிழில் நான் கண்ட காசுக்கு நல்ல படங்களுடன் புத்தகம் வெளியாயிற்று. மேனுடுகளில் இத்தகைய புத்தகங்கள் கவர்ச்சிகரமான முறையில் வெளியாக, இந்த விளம்பர வெளியீடு எந்தக் காரணத்தால் இரண்டரை ரூபாய் விலையோ விளங்கவில்லை.

* * *

குறளும் கீதையும்:

ஆசிரியர்: திரு. கா. குப்புசாமிக் கவுண்டர், மானுபட்டி, உடுமலைத் தாலூக்கா. கோவை ஜில்லா – விலை ரூ. 1–8–0

''தமிழின் உயிர், குறள்; சமஸ்கிருதத்தின் உயிர் கீதை. இரண்டும் வாழ்விற்கு நல்வழி காட்டும் நல்லாசான் போலும்.'' இங்ஙனம் இந்நூலின் மதிப்புரையில் திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள் குறித்துள்ளார். அவர் கூறியவை முற்றும் பொருந்தும். நம் நாட்டின் ஒப்பற்ற இரு பெரு நூல்கள் குறளும் கீதையுமே. மக்கள் வாழ்வைப் பண்படுத்தி உயர்த்தவல்லவை இவையிரண்டும்.

இவ்விரு நூல்களுள் பொதிந்துள்ள அருங் கருத்துக்களை ஒன்றேடொன்று ஒப்புமைப் படுத்திக் காட்டுகிருர் இந்நூலாசிரியர். குறளிலுள்ள பல கருத்துக்களே கீதையில் அமைந்துள்ளன என்பதை இந்நூலினைப் பயில்வார் நன்குணரலாம். சான்ருக,

> ''பயன்றூக்கார் செய்த உதவி நயன்றூக்கின்
> நன்மை கடலிற் பெரிது:

என்ற இக்குறளின் கருத்து கீழ்வரும் இரண்டு கீதை சுலோகங்களில் அமைந்துள்ள வகையை மிகத் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார் இந் நூலாசிரியர்.

> தஸ்மாதஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர
> அஸக்தோ ஹ்யாசரன் கர்ம பரமாப்னோதி பூருஷ:
> கர்மனைவ ஹி ஸம்ஸித்தி மாஸ்த்திதா ஜனகாதய;
> லோகஸங்க்ர ஹமேவாபி ஸம்பச்யன் கர்த்துமர்ஹஸி.

பொருள்: "நீ கர்மம் செய்வதற்கு உரியவனாக இருக்கின்றாய் ஆகையினாலே எப்பொழுதும் கர்ம பலனில் ஆசையை விட்டுச் செய்யவேண்டிய நித்திய கருமத்தைச் செவ்வையாகச் செய். ஏனெனில் பலனை விரும்பாமல் கருமம் செய்பவன் உத்தமமான உயர் நலத்தை எய்துகிறான். ஜனகன் முதலானோர்கள் கருமத்தாலேயே சித்தி பெற்றார்களன்றோ! மேலும் உலக மக்கள் நல்வழிப்படுதலை விரும்பியும், நீ நிட்காமிய கருமத்தைச் செய்வதற்கே உரியவனாகின்றான்."

இவ்வாறு 47 குறட்பாக்களின் கருத்துக்களை 70 கீதை சுலோகங்களில் பொருத்தி விளக்குகிறது இந்நூல். பயில்வார்க்கு இந்நூல் பெரும் பயன் அளிக்கவல்லது.

*   *   *

வழி பிறந்தது:

ஆசிரியர்: அகிலன். வெளியிட்டோர்: அன்புப் பண்ணை, சென்னை. விற்பனை உரிமை: பழனி பிரசுரம், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி. விலை ரூ. 2–0–0

தலைசிறந்த சிறுகதை ஆசிரியர்களுள் அகிலன் ஒருவர் என்பதைத் தமிழகம் நன்கு அறியும். இந்நூலில் அவர் ஆக்கிய சிறுகதைகள் பன்னிரண்டு அடங்கியுள்ளன. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு வகையில் உள்ளத்தை ஈர்க்கும் தன்மைத்தாய் உள்ளது:

"பூச்சாண்டி" என்னும் முதல் கதையின் தொடக்கம் தனி நடையில் அமைந்துள்ளது. இரயில் தண்டவாளங்களை இரு கருநாகப்பாம்புகளாகவும், இரயிலைக் கொள்ளிவாய்ப் பிசாசாகவும், இரயிலில் சிக்குண்டு இறக்கச் சித்தமாய் இருந்த மனிதனைப் பிசாசினும் பயங்கரமான உருவமாகவும் ஆசிரியர் உருவகித்திருப்பது படித்து இன்புறற்குரியது. 'முதல் தீபாவளி' என்னும் கதையில் உண்மைக் காதலின் தன்மை விளக்கப்பட்டுள்ளது. 'புயல்' என்னும் கதையில் சிறுவன் ராஜூவின் கருணை உள்ளம் நம் உள்ளத்தை உருக்குகிறது. பெற்றோர்கள் பொருளாசையின் விளைவாய் காதலர்கள் பட்டபாடு 'வழி பிறந்தது' என்ற கதையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு வகையில் நம் உள்ளத்தைத் தொடுகிறது. பொதுவாக இந்நூலிலுள்ள எல்லாக் கதைகளின் நடையும் அமைப்பும் போற்றற் குரியன.

—இ—

விஞ்ஞானம் எதற்கு?

"சமயங்கள், கலைகள், விஞ்ஞானப் பிரிவுகள் யாவும் ஒரே மரத்தின் பல்வேறு கிளைகளே. மனித வாழ்க்கை வெறும் உடலளவில்—உலகாயத நிலையில்—கிடையாக இருக்கின்றது; இந்த நிலையிலிருந்து மனித வாழ்க்கையைச் சால்புடையதாக உயர்த்தி, கட்டற்ற விடுதலை தரும் (வீட்டு) நெறிக்கு ஈர்த்துச் செல்வதற்காகவே மேற்குறித்த நிலையங்கள் ஏற்பட்டுள்ளன."

—ஐன்ஸ்டீன்.

இது செய்தி

பிப். 14: திருவிதாங்கூர் — கொச்சியில் திரு. பி. கோவிந்த மேனனைத் தலைமை அமைச்சராகக் கொண்டு, காங்கிரஸ் கட்சி அமைச்சர் குழுவை அமைத்தது.

பிப். 15: மக்கள் தொகை மிக்கிருந்தும் வாழ்க்கைத் தரம் குறைந்திருந்தும் இந்தியாவே மற்ற உலக நாடுகள் யாவற்றையும் விடக் குறைந்த அளவு குற்றங்கள் நடைபெறும் நாடு என்பது வெளியாயிற்று.

பிப். 16: உடல் உழைப்புக்கும், மூளை உழைப்புக்கும் இடையே காட்டப்படும் வேறுபாடுகள் நீங்க வேண்டும் என்று உயர்திரு வினோபா பாவே கூறினர்.

பிப். 17: ஏப்ரலில் பாண்டுங்கில் நடைபெற இருக்கும் ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டுக்கு வரச் சீன முதல் அமைச்சர் திரு. சௌ-என்-லாய் ஒப்புக்கொண்டார்.

பிப். 18: திருக்குறள் இந்தி, மராத்தி மொழிகளில் பெயர்த்தெழுதப்பட ஏற்பாடாகி இருப்பதாக மத்தியப் பிரதேசக் கவர்னர் திரு. பட்டாபி சீதாராமையா சென்னைத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்கு அனுப்பிய செய்தியில் தெரிவித்தார்.

பிப். 21: தமிழை ஆட்சி மொழியாக்கும் செய்தியில் விரைந்து செல்லக்கூடாது என்றும், அமைதியாகவே ஈடுபடவேண்டும் என்றும் திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் கூறினர்.

பிப். 22: ஏப்ரலில் பாண்டிங்கில் நடைபெறப்போகும் ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டில் தானும் கலந்துகொள்ளப் போவதாகத் தாய்லாந்து அறிவித்தது.

பிப். 24: தன் படைகளைச் சீர்திருத்தி நன்கு பயிற்சி அளிக்கப்போவதாக மக்கள் சீனத் தலைவர் திரு. மாசே துங் அறிவித்தார்.

பிப். 25: சீனக் கடலோரத் தீவுகளின் பாதுகாப்பு நடவடிக்கையில் பிரிட்டன் தலையிடாது எனத் திரு. சர்ச்சில் மக்கள் அவையில் அறிவித்தார்.

பிப். 26: பள்ளிகளில் ஆங்கிலத்தைப் படிப்பு மொழியாக்கச் சிலர் வீண் கனவு காண்கின்றனர் என்றும், தமிழே படிப்பு மொழியாக நிலைத்திருக்கும் என்றும் சென்னைக் கல்வி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அறிவித்தார்,

பிப். 27. ஆண்டு வருவாய் ரூ. 1200க்குக் குறைவாக உடையோர் குழந்தைகட்கு எட்டாம் வகுப்புவரை இலவசக் கல்வி அளிக்கச் சென்னை அரசு முடிவு செய்துள்ளது.

மார்ச் 1; இந்திய நடுவாட்சி வரவு செலவுத் திட்டப்படி, மணமாகாத ஒவ்வொருவரும் ஊதியத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை வரியாகக் கொடுக்க வேண்டும்.

மார்ச் 3; டாக்டர் பட்டம் பெற்ற திரு. ச. சோமசுந்தர பாரதியாருக்கு அண்ணாமலை நகரில் பாராட்டுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது; அவருக்கு இராசா சர். முத்தைய செட்டியார் பொன்னுடை போர்த்தினர்.

மார்ச் 4: உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், காந்தி அறநெறிப் பாடத்தைத் துவக்க இந்திய நடுவரசு முடிவு செய்துள்ளது.

மார்ச் 5: இந்தியாவின் தலை சிறந்த பொருளாதார அறிஞர் திரு. பி. வி. நாராயணசாமி நாயுடு அவர்கள் மறைந்தார்.

மார்ச் 7: இங்கிலாந்து அரசியின் தங்கை இளவரசி மார்கரெட், சமயத் தலைவர் இட்ட தடைகளைத் தவிடுபொடியாக்கித் தான் விரும்பிய காதலன் கேப்டன் டவுன்சென்ட் என்பவரையே மணக்க முடிவு செய்திருப்பதாகச் செய்தி வெளியாயிற்று.

ஆந்திரத் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி 180க்கு 134 இடங்களைப் பிடித்து வென்றது.

மார்ச் 12: பெனிசிலின் கண்டுபிடித்து உலகுக்கு அருளிய திரு. அலக்சாந்தர் ஃப்லெமிங் காலமானர்.

மார்ச் 13: சமூக, பொருள் நிலைப் புரட்சி தான் தற்போது நாட்டுக்குத் தேவை என திரு. நேரு நாகப்பூரில் அறிவித்தார்.

மார்ச் 15: துவக்கப் பள்ளி ஆசிரியர்க்கு ஓய்வூதியம் (பென்ஷன்) அளிக்கச் சென்னை அரசு முடிவு செய்தது.

காப்பக

தந்தி: "கெங்கா—கோயமுத்தூர்" டெலிபோன்: 616.

ஸ்ரீ கார்த்திகேயா ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் லிமிடெட்

தபால் பெட்டி நெ. 18,
சிங்காநல்லூர் போஸ்ட், கோயமுத்தூர்.

ரிங் கதிர்கள் : 17048
டபிளிங் : 760
கோனிங் : 120

ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்.

உயர்ந்த ரக 40, 60, 80, ஒற்றை, இரட்டை,
முறுக்கு நூல்கள் தயார் செய்கிறோம்.
40^s ஸ்டேப்பிள் நூல் கிடைக்கும்.

விபரங்களுக்கு:

G. ராமசாமி நாயுடு,
கவர்னிங் டைரக்டர்,
விலாசத்திற்கு எழுதவும்.

டெலிபோன்: நெ. 17. தந்தி: ''ரங்க விலாஸ்''

ஸ்ரீ ரங்க விலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங்

அண்டு

வீவிங் மில்ஸ் லிமிடெட்.

*

(ஸ்தாபிதம்: 1922-ல்)

ரிஜிஸ்தர் ஆபீஸ்: பூளைமேடு, கோயமுத்தூர்.

மூலதனம் ...	ரூ. 16,00,000
வெளியிடப்பட்டு வசூலான	ரூ. 15,02,500
வேலைசெய்யும் மொத்த கதிர்கள்:	30,000

20 நெ. முதல் 100 நெ. வரை ஜவுளி நூல் தினுசுகள்,
பனியன் வகையருக்களுக்கு உபயோகப்படும்
கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு
கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

21741
சென்னை-600 008

*

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,

பூளைமேடு, —::— கோயமுத்தூர்.

*

இந்திய மூலதனம், இந்தியக் கைத்தொழிலாகிய இந்த
சுதேசித் தொழிலை ஆதரியுங்கள்.

நல்ல விதைப் பருத்தி விதையும், மாட்டுத் தீவனத்திற்குப் பருத்தி விதையும், குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நியாயமான விலைகளில் சப்ளை செய்கிறோம்.

உரத்திற்கும், மாட்டு உணவிற்கும் ஏற்ற எக்ஸ்பெல்லர் கடலைப் புண்ணுக்கு சரசமான விலைக்கு விவசாயிகளுக்கும் தாராளமாயக் கொடுக்கப்படும்.

நவீன முறையில் தயார் செய்து சுத்தம் செய்யப்பட்ட திடமான கடலெண்ணெய் நம் தேசம் பூராவிற்கும் சப்ளை செய்வதுமல்லாமல், அயல் நாடுகளின் தேவைக்கும் கணிசமான முறையில் குறித்த காலத்தில் ஏற்றுமதி செய்கிறோம். இதர விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

உணவு தானியம், கரும்பு, பருத்தி ஆகியவைகளின் உற்பத்திப் பெருக்கத்திற்கு மிக அத்யாவசியமாய் வேண்டப்படும் உரமாகிய எக்ஸ்பெல்லர் நிலக்கடலைப் புண்ணுக்கு தயார் செய்கிறோம். கணிசமான அளவில் எல்லோருக்கும் சப்ளை செய்ய ஏற்பாடு செய்கிறோம்.



ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங் & ஆயில் மில்ஸ்

போன் நெ. 51 தந்தி "ஆயில்மில்ஸ்"

பாப்பநாய்க்கன்பாளையம்

தபால் பெட்டி நெ. 151 கோயமுத்தூர்

Regd. No. 5306. KALAI KATHIR April 19[illegible]

Telegrams: PIONEER Telephone: 160

THE

Coimbatore Pioneer Mills, Ltd.

*

PEELAMEDU — COIMBATORE — SOUTH INDIA.

*

SPINDLES 21,978

*

SPINNERS OF HIGH QUALITY
YARN - 40s to 100s.

*

MANAGING DIRECTOR:

G. R. GOVINDARAJULU NAIDU

Printed at Kalaikathir Achchagam, Avanashi Road, Pappanaickenpalayam, Coimbatore.